

கல்கி
KALKI
17-2-1963
30 காசு

சிறு வயதிலேயே புகட்டுங்கள்...
சிறந்த முறையில் புகட்டுங்கள்...
காலையில் முதல் வேலையாக ஒரு முறை
இறுதியாக இரவில் ஒரு முறை
வாய்கொப்பளிக்க

லிஸ்டரின்!

—வாழ்நாள் முழுதும்
அவர்களுக்குப் பாதுகாப்பு!



பழக்கம் படிவதற்கு வாகானது இளமைப் பருவம்! லிஸ்டரின் உபயோகிக்கும் ஆரோக்கிய நற் பழக்கத்தைப் புகட்டுவதற்கு இதைவிட வாய்ப்பான சமயமும் உண்டோ! அன்றாடம் அதிகாலை ஒரு தடவை, இரவு ஒரு தடவை லிஸ்டரின் கொண்டு வாய் கொப்பளித்தால் கிருமிகளினின்று நாள் முழுதும் காத்துக்கொள்ளலாம். பட்ட மாத்திரத்திலே கிருமிகளைக் கொன்று மூச்சிலே இனிமை தவழச் செய்வது லிஸ்டரின் ஆன்டிஸெப்டிக் (நச்சுமுறி மருந்து).

திடமுடன் முன்யோசனையைக் கைக்கொள்ளுங்கள்! தினம் இருமுறை லிஸ்டரின் உபயோகிக்கும் ஆரோக்கிய நற் பழக்கத்தை இப்போதே துவக்குங்கள்!

வாய்நிறைந்த சுகாதாரத் தூய்மைக்கு வழி: லிஸ்டரின்; இன்றும் என்றும் உங்கள் துணை!



வார்னர்-லாம்பர்ட் பார்மஸூட்டிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது).

WL 17029 TM


இப்பொழுது நடைபெறுகிறது!
சென்னை
காசினோ
மகாராணி
புவனேசுவரி
மற்றும்
தென்னகமெங்கும்
ஈ.வி.ஆர். பிக்சர்ஸ்
கொடுத்து வைத்தவள்
டைரக்ஷன்: ப.நீலகண்டன்
தயாரிப்பு: E.V.ராஜன்
பாடல்கள் கவிஞர் கண்ணதாசன் · அ.மருதகாசி
ஒளிப்பதிவு: ஜி.துரை
சங்கீதம்: K.V.மஹாதேவன்
ஸ்டூடியோ: மெஜஸ்டிக்
WORLD RIGHTS CONTROLLED BY
Sri B.MUTHUKOMARAPPA REDDIAR
SOLE PROPRITOR: MAJESTIC STUDIOS MADRAS

சுபகிருது, மாசி௴ 5உ.

கல்கி

பிப்ரவரி, 17உ. 1963

பொருளடக்கம்

அட்டைப்படம்: போர்முனை

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

புகைபிடிக்கும் இங்கிதம்

தீப் பொறியின் திக்குவிஜயம்!

சிகரெட்டைப் பற்றவைக்கையில்—அதுவும் வெளியிலோ அல்லது காற்றடிக்கையிலோ—எவர் மீதும் குறிவைப்பதுபோலத் தீக்குச்சியைக் கொளுத்தி வீசி எறிவது சரியல்ல. தவறிப் போய் தீப்பொறி தெறிக்குமேயானால் பாவம், அருகிலிருக்கும் பெண்மணியின் ஆடைக்கு வந்தது ஆபத்து.



உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனாமா



இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை

விசேஷிக் கவனம் செலுத்துவோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.,
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 611 TAM

Grecia' Advts.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 29

வரிகள் வருகின்றன!

"பிரத்தியட்ச நிலைமை, ஆட்சியில் உள்ளவர்களின் மனப்போக்கு இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், சீனாக்காரன் மறுபடியும் நம்மேல் பாய்ந்தால் ஒழிய இழந்துள்ள பகுதிகளை மீட்பதற்காக நாமாகப் போரை ஆரம்பிப்போம் என்று தோன்றவில்லை." — இவ்வாறு ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதுகிறார்.

பிரதம மந்திரி நேரு அவர்களும், அயல்நாட்டு இலாகா அதிகாரிகளும் நாளுக்கு ஒரு அறிக்கையாக வெளியிட்டு வீரதீரமாகப் பேசி வந்தாலும் யுத்தம் தொடக்கும் உத்தேசம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆயினும் யுத்தம் வந்து விட்டது எனப் பிரகடனப்படுத்திப் பிறப்பித்த உத்தரவுகளெல்லாம் அப்படியே இருந்துவரப் போகின்றன. உள்நாட்டு விவகாரங்களோடு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பி வேலைகள் நடத்துவது சர்வாதிகார அமைப்பின் பண்பு. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அந்நிய உதவியை உறுதிப்படுத்திக் கொள்ளாததால் உள்நாட்டிலேயே அதிக வரிகள் விதிக்கவேண்டி நேரிட்டுள்ளது. பாதுகாப்புச் செலவு பெருகுமளவுக்குத் திட்டச் செலவைக் குறைத்துக் கொள்ளவும் ஆட்சியாளருக்கு மனமில்லாதது நம் துர்ப்பாக்கியம். இந்த நிலையில் இனிமேல் நமக்கு ஏராளமான புது வரிச் சுமைகள் வந்து சேரும் என்பதைக் கூறத் தேவையில்லை.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றவும், பாதுகாப்பு வேலைகளை விரைவுபடுத்தவும் ஏராளமான வரிகள் வரப்போகின்றன. ராஜ்ய சர்க்கார் மந்திரிகளும் என்ன புது வரிகள் போடலாமெனத் தீவிரமாக யோசிக்கின்றனர். இன்று தேசத்தில் வரி கொடுக்கும் பகுதி என ஒரு தனிப்பகுதி இல்லை. தண்ணீர் எப்போதும் அடிமட்டத்தையே தேடும் என்பது விதி. இதேபோல நேர்முகமானவை - மறைமுகமானவை, மத்திய சர்க்காருடையவை - ராஜ்ய சர்க்காருடையவை என்றெல்லாம் பொருளாதாரப் பாகுபாடுகள் செய்தாலும், எல்லா வரிகளும் சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழை எளியவர்கள் மீதே இறுதியில் விழும். பொதுமக்கள் நேரடியாகக் கொடுக்காத வரிகளினால் பொருள்களின் அகவிலை ஏறுகிறது. அந்த அகவிலைக்கு ஏற்ப உற்பத்தியாளர்கள் அவற்றின் விற்பனை விலையை ஏற்றுவார்கள். எனவே வரி என்ற பெயரில் உற்பத்தியாளர் மீது விதிக்கப்பட்ட சுமை, இறுதியில் விலை உயர்வு என்ற பெயரில் பொதுமக்களின் தோளிலேயே வந்து விழும். அன்றாடம் கூலி பெற்று வாழ்கின்ற பாட்டாளிகளையும் வரிகள் பாதிக்கும். இவற்றை மேலும் பெருக்கினால் மக்களால் தாங்க முடியாது; உற்பத்தியும் குறைந்து போகும். கண்ணுக்குத் தெரிந்த வரிகளைவிடக் கண்ணுக்குப் புலப்படாத மறைமுக வரிகள்தான் இனி மும்முரமாக வேலை செய்யும். எதிர்காலத்தில் மக்கள் தைரியம் இழந்து திக்குத் தெரியாமல் அலைவார்கள்.


வரி விதிக்கின்ற மேலிடத்தாரும், அவர்களுக்கு ஆலோசனை கூறக் கூடியவர்களும் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தோன்றவில்லை. இனி விதிக்கக் கூடிய வரிகள் உற்பத்தி ஆர்வத்தைச் சிதைத்து மக்களின் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் குறைக்கும். தேசப் பாதுகாப்புக்கு ஆயுதங்களும், தளவாடங்களும் எந்த அளவுக்கு முக்கியமாக இருந்தாலும், மக்களின் மன உறுதியும், உற்சாகமும் அதைவிட முக்கியமானவை என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த உற்சாகமும், உறுதியும் வற்றிவிடுமானால் கடனாகவோ ரொக்கம் கொடுத்தோ வாங்கும் தளவாடங்களால் பயன் பெற முடியாது. அந்நியன் படையெடுப்பைப் போலவே வரிச்சுமையும் மக்களுக்கு ஆபத்து; ஏன், அரசாங்கத்துக்குமே பேராபத்து. இந்த ஆபத்தைப் புது நோக்கோடும், விவேகத்துடனும் சமாளிக்க முனைய வேண்டும்.


டி. டி. கே. கண்ட உண்மை

ராஜ்ய சர்க்கார்களிடையே போதுமான இணக்கம் இல்லை என்பதையும் சர்க்கார் ஏற்று நடத்தும் சில திட்டங்களில் குறைபாடுகள் இருப்பதையும் இணைப்பு மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார். நதி நீர்ப் பங்கீட்டில் அண்டை ராஜ்யங்கள் பின்பற்றும் பிடிவாத மனப்பான்மையைக் குறித்துப் பேசிய அவர், பொதுவாக எதிலுமே சுறுசுறுப்பாக வேலையை முடிக்கும் கலையைச் சர்க்கார் கற்றிருக்கவில்லை; இட்ட வேலையைவிட அதைப் பற்றி மந்திரிமார்கள் என்ன எண்ணுகிறார்களோ அதுவே பெரிய சாதனையாக விளம்பரப் படுத்தப் பெறுகிறது என்றெல்லாம் சில உண்மைகளைப் பகிரங்கப்படுத்தியிருக்கிறார். ஸ்ரீ டி. டி. கே. அவர்களுக்கு நம் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

டி.டி.கே. கண்டுபிடித்துச் சொன்ன குற்றம் குற்றம்தான் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் டி. டி. கே. ஏதோ எதிர்க் கட்சித் தலைவராக மாறி விட்டது போலப் பேசுவது ஏன்? மந்திரி சபையில் எடுத்துச் சொல்ல வேண்டிய விஷயத்தைப் பொது மேடையில் ஏன் அவர் அவிழ்த்துக் கொட்ட வேண்டும்? 'மந்திரி சபைக்குள் இணைப்பு மந்திரி அவர்கள் யோசனை தெரிவித்தும் மற்ற மந்திரிகள் நெகிழ்ந்து கொடுக்கவில்லையோ?' என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அல்லது நாம் யோசனை கூறினாலும் அதைச் சர்க்கார் ஏற்க மாட்டார்கள் என்று அவர் எண்ணுகிறாரா? பார்லிமெண்டில்தான் எதிர்க் கட்சிகள் கூறும் நல்ல யோசனைகளை ஏற்றுக் கொள்ளாமல், 'மெஜாரிட்டி' பலத்தால் கொள்கைகள் வகுக்கப் படுகின்றன. மந்திரி சபையிலும் கூடவா தங்கள் கட்சிக்காரர்கள் கூறும் யோசனையையே புறக்கணித்துக் காரியங்களைச் சாதிக்கவேண்டும்? காங்கிரஸ் மந்திரி சபை எப்படி எந்தப் புத்திமதிக்கும் வளைந்து கொடுக்காமல் ஆட்சி நடத்துகிறதென்பதற்கு இது ஓர் உதாரணம்.

ஊர் வம்பு PK





இதுவல்லவோ ஜனநாயகம்?

ஒரு நாட்டின் ராணுவத்தை அணு ஆயுதங்களால் பலப்படுத்த முற்படலாமா என்பது அபிப்பிராய பேதத்துக்கு உரிய விஷயம்தான். எனினும், கனடாவில் டைஃபன்பேக்கர் அவர்களுடைய மந்திரி சபை நாட்டுக்குச் சரியான பாதுகாப்புக் கொள்கையை அளிக்கவில்லை என்ற ஐயம் எழுந்ததால் நிகழ்ந்த விளைவுகளைக் கண்டு ஜனநாயகத்தில் பற்று உள்ள யாவரும் பெருமைப்படலாம். தேசம் முழுவதும் அதிருப்தி தெரிவிக்கும் வரை காத்திராமல் பாதுகாப்பு மந்திரி கண்ணியமாக ராஜிநாமா செய்தார். அதற்கும் மேலாக, அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அதை எதிர்க்கட்சிகள் நிறைவேற்றியும் விட்டன.

எனவே அங்கு மந்திரி சபையைக் கலைத்து விட்டு, மீண்டும் தேர்தல்கள் நடத்த முடிவாகியுள்ளது.

கனடாவில் ஜனநாயகம் எப்படிச் செயல்படுகிறது என்பதைக் கவனிக்கும் போது இந்தியாவில் அது எப்படிச் செயல்படவில்லை என்பதும் நம் நினைவுக்கு வருகிறது. ஆளும் கட்சி தவறாகச் செல்கிறது என்று கருதக்கூடிய எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனை அதிகாரத்திலிருந்து வெளியேற்றக் கூடிய பலம் எதிர்க் கட்சிகளுக்கு அங்கே இருக்கிறது. இந்தச் சம பலத்தால் யதேச்சாதிகாரத்துக்கு இடம் இல்லாமல் போகிறது. 'இன்றைய தலைமையை என்றும் மாற்ற முடியாது; நாட்டுக்கு இதுவே என்றென்றைக்கும் இன்றியமையாத தேவை' என்பது போன்ற உணர்ச்சிக் கோஷங்கள் கனடாவில் எழுப்பப்படவில்லை. இவ்வாறு ஓர் 'இன்றியமையாமை'யைக் கற்பித்துக் கொள்வதால்தான் தாங்கள் வெறுக்கும் காரியங்களை அரசாங்கம் செய்யும் போதுகூட மக்கள் தலைமையை மாற்றாமல் தவறுகளைச் சகித்துக் கொள்ள முயல்கிறார்கள். மக்களுக்கு வழிகாட்டியிட்டுச் செல்ல வேண்டிய நம் நாட்டின் தலைவர்கள் கனடாவின் உதாரணத்தைக் கண்ட பின்னரேனும் வலுவாய்ந்த எதிர்ப்பை உருவாக்குவதில் முனைய வேண்டும். இல்லாவிடில் இங்கு ஜனநாயகம் என்பது யதேச்சாதிகாரத்தின் மாறுவேஷமாகிவிடும்.



அறிவுக்கனலே, அருட்புனலே!

விசுவநாத தத்தரின் மனைவி புவனேசுவரி தேவிக்கு ராஜாவைப் போல ஓர் ஆண் குழந்தை பிறந்த அன்று ஊரெல்லாம் மகோத்சவம் கொண்டாடிற்று. நாடெல்லாம் கோலாகலமாகத் திருநாள் கொண்டாடிற்று.

இப்படி ஒரு குழந்தை பிறந்திருப்பது தெரியாமலே பாரத தேசம் முழுவதும் அன்று பண்டிகைக் கோலம் பூண்டது.

அன்று பொங்கல் திருநாள்.

ஆன்மிக வயலில் அருட்புனலைப் பாய்ச்சி, அறிவெனும் சூரிய ஒளியில் அநுபவப் பயிரை வளர்த்து, அமரத்துவத்தை அறுவடை செய்து உலகுக்கெல்லாம் வழங்க ஒரு குழந்தை பிறந்து விட்டது.

திருவளர் வாழ்க்கை, கீர்த்தி,
தீரம், நல்லறிவு, வீரம்,
மருவுபல் கலையின் சோதி,
வல்லமை என்ப வெல்லாம்
வருவது ஞானத்தாலே
வையக முழுதும் எங்கள்
பெருமைதான் நிலவி நிற்கப்
பிறந்தது ஞானபாநு

என்று பாரதியார் பாடிய அறிவுச் சூரியன் அன்று உதித்து விட்டான்!

மகர சங்க்ராந்தி தினமாகிய அன்று, வங்காளத்தில் கங்கா சாகரத்தில் தீபங்களை ஏற்றி நீர்ப் பெருக்கில் நீந்த விட்டனர் பல்லாயிரம் மக்கள். அருட்புனலில் நீந்தப் போகும் ஓர் அறிவுக் கனல் உதயமானதற்கே தங்களையும் அறியாமல் வழிபாடு நடத்தினர்.


1862-ம் ஆண்டு ஜனவரி பன்னிரண்டாம் தேதி சூரிய ஒளி பையப் பையப் பரவும் வேளையில், சாந்தமும் கம்பீரமும் கூடிய காலை நேரத்தில் புவனேசுவரி தேவி பிள்ளையைப் பெற்றெடுத்தாள். எவ்வளவோ காலம் தான் நோற்ற நோன்பு பலிதமாகிப் பிள்ளை வரம் கிட்டியதில் பேரானந்தத்தைப் பெற்றாள்.

வீட்டிலுள்ள எல்லோருமே ஆனந்தம் அடைந்தார்கள். நீதி மன்றமே நிதி மன்றமுமாகச் செல்வச் செழிப்பில் வாழ்ந்த வழக்கறிஞர் விசுவநாத தத்தருக்குப் புத்திரச் செல்வம் மட்டும் இல்லாதது அந்த இல்லத்தினர் யாவருக்குமே பெருங் குறையாக இருந்தது. இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயான புவனேசுவரிக்கு இன்று ஓர் ஆண் மகவு ஜனித்தபோது அந்தக் குறை தீர்ந்தது.

குழந்தையைப் பார்க்க எல்லோரும் சூழ்மி விட்டார்கள். ராஜ வம்சமான காயஸ்தர் குலத்தைச் சேர்ந்த குழந்தை ராஜா மாதிரியிருக்கக் கேட்பானேன்?

''அப்படியே தாத்தாவை உரித்து வைத்திருக்கிறது!'' என்று அந்த வீட்டுக் கிழப் பெண்டுகள் கூறினார்கள். ஏனோ, அப்படிச் சொல்லும்போது, அவர்கள் நெஞ்சில் ஒரு வேதனை சூழ்ந்து கொண்டது! காரணம், அந்தத் தாத்தாவாகிய துர்காசரணர் ஓர் ஆண்டியாகித் திரிந்ததுதான்!

துர்கா சரணருக்குச் சிறிய வயசிலிருந்தே ஆண்டியாகி ஆண்டவனை அண்டி வாழும் வாழ்க்கையில்தான் மனசு சென்றது. கல்கத்தா, கௌர் மோகன் முகர்ஜி தெருவில் இன்றும் தத்தர் குடியின் செல்வப் பெருமையை எடுத்துக் கூறும் பெரு மாளிகை, துர்கா சரணரைப் பொறுத்த மட்டில் சிறையாகத்தான் இருந்தது. துறவறத்திலேயே உள்ளம் பதித்த அவருக்குத் திருமணம் வேறு செய்து விட்டார்கள். மனைவிக்குத் தன் கடமையைச் செய்யவேண்டும் என்றுதானோ, அல்லது இந்தப் பரம்பரையில் மகான் ஒருவர் பிறக்க வேண்டும் என்பதால் தானோ ஓட்டினுள் ஒட்டா



ரா. கணபதி

மல் வாழும் விளாங் கனிபோல் உள்ளத்தில் பற்று என்பது ஒட்டாமல் தாம்பத்தியம் நடத்தினார் துர்கா சரணதத்தர். ஆண் பிள்ளை ஒன்றுக்குத் தந்தையுமானார். அதன் பின்பும் பட்சியால் கூண்டில் இருக்க முடியவில்லை. அது வெளியே கிளம்பி விட்டது. அப்போது துர்கா சரணருக்கு வயசு இருபத்தைந்து தான் இருக்கும்.

துர்கா சரணரின் கரம் பற்றியவள் நாதனின் ஆதரவை இழந்தவுடன் விசுவத்துக்கெல்லாம் நாதனாகிய காசி விசுவநாதனின் சரணங்களைப் பற்றிக் கொண்டாள். தன் பிள்ளைக்கு விசுவநாதன் என்று பெயர் சூட்டி, அவனைப் பார்த்துப் பார்த்துத் தன் ஆற்றாமையைத் துடைத்துக் கொண்டாள்.

துடைக்கத் துடைக்கத் துயரம் ஊறிக்கொண்டேதான் இருந்தது. அந்தக் காசி விசுவநாதனிடமே மகனுடன் சென்று தன் நிராதரவைச் சொல்லிவரவேணும், நிராசையான உள்ளத்தைக் கோரிப் பெற வேணும் என்று கிளம்பினாள் அப்பேதை.

சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த கதை இதுவெல்லாம். அந்த நாளில் இன்று போல ரயிலும், பஸ்ஸும் ஏது? கல்கத்தாவிலிருந்து காசி க்ஷேத்திரத்துக்குக் கங்கா மார்க்கமாகப் படகில்தான் பயணம் நடைபெற்றது. படகுப் பிரயாணம் மூன்று வயசுப் பாலகன் விசுவநாதனுக்குப் பரம உற்சாகமாக இருந்தது. அலைகளைப் போலவே அவனும் குதித்தெழுந்து கும்மாளி போட்டான். அலைகளைப் போலவே குதித்தவன், அந்த ஆனந்தத்தில் அலைகளிலேயே குதித்து விட்டான்.

அந்தக் கணமே, விசுவநாதனின் தாயும் பிரவாகத்தில் குதித்தாள். தனது உயிரை விடுவதற்காக அவள் கங்கையில் விழவில்லை. தன் மைந்தனின் உயிரைக் காப்பதற்காகவே விழுந்தாள். அம்முயற்சியில் தன் உயிரே போகுமானாலும் அதைப் பற்றி அவளுக்குக் கவலை இல்லை.

அவள் நீந்தத் தெரியாதவள். உடல் நிறையக் கனத்த ஆடைகள். நீர்ச் சுழல் அவளை எங்கோ கொண்டு போய்ச் சொருகிக் கொண்டிருந்தது. அந்த நிலையிலும் அவளுடைய கை எதற்கோ துழாவித் துழாவிக் களைத்தது. கடைசியில் அந்த அன்பு ஸ்பரிசமும் உறைத்தது. உயிருக்கு மன்றாடிய அவள் கையில் குழந்தை சிக்கிக்கொண்டது. அதனை ஆரத் தழுவிக் கொண்டாள். 'இனி தான் இறக்கக்கூடாது. எப்பாடு பட்டேனும் குழந்தையைப் படகில் சேர்த்து விட வேண்டும்' என்று மூச்சைக் கையில் பிடித்துக் கொண்டு பேரலைகளோடு போராடினாள்.

அப்போது காக்கும் கரம் ஒன்று அன்னை, குழந்தை இருவரையுமாக வாரிப் படகில் போட்டது.

கங்கைப் பெருக்கிலும் பெரிதான நன்றிப் பெருக்குடன் காசி நாதனை நினைந்து கண்ணீர் பெருக்கினாள் பேதை.

காசி என்றும் வாரணாசி என்றும் கூறப்படும் மகா க்ஷேத்திரம் வந்து விட்டது!

தாயும் சேயுமாகக் கங்கா ஸ்நானம் செய்தார்கள். விசுவேசுவரனைத் தரிசித்தார்கள். அந்த ஸ்தலத்திலுள்ள ஓர் ஆலயம் மீதமில்லாமல் சென்று வழிபட்டார்கள்.

ஆசைகள் யாவும் எரிந்து போன மயானம் காசி. ஆசைகள் என்பன ஆசைப்படுபவனை மையமாகக் கொண்டு அவனைச் சுற்றி எழுவன. அவை எரிந்த பின்தான் பிறருக்கு ஒருவன் அர்ப்பணமாகி, பிறரை மையமாக வைத்து வாழும் அன்பு தோன்றுகிறது. ஆசைகள் எரிந்த மயானத்தில் ஆனந்தத் தாண்டவமிடும் அந்த அன்பைத் தான் சிவம் என்கிறோம், பரமசிவம் என்று பரவுகிறோம். இளமையின் தலைவாசலிலேயே இக உலக இன்பத்தை இழந்த அந்தப் பெண்ணின் ஆசைத் தீயும் மகா மயானமான காசியில் தணிந்து வந்தது.

கங்கா தீர்த்தம், விசுவநாத மூர்த்தம் இவை தவிர அவளுக்கு வேறு நினைவில்லை.

அன்றும் வழக்கம் போல் கங்கையில் நீராடிவிட்டு ஆலயத்துக்குச் சென்று கொண்டிருந்தாள் அவள். உடல் களைப்பினாலோ, உள்ளக் களைப்பினாலோ அவளுக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. பட்டப் பகலில் நட்ட நடு வீதியில் அப்படியே மூர்ச்சித்து விழுந்து விட்டாள்.

கண் விழித்தபோது தான் ஆலயத்தின் படிகளில் கிடப்பதை உணர்ந்தாள் அவள்.

'தன்னை அங்கு கொண்டுவந்து சேர்த்தது யார்? இதோ தன்னை அருளுடன் நோக்கிக் கொண்டிருப்பது யார்? ஆகா, அவரா?

'விசுவநாதா! குழந்தையை இழக்கச் செய்வது போலக் காட்டி மீண்டும் கூட்டி வைத்தாயே! அதே போல நான் இழந்ததாக எண்ணிய அவரையும், கூட்டி வைக்கிறாயா? விசுவநாதா, காசி

"விசுவநாதா!" என்று அவனுடைய மனசு கூவிற்று.

துர்கா சரணரோ அது விசுவநாதனின் செயலல்ல, மாயையின் சோதனையே என்பது போல, ''மாயை, மாயை'' என்று இரண்டு முறை வாய் விட்டுக் கூறினார்.

மீண்டும் பரதேசியாகக் கிளம்பிவிட்டார் — அவன் பக்கமாகத் திரும்பிக் கூடப் பாராமல்.

அவனும் அமைதியாக ஆலயத்தை வலம் வரத் தொடங்கினான் — அவர் போன திசையைக் கூடப் பாராமல்.

இக இன்ப வாசலில் முன்பு அவனை மணந்து கொண்ட அவர்தான் பேரின்பமாகிய ஆலயத்தின் வாசலில் அவனைச் சேர்த்துவிட்டாரே!

கால் போனபடி சென்று கொண்டிருந்த துர்கா சரணர் தம்மையும் அறியாமல் கல்கத்தாவுக்கே வந்து சேர்ந்துவிட்டார். அதனை யறிந்த பின்னும் அவரது பந்து மித்திரர்கள் சும்மா இருப்பார்களா? அவரைப் பலவந்தப் படுத்தி அவருக்கு உரித்தான அந்தப் பெரிய மாளிகைக்கு இட்டு வந்து அடைத்து வைத்தார்கள். அன்ன ஆகாரம் எதுவும் ஏற்காமல் மூன்று நாட்களைக் கழித்தார் அவர். உறவினர் பயந்தனர். கண்காணுமலாவது உயிரோடிருந்தவரை வீட்டுக்கு அழைத்து வந்ததால் அவர் உயிரையே துறந்து விடுவாரோ என்று அஞ்சினர். அறைக் கதவைத் திறந்து விட்டனர்.

நீரில் கையால் அழுத்தி வைத்த பந்து கையை எடுத்ததும் 'ஜிவ்'வென்று மேல் வந்து மிதக்கிறதல்லவா? துறவிகளும் சம்சார ஓட்டத்தில் ஓரிடத்தில் நில்லாமல், முற்றும் அதனில் ஆழ்ந்து விடாமல், பந்து போல் மிதந்து கொண்டேதான் இருப்பார்கள். உலக வாழ்க்கை எனும் ஆறு தன்னுடைய தனி உருவை இழந்து சங்கமமாகும் பரம்பொருள் என்னும் கடலை அடையும்போது அந்தப் பந்து அதில் கரைந்தே போய்விடும். அழுத்தி வைத்த பந்து பீறிக்கொண்டு கிளம்புவது போலவே துர்கா சரணதத்தரும் கிளம்பி விட்டார்.

அதன் பின்பு அவரைப் பற்றி யாரும் எதுவும் கேள்விப்படவில்லை.

அந்தத் துறவியின் சாயலாகத்தான் இன்று அவரது பேரக் குழந்தை பிறந்திருந்தது.

பாட்டனின் பேரை இடுவதால்தான் 'பேரன்' என்ற உறவுப் பெயரே ஏற்பட்டிருக்கிறது என்று தமிழகத்தில் சொல்கிறார்கள். பாட்டனின் பேரை இடும் வழக்கம் வங்காளத்திலும் உண்டு. எனினும் துர்கா சரணர் சந்நியாசியாகப் போனதாலோ என்னவோ, விசுவநாத தத்தரின் மகனுக்கு அப்படி நாமகரணம் செய்யும் யோசனை கைவிடப்பட்டது. 'பெயரில் என்ன இருக்கிறது? ரோஜாவை எப்பெயர் இட்டு அழைத்தாலும் அது அதே அழகுப் பொருளாகத் தானே இருக்கும்?' என்ற கவியின் கருத்தை நாம் எவ்வளவோ முறை படித்திருக்கிறோம். புவனேசுவரியின் பிள்ளைக்கு துர்கா சரணர் என்று பெயரிடாததால் என்ன குறைந்து விட்டது? அந்தப் பெயரின் பொருளேதான் அவன் வாழ்க்கையாயிற்று. துர்கை என்னும் 'அம்பிகையின் சரணங்களில் அர்ப்பணமாகவே தான் ஒவ்வோர் இந்தியனும் பிறக்கிறானே அன்றி இந்திரிய இன்பத்துக்காக அல்ல' என்று இந்தக் குழந்தைதான் முழங்கப் போகிறது. அதன் பாட்டன் துறவியான நினைவு சுற்றத்தாருக்கு அச்சானியமாக இருந்தாலும் இந்தக் குழந்தை துறவிகளுக்குள் பெரும் துறவியாகத்தான் பரிணமிக்கப் போகிறது. 'இந்து மதம்தான் உண்மையான மதம். ஏனெனில் அதுதான் துறவறத்தைப் போதிக்கிறது' என்று தியாகத்தின் பெருமையைப் பறையறையப் போகிறது.

குழந்தைக்கு வீரேசுவரன் எனப் பெயரிட வேண்டுமென விரும்பினாள் புவனேசுவரி தேவி. வீரேசுவரன் என்பது வாரணாசி விசுவேசுவரனின் மாற்று நாமமேயாகும். தன் பதியின் பெயர் விசுவநாதன் என்பதால் குழந்தைக்கு வீரேசுவரன் என்ற பெயரைச் சூட்டினாள் புவனேசுவரிதேவி. துர்கா சரணதத்தரின் மனைவி போலவே அவளது மருமகளாகிய புவனேசுவரிக்கும் காசிநாதனிடம் தனிப்பட்டதோர் ஈடுபாடு. நீண்ட நாட்களாக ஆண் சந்ததி வாய்க்கப் பெறாத புவனேசுவரி, காசியில் வாழ்ந்த அத்தைக் கிழவி ஒருத்தி மூலம் ஈசனுக்குப் பிரார்த்தனை செலுத்தி நோன்பிருந்துதான் இந்தப் பிள்ளையைப் பெற்றாள்.

விசுவேசுவரன் அவளது வேண்டுகோளுக்குச் செவி சாய்த்த அந்தச் சம்பவத்தை என்னென்று சொல்வது?

பூஜா கிருகத்திலேயே உடலும், விசுவநாதன் சந்நிதியிலேயே உள்ளமுமாக ஒரு நாள் பகல் பொழுது முழுவதையும் செலவிட்டாள் புவனேசுவரி. அவளுக்குப் பார்க்குமிடங்களெல்லாம்

இன்ப மயமாகத் தெரிந்தன. அவளுடைய சித்த முழுதும் சிவமாகத் தித்தித்தது. மதுவால் மயங்குவது போல், இந்த மதுரத்தின் அழுத்தத்திலேயே துயில் கொண்டாள் அவள்.

அது துயில்தானா?

அவள் கண்ட காட்சி கனவுதானா?

தபஸ்வியாகக் காட்சி தரும் அந்தத் தயாநிதி கனவுதானா?

அவனைவிட நனவு வேறெதுவுண்டு? அவனுடைய கனவல்லவா இந்த உலகமெல்லாம்?

ஆனால் அவனோ அப்போது கனவும் காணாத யோக நிலையில் ஆழ்ந்து போயிருந்தான்.

அவனை மெய் விதிர் விதிர்க்கப் பார்த்துக் கொண்டே இருந்தாள் புவனேசுவரி.

மெல்ல மெல்லக் காட்சி மறைந்தது.

தயாநிதியாகிய தபஸ்வி மறைந்தான்.

அங்கு ஒரு சிசு தோன்றியது. புவனேசுவரியைப் பார்த்தவுடன் தனது பொக்கை வாயைத் திறந்து கொண்டு சிரித்தது.

'அது தன்னுடைய குழந்தை; தான் அதை எடுத்து அருமை செய்ய வேண்டும்' என்று புவனேசுவரியின் உள்ளம் அவளை உந்தித் தள்ளியது.

குழந்தையை வாரி எடுக்கப் பாய்ந்த புவனேசுவரி வாரிதி ஒன்றில் சிக்கிக் கொண்டாள்.

'இதென்ன ஒளி வெள்ளம்? இது ஏன் தன்னைச் சுற்றிச் சுற்றி இப்படி அலைமோதி அடிக்கிறது? இதுவும்கூடவா கனவு? நன்றாக விழித்துக் கொண்டிருக்கும்போதே அந்த ஒளி வெள்ளம் தன்னுள் ஊறிவிட்டது தெரிகிறதே!' புவனேசுவரி வியந்தாள்.

அறிவு ஒளிதான் அருள் வெள்ளமாகி அவளுள் பாய்ந்ததா?

அது எதுவானாலும் புவனேசுவரிக்குத் தன் பிள்ளை வரம் பூர்த்தியாகிவிட்டது என்று புரிந்தது.

இந்த வரலாற்றில் இது போல அநேக நிகழ்ச்சிகள் வரும். இவற்றைப் பகுத்தறிவால் விளக்க முடியாது. அதனால்தான் ராமகிருஷ்ணர், விவேகாநந்தர் இருவரது சரிதங்களையும் கூறும் சில ஆசிரியர்கள் இந்த நிகழ்ச்சிகளை மன்னிப்புக் கோரும் மனப்பான்மையுடன் சொல்கிறார்கள். இந்த அற்புத சம்பவங்களை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றும், இந்த நிகழ்ச்சிகள் இல்லாவிடினும் ராமகிருஷ்ணர், விவேகாநந்தர் இவர்களது



சாதனைகளுக்கு ஏதும் குறைவு நேர்ந்துவிடாது என்றும் கூறியிருக்கிறார்கள்.

இவ்விரு மகான்கள் அவதார புருஷர்களாயினும் சரி, அப்படி இல்லாவிடினும் சரி, அதனால் அவர்கள் ஆற்றிய மகத்தான சாதனைக்கு எவ்வித பங்கமும் இல்லை என்பதை நாமும் ஒப்புக் கொள்ள

லாம். அற்புதங்கள் நிகழ்ந்திராவிடினும், அவர்களது மகிமைக்கு ஊறு நேர்ந்து விடாது என்றும் ஒப்புக் கொள்ளலாம்.

ஆனால்....


ஆண்டவன் தானே அவதரிக்கிறான் என்பதையோ, தனது தூதர்களை அனுப்பி வைக்கிறான் என்பதையோ ஏன் நம்பாமலிருக்க வேண்டும் என்றும்தான் எண்ணிப் பார்ப்போமே!

அற்புதங்கள் நிகழக் கூடாது என்று நம்மால் விதி செய்ய முடியாது; அல்லது அவை நிகழ முடியாது என்று நாம் நிரூபிக்க முடியாது என்பதையும்தான் நினைத்துப் பார்ப்போமே!

'உலகுக்கு மூலகாரணமாகிய பொருள் எதுவோ, அதற்கு இந்த உலகத்திடம் கருணை உள்ளது; இந்தப் பரந்த பிரபஞ்சத்தையும் அதிலுள்ள எண்ணற்ற உருக்களையும் தோற்றுவித்த அந்தப் பொருள், அவற்றை நன்னெறிப் படுத்துவதற்காகத் தானும் ஓர் உருவில் தோன்றுகிறது, அல்லது தனது தூதர்களாகச் சிலரை அனுப்பி வைக்கிறது' என்ற கருத்தில் ஏன் அவநம்பிக்கை கொள்ள வேண்டும்?

' 'எல்லாமே பரம்பொருள்' என்பது தானே வேதாந்தம்? அப்படியிருக்கக் கடவுள் சில உருவங்களில் மட்டும் அவதாரம் நிகழ்த்துகிறார் என்பதில் பொருள் இல்லையே' என்று சிலர் கருதுகிறார்கள்.

'எல்லாமே பரம் பொருள்' என்பது உண்மையானாலும் அந்த ஞானம் சித்திக்காத ஜீவர்கள் நாம். ஞானம் சித்திக்காதபடியால் நாம் கர்மங்களில் கட்டுண்டு, வினைக் கேற்பப் பிறந்து பிறந்து அழிகிறோம். இப்படிக் கர்ம வினை காரணமாகப் பிறப்பு எடுக்கும் சாதாரண ஜீவர்கள்போலன்றி, அந்த ஜீவர்கள் உய்வதற்காக வென்று கருணை காரணமாக — கர்மம் காரணமாக அல்ல — ஆண்டவனே அவ்வப்போது




தோன்றுகிறான், அல்லது சில சக்திகளைப் பிறப்பிக்கிறான் என்பதுதான் அவதாரக் கொள்கை. இந்தக் கொள்கையை நம்ப ஏன் தயங்க வேண்டும்?

'அற்புதமாவது, நடக்கவாவது ?' என்று கூறுவதிலும் பொருளில்லை. அற்புதம் என்றால் நாம் காண்பதெல்லாமே — நாமும் கூட — அற்புதம்தான்.

கண்ணால் காண இயலாத அணுவில் அடங்கியுள்ள அபரிமிதமான சக்தி எத்தனை அற்புதமானது? நாம் வாழும் உலகம் ஆயிரமாயிரம் மைல் வேகத்தில் தன்னைத் தானே சுற்றிக் கொள்வதும், ஆயிரமாயிரம் மைல்வேகத்தில் சூரியனையும் சுற்றுவதும் எத்தகைய அற்புதம்? உலகமும், இந்த உலகைப் போல லட்சோப லட்சம் மடங்கு பெரிய லட்சோப லட்சம் நக்ஷத்திரங்களும் அந்தரத்தில் ஒன்றை ஒன்று ஆகர்ஷித்தபடி இயங்கி வருவது மாபெரும் அற்புதமல்லவா? முள்ளுள்ள தண்டும், முரடான இலையும் கொண்ட ஒரு செடியில் மென்மை பொருந்திய மலர் தோன்றுவதைவிட ஓர் அற்புதம் வேண்டுமா? வேண்டுமென்றால், அம்மலரில் மணம் எப்படிக் கூடியது, அதில் தீஞ்சுவை மது எப்படி ஊறுகிறது என்பதை எண்ணிப் பாருங்கள்.

இந்த அற்புதங்களெல்லாம் அவ்வாறு அற்புதங்களாகத் தோன்றாததற்குக் காரணம அவை யாவும் ஏதோ ஒரு விதிக்கு உட்பட்டிருப்பதுதான். அந்த விதிக்கு அவை உட்பட்டிருப்பதால்தான் அவை அவையாக இருக்கின்றன. ஏதேனும் ஒரு தாரகை ஆகர்ஷண விதியை மீறினால் பிரபஞ்ச மெல்லாம் தவிடுபொடியாகி விடுமே!



எனினும் இவ்விதிக்குப் பிரபஞ்சம்தான் கட்டுப்பட்டிருக்கிறதே ஒழிய, விதியை வகுத்த மூலகாரணம் கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பரம்பொருள் பிரகிருதி நியதிகளை மாற்றுவதில்லை என்பது உண்மையாயினும், பரம்பொருளால் அந்த நியதிகளை மாற்ற முடியாது என்று நாம் கூற முடியாதல்லவா? அப்படிப் பிரகிருதி நியதிகளுக்கு மேலாக அற்புதங்களை ஆண்டவன் நிகழ்த்துவானானால் அவற்றை மறுக்க நாம் யார்? இயற்கையை மாற்றும் சக்தி உள்ளதால் மட்டும் ஆண்டவனுக்குப் பெருமையில்லை. இவ்வளவு சக்தியிருந்தும் அவன் அப்படி மாற்றாமல் அடங்கியிருக்கிறான் என்பதுதான் அவனுடைய பெருமை. எனினும் அந்த அடக்கத்தையே இயலாமை என்று எண்ணுபவர்களுக்காகத்தானோ என்னவோ அவன் எப்போதேனும் அற்புதங்களையும் நிகழ்த்தி விடுகிறான்!

இப்படி எண்ணிப் பார்த்தால், இந்த வரலாற்றில் காணக் கூடிய எந்த அற்புதத்தையும் மன்னிப்புக் கோரும் பாவனையில் வாசகர்களின் முன் வைக்கத் தேவையில்லை அல்லவா?


பகுத்தறிவுக்குப் புறம்பான எதையுமே ஏற்பதற்கில்லை என்று தள்ளிவிட வேண்டாம். அறிவைக் கொண்டு மட்டும் நம் வாழ்க்கை நிறைவு பெறவில்லை. அன்பும், அழகும்தான் வாழ்க்கையின் சுருதியும் லயமுமாகும். இந்த அன்பையும், அழகையும், அன்பாகிய அழகையும் பகுத்தறிவால் எப்படி விளங்கிக் கொள்வது? பகுத்தறிவின் நிழலிலேயே எப்போதும் ஒதுங்கி வாழ்வது நன்மை தராது. பகலில்தான் மரத்தின் நிழலில் தங்கலாம்; இரவில் தங்கினால் தீங்கு உண்டாகும் என்பது விஞ்ஞான உண்மை. கண்ணுக்கு வெளிச்சமாகத் தெரியும் நடைமுறைக்கு மட்டும்தான் பகுத்தறிவின் நிழல் நல்லது. நடைமுறைக்கு மேம்பட்ட நிகழ்ச்சிகளுக்கு உள்ளுணர்ச்சிதான் உரைகல். 'பகுத்தறிவுக்கும் மேலாக உள்ளுணர்ச்சி என்று ஒன்று இருக்கிறது; அந்த உள்ளுணர்ச்சிக்கு ஒவ்வியதெல்லாமே உண்மைதான்' என்ற உணர்வுடன் மகான்களின் வரலாற்றைப் படித்தால்தான் முழுப் பயனையும் பெற முடியும்.

இந்தத் தொடர் அன்பையும், அறிவையும் பிரதானமாகக் கொண்ட இரு மகா புருஷர்களைப் பற்றியதெனினும் இதில் பல அற்புதங்கள் அடர்ந்திருப்பதால் முன் கூட்டியே இவ்வளவு சொல்ல நேர்ந்தது.

அன்னை அன்புடன் அளித்த பெயரும் குழந்தைக்குத் தக்கவில்லை. உறவினர்கள் குழந்தைக்கு நரேந்திரநாதன் என்று பெயரிட்டனர். அந்தப் பெயர்தான் நீண்ட காலம் நிலைத்தது. அந்தப் பெயரின் பொருத்தத்தையும்தான் முன்பே கண்டோமே! "நீ நரன்... நர - நாராயணர்களில் ஒருவரான நரன்" என்று ராமகிருஷ்ணர் கூறினாரல்லவா?

(தொடரும்)

உங்கள் வீட்டுக்கும் ஆபீசுக்கும் ஏற்றவை...



கீரா ஸ்டீல் பீரோக்கள்

கீரா ஸ்டீல் பீரோக்கள், நவீன மெஷின்களை அமைத்து, புதிதாக விஸ்தரிக்கப்பட்ட எமது பம்பாய் தொழிற்சாலையில், நூதனமான உற்பத்தி முறைகளைக் கையாண்டு தயாரிக்கப்படுகின்றன.

கீரா ஸ்டீல் பீரோக்கள் துருவும் அரிப்பும் ஏற்படாமலிருக்க பிரத்தியேக முறையில் தயாரான ஸ்டீலினால் ஆனவை. இவை மூன்று விதங்களில் பூட்டும் வசதியும், விரும்பியபடி மேலும் கீழும் பொருத்திக் கொள்ளக் கூடிய தட்டுக்களும் பெற்றவை...அழியாத மெருகுடன் விளங்குபவை.

Khira கீரா ஸ்டீல் ஓர்க்ஸ் பிரைவேட் லிட்., பம்பாய்-54

அங்கீகாரம்பெற்ற டீலர்களும், ஸ்டாக்கிஸ்டுகளும் :

சென்னை: வில்லியம் ஜாக்ஸ் & கோ., லிட்., மகமத் இப்ராஹிம் & கோ., பிரைவேட் லிமிடெட் இந்தியா ரேடியோ ஹவுஸ், ஆம்ஸன் & கோ., * கோயமுத்தூர், ஈரோடு, சேலம்: ராயல் டிரேடிங் கோ. எர்ணாகுளம், திருச்சூர்: 'சாகோலஸ்' வி. பி. லோனப்பன் & சன்ஸ் * ஆலப்புழை, கோட்டயம்: வாசன் & கம்பெனி * கும்பகோணம், மதுரை, திருச்சிராப்பள்ளி: ஸ்ரீ கணேஷ் ஸ்டோர்ஸ் விசாகப்பட்டினம்: காவியர் ஏஜன்ஸீஸ் * பாண்டிச்சேரி: இந்தியா ரேடியோ ஹவுஸ் விஜயவாடா, ராஜமகேந்திரபுரம்: ஸ்ரீ ராமா கார்ப்பொரேஷன் * திருநெல்வேலி, நாகர்கோவில்: ஏ.ஆர். ஏ. செண்பக நாடார், பி. வி. பி. வாலசுப்ரமணிய நாடார் & கம்பெனி * கன்னிக்கோட்டை: கே. எம். பார்த்தசாரதி & சன்ஸ் மற்றும் பெங்களூர், மங்களூர், மைசூர், பாலக்காடு, கொல்லம்

பாதுகாப்பு சேமிப்பு பத்திரங்களிலும் சர்டிபிகேட்டுகளிலும் முதலீடு செய்யுங்கள்


ஆஹா என்ன ருசி...

போகிற போக்கில்...

சிட்டுக் குருவி

ராஜ்யங்களுக்குச் சொந்தமான ஆறுகள், நதிகள் முதலியவை யெல்லாம் தேசத்துக்குச் சொந்தமென்ற மனோபாவம் வளர வேண்டுமென்று ஸ்ரீ டி. டி. கே. பேசியிருக்கிறார். ராஜ்யப் பித்தர்களுக்கும் இந்தப் பித்தர்களின் தயவிலே அரசியல் வாழ்வு வாழ்பவர்களுக்கும் ஸ்ரீ டி. டி. கே.யின் பேச்சு சவுக்கடி போல் வந்திருக்கிறது. தமிழகத்தவர்கள் இந்தப் பேச்சை மனதார வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் கேரள ராஜ்யம், மைசூர் ராஜ்யம், ஆந்திரம் இந்த மூன்று மாநிலங்களில் ஓடி வீணாகும் தண்ணீர் தமிழகத்துக்கு இன்றியமையாத் தேவையாகும்; சென்னை நகரத் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கும். மைசூர் தண்ணீர் மின்விசை தரும். மலையாளத்து நீர் கொங்கு, பாண்டிய நாடுகளில் பஞ்சத்தைப் போக்கும்.



ஃ ஃ ஃ

திரு பட்டம் தாணுப்பிள்ளை மலையாள முதலமைச்சராக இருந்தாரல்லவா? கவர்னர் பதவியோடு வந்த காங்கிரஸ் கழுகு அவரை மலையாளத்திலிருந்து கொத்திக் கொண்டு போவதற்கு முன்பாக அவர் தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் கொடுப்பதில்லை யென ஒற்றைக் காலில் நின்றார். தென் பிராந்திய சபையினரெல்லாம் எவ்வளவோ சொல்லியும் திரு பட்டம் கேட்கவில்லை. திரு பட்டம் அவ்வளவு ஈவிரக்கமற்றவரா என்று கேட்கலாம். தண்ணீர் இல்லையென்பது பாபத்திலும் பெரிய பாபமல்லவா என்று வினவலாம். திரு பட்டம் அப்படி ஒன்றும் ஈவிரக்க மற்றவரோ, பாபம் செய்ய முனைபவரோ அல்ல. பின்னர் அவர் பிடிவாதத்துக்குக் காரணம் என்னவென்றால் அரசியல்தான். இவ்வாறு செய்வதன் மூலம் தீவிர மலையாளிகளைத் திருப்திப்படுத்தலாம். அதன் மூலம் ஓட்டுக்கள் வரும்.... பிறகு... இப்படியாகக் கணக்கு நீளுகிறது. இந்தக் கணக்கை அறிந்தோ அறியாமலோ ஸ்ரீ டி. டி. கே. மண்டையில் அடித்திருக்கிறார்.



ஃ ஃ ஃ

ஸ்ரீ டி. டி. கே. சாடியிருக்கும் மாகாண வெறி ஏதோ திடீரென்று

பேசும் படமும் சலனப் படமும்!



முளைத்ததாக யாரும் நினைக்க வேண்டாம்.




இந்த வெறி உச்ச கட்டத்துக்கு வந்து பத்தாண்டு களுக்கு மேலாகிறது. வெள்ளைக் காரன் காலத்தில் 'ஏக இந்தியா' என்றிருந்த மனோ பாவம் இப்போது நாளுக்குநாள் குறைந்து வருகிறது. இந்தக் கைங்கரியத்தைச் செய்கிறவர்கள் எதிர்க்கட்சிகளோ என்று நினைத்தால் அது தவறாகும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் முதலில் ஆரம்பிக்கிறார்கள். பிறகு இது தொத்து நோயைப் போலப் பரவுகிறது. சமீபத்தில் ஆந்திர மாநில காங்கிரஸ் தலைவர் திரு பிரம்மையா, கன ரக மின் விசைத் தொழில் ஆந்திரத்தில் ஏற்படுவதாக இருந்து பிறகு கை விடப்பட்டதை ஒட்டி ஆந்திரம் புறக்கணிக்கப்படுகிறது என்று பேசினார். பழைய தி. மு. க. அறிக்கைகள் 'வடக்கு வளர்கிறது — தெற்குத் தேய்கிறது' என்று கூறியது போலவே இருக்கிறது அவரது பேச்சு. திரு பிரம்மையா, தமிழ் நாட்டில் இருப்பது போல் கதர்ச் சட்டைக்குள்ளே இருக்கும் கறுப்புச் சட்டையோ என்று கூட மலைப்பு ஏற்படலாம்.

ஃ ஃ ஃ

நேச நாடுகள் விமானப் பாதுகாப்பு தருவது குறித்துச் சில பாராளுமன்ற அங்கத்தினர்கள் நேருஜியிடம் கவலை தெரிவித்தார்கள் என்று ஒரு செய்தி கூறுகிறது. இந்தப் பிரமுகர்கள் ருஷ்யாவின் எம். ஐ. ஜி. விமானங்கள் வருவது குறித்து சந்தோஷப்பட்டிருப்பார்கள் என்பது உறுதி. மாமியார் வீட்டு மாங்காய்ச் சோற்றை விடத் தாயார் வீட்டுத் தண்ணீர்ச் சோறே தேவலை என்று கூறுவார்கள். ருஷ்யாவைத் தாயகமாக ஏற்கும் வழியிலே பாதி தூரம் வரை சென்றவர்கள் கவலைப்படாமல் என்ன செய்வார்கள்? இவர்களுக்கு நேருஜி 'ஆறுதல் கூறி'த் தேற்றி விருப்பாரோ?

ருஷ்யாவிலிருந்து வரும் எம். ஐ. ஜி. விமானங்கள் கப்பலில் வருகின்றனவாம். கப்பலில் விமானங்கள் அப்படியே முழுசாக வருகின்றனவா அல்லது அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து வருகின்றனவா என்று விசாரப்படுகின்றனர் சிலர். அப்படிப் பிரித்து வந்தால் சிறு 'மரைகள்', ஆணிகள் காணாமற் போகும் சாத்தியம் உண்டு. அப்படிக் காணாமற் போனால் அவற்றை மாஸ்கோவிலிருந்துதானே பெறவேண்டும்? அதற்கு எத்தனை காலமாகும் என்பதுதான் அவர்கள் கவலையாம்!

இருட்டடிப்பு!





Dalf
பேயர்-அக்ரோகெம் லிட்.,
டால்ப்
மூட்டைப் பூச்சிகளை
அதிகத் தீவிரமாய்க்
கொல்லுகிறது.
BAYER
A »Bayer« PRODUCT
எல்லா ஸ்டோர்களிலும் கிடைக்கும்
விநியோகஸ்தர்கள்: ஜாப்ரே மானேர்ஸ் & கம்பனி லிமிடெட்.
ULKA-CD-3

பிரபல கொழும்பு வர்த்தகர்

மறைவு



இலங்கையில் பிரபல வர்த்தகரும் மெஸர்ஸ் ஏ. எஸ். எஸ். சங்கரலிங்கம் பிள்ளை அன் கம்பெனி லிமிடெட்டின் மானேஜிங் டைரக்டரும் ஜெயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலை நிர்வகித்து வரும் தெட்சணத்தார் வேளாளர் மகமை பரிபாலன சங்கத்தின் தலைவருமான திரு ஒ. **சங்கரலிங்கம் பிள்ளை** அவர்கள் 29-10-62 அன்று பாளையங்கோட்டை பெருமாள்புரத்தில் தமது 74வது வயதில் இறைவன் திருவடியை அடைந்தார்.

இலங்கையிலும் தென்னிந்தியாவிலுமுள்ள ஏராளமான பிரமுகர்கள் அன்னாரின் குடும்பத்திற்கு அனுதாபத் தந்திகள் அனுப்பியிருந்தனர். அன்னாரின் சமக் கிரியைகளின்போது ஏராளமான நண்பர்களும் அனுதாபிகளும் பிரசன்னமாயிருந்து தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர். கருமாதி தினத்தன்று பாளையங்கோட்டையிலும் கொழும்பிலும் கதிர்காமத்திலும் ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

காலஞ்சென்ற திரு சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் தமது வாழ்நாளில் சைவமும் தமிழும் தழைத்தோங்க உதவிய பெருந்தகையாவார். சைவ சமய வளர்ச்சிக்கும் கல்வி அபிவிருத்திக்கும் நன்கொடைகள் பல வழங்கியுள்ளார். பரோபகாரச் சிந்தையும் தர்ம குணமும் படைத்த அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக!


நம்மை விட்டு விட்டுத் தேசீயப் பறவையாக மயிலை ஏன் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்?
ஒரு சமயம் அது அவங்களைக் காக்காய் பிடித்திருக்கும்!
என்ன மயிலாரே! தேசீயப் பறவை என்று உங்களைச் சொல்லுகிறார்கள். ஆனால் நீங்கள் பறக்கிறது கிடையாதே!
ஆம்! உண்மை, நான் உங்க மாதிரி சோற்றுக்குப் பறப்பதில்லை!
கா! கா! கா!
கா!கா!.. கா!கா!
கா!.. கா...கா!
என்ன! ஒரு காக்கா கூட கீழே வரமாட்டேங்கறது! தேசீயப் பறவையாகத் தன்னைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று கோபமோ!
காக்கையின் கோபம்!
சாமா
காக்கைச் சிறகினிலே நந்தலாலா! நின்றன் கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா!
அது நம் அரசாங்கத்துக்குப் புரியவில்லையே நந்தலாலா!

"ஏதானாலும். இந்த மிரட்டல் எல்லாம் என்னிடம் வேண்டாம்! அன்புக்குக் கட்டுப்பட்டு ஆயுள்வரை கிடப்பேன்! ஆனால் உங்கள் அதிகாரத்துக்கும் ஆணவத்துக்கும் கட்டுப்பட முடியாது! நினைவிருக்கட்டும்..."

மஞ்சுவுக்கு மூச்சு வாங்கியது.

அவள் கணவன் அயர்ந்தே போனான்.

ஏதோ விளையாட்டுச் சண்டை இப்படி வினையில் முடியும் என்று அவன் நினைக்கவில்லை. அவன் நாலு வார்த்தை பேசியது உண்மை தான்! ஆனால் அவ்வார்த்தைகள் அவள் இதயத்தின் அடித்தளத்தில் உறங்கிக் கிடந்த கோபத்தைப் புயலாகக் கிளப்பிவிட்டது. அவன் அவளுடைய 'பிறந்த வீட்டைப் பற்றி இடித்துரைத்தான்! அதுதான் அவன் செய்த பெருந் தவறு!

ஆணைப்பட்ட சீதாப்பிராட்டிக்கே பிறந்த வீட்டைப் பற்றிக் கூறியவுடன் கோபம் வந்தது என்று ஒரு கதை இருக்கச் சாதாரண மனசு எம்மாத்திரம்!

தன்னை ஆயிரம் கூறினாலும் ஒரு பெண் பொறுத்துக் கொள்வாள். ஆனால்...அவள் பிறந்த வீட்டைப் பற்றிக் கூறினால்...? சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்களே! அதே கதைதான்!

மனசு கரைய ஆரம்பித்தான்.

"நேற்றுக் கல்யாணம் ஆனவர்கள் எல்லாம் வேட்டகத்தை என் வீடு, என் வீட்டில் எனக்கு ஆயிரம் உபசாரம் நடக்கும் அப்படி, இப்படி என்று கதை அளக்கிறார்கள்! ஒன்றுமே செய்யா விட்டாலும் மறந்து விட்டு, 'உபசாரம் செய்தார்கள்' என்கிறார்கள். நீங்கள் என்னடா வென்றால் ஏதோ ரொம்ப மிரட்டுகிறீர்களே! உண்மையைச் சொல்லக்கூடவா மென்னியைப் பிடிக்கிறது! ஓடி ஓடி உபசாரம் செய்தாலும் பழிச் சொல்



நான் இங்கே....



தான் மிச்சம் என்றால் அது என் தாயும், தந்தையும் செய்த பாவம்தான்!"

"மஞ்சு...! ஏன் வீணாய்க் கத்துகிறாய்? நான் சொன்னது...."

அவள் இடையில் குறுக்கிட்டாள்.

"நான் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்த சீதனம் போதாதென்றுதானே சொன்னீர்கள்! ஒன்றல்ல, இரண்டல்ல... இருபது ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள் என் வீட்டில். எதிர் வீட்டுப் பெண்ணின் கலியாணத்தில் நடந்ததே... டேப் ரிகார்டரும், ரேடியோ கிராமும், டிரான்ஸிஸ்டரும், ப்ரிஜிடேரும் தருகிறோம் தருகிறோமென்று சொல்லி விட்டுக் கடைசியில் ஏமாற்றம் தந்தார்களே, அப்படிச் செய்திருக்க வேண்டும் எங்கள் வீட்டிலும்...."

ராகவனுக்குக் கோபம் வந்தது.

"இதோ பார், மஞ்சு! விளையாட்டுச் சண்டையை நீதான் பெரிசு பண்ணுகிறாய்! இப்படி நீ இன்னும் ஏதாவது பேசிக்கொண்டே இருந்தால் நான் மீண்டும் வீணில் உன் தாய், தந்தையரைப் பற்றிக் கூற நேரிடும். ஆமாம்."

"ஆகா! கூறிக் கொள்ளுங்களேன் நன்றாக. நீங்கள் இப்படி என்னை மிரட்டுவதால்தான் என் மரியாதை கெட்டு, நானே இந்த வீட்டின்

அனைவரும் என்னிடம் சண்டைக்கு வருவார்கள்! உங்கள் அனைவரின் பொழுதுபோக்கு விளையாட்டுப் பொம்மை இல்லை நான்! உங்களிடமெல்லாம் இழிசொல் கேட்டுக்கொண்டு வேலைக் காரியாய் வாழ்வதற்கு என்னை இங்கு மணம் செய்து கொடுக்கவில்லை என் தந்தை! என் கலியாணத்துக்குச் செலவிட்ட ரூபாயைக் கொண்டு என்னைப் படிக்க வைத்திருந்தால் இன்று நான் ஒரு டாக்டராகி இருப்பேன்! என் தயவுக்காக எத்தனையோ பேர்கள் காத்து நிற்பார்கள்! ஏன்? அந்த எண்ணற்றவர்களில் நீங்கள்கூட ஒருவராக இருக்கலாம்....''

''இருக்கும்...இருக்கும். அப்போது வேறு ஒருத்தி மனைவியாகி இருப்பாள். அவள் பிரசவத்துக்கு உன்னை அழைத்துப் போக வந்திருப்பேன்!''

''போதும் உங்கள் கேலி... நான் இப்போதே பிறந்த வீட்டுக்குப் போகிறேன். எனக்கொன்றும் தேவையில்லை இந்த அவல வாழ்வு! சாப்பிடச் சாதமும், உடுக்க உடையும், தங்க நிழலும் என் அன்னையிடம் என்றும் உண்டு. நான் போகிறேன்.''

ராகவன் ஒரு நிமிடம் திணறித்தான் விட்டான். வேண்டாத வம்பை இழுத்தது அவன் தான்! ஆனால் அது இப்படி விசுவரூபம் எடுக்கும் என்று கண்டானா? இன்று கோபத்தில் அவள் வீட்டை விட்டுக் கிளம்பிவிடலாம்! இப்போது இவள் மனம் இருக்கும் நிலையில் நல்லது கெட்டது சிந்திக்க அவளுக்கு நேரம் இல்லை! நாலு பேர் பார்த்தால்...? சே...அவமானம் மனைவியை வைத்துப் பிழைக்கத் தெரியாதவன் என்று அவன் மானம்தான் போகும்!

வீட்டுக்கு வெளியே விஷயம் வந்தால் எல்லோருடைய தவறும் கூட்டிக்



நீ அங்கே...

விமலா ரமணி



காட்டப்பட்டு விடுமல்லவா! அவள்மீது தவறு உண்டு; அவன் மீதும் உண்டு! அதற்காக?

ராகவன் இதமாக எவ்வளவோ தடுத்துப் பார்த்தான்! அவள் புயலாகக் கிளம்பிவிட்டாள் யாரையும் லட்சியம் செய்யாமல்!

''அடுத்த தெருவில்தான் என் ஒன்றுவிட்ட அண்ணா இருக்கிறான். அவனிடம் எல்லா விஷயத்தையும் சொல்லி அவனை என் பிறந்த வீட்டில் என்னைச் சேர்ப்பிக்கச் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் நிம்மதியாக ஆபீஸ் போங்கள். நான் காணாமல் போய்விட மாட்டேன்.''

ராகவன் வேதனையுடன் வெளியே வேகமாக நடந்தான்.

''ஓஹோன்னும்... இந்தப் பயமுறுத்தல் எல்லாம் என்னிடம் நடக்காது...நன்றாகப் போய்க்கொள் உன் பிறந்த வீட்டுக்கு....நானே உன்னைக் கொண்டு போய் விடுகிறேன். அடேயப்பா! அதற்கெல்லாம் நான் மசிகிறவன் இல்லை....''

குரல் கேட்டுக் கையில் பையுடன் வந்த மஞ்சு கனைத்தான்.

'அண்ணாவா பேசுகிறான்? யாருடன்?'

''யார் மஞ்சுவா? வா...வா... நல்ல சமயத்தில் வந்தாய்...உன் மன்னி பிறந்த வீடு போகிறாளாம். வழி யனுப்ப வந்தாயோ...''

'கோ'வெனக் கதறி விட்டாள் அவன் மன்னி.

''பார் மஞ்சு! அவர் கோபமாக ஆயிரம் சொன்னார். அதைப் பொறுக்க முடியாமல் நான் வேடிக்கையாகப் 'பிறந்த வீடு போகிறேன்' என்றதற்கு அவர் இப்படிச்சொல்கிறார். நீயே சொல். பெண்களுக்கு ஆயிரம் துன்பம் இருந்தாலும் கணவன் அருகில் இருப்பது தானே முறை! கணவனின் அன்பும் ஆதரவும் இருக்கும் வரை ஒரு பெண்ணுக்கு எந்தவித துன்பம் வந்தாலும் கவலையில்லை! இதை விட்டு விட்டு இந்தச் சண்டையெல்லாம் சுமந்து கொண்டு பிறந்த வீடு சென்று, 'நாம் மகிழ்ச்சியில் வாழ்கிறோம்' என்ற கற்பனையில் மிதக்கும் பெற்றோருக்குக் கவலை தரலாமா, மஞ்சு? அத்தனைக்கு நான் அறிவற்றவளா? நீயே சொல். நான் இப்போது போக மாட்டேன் என்றுங்கூட என்னைத் துரத்திவிடுவார் போலிருக்கிறது உன் அண்ணா....நீயே அவருக்குப் புத்திமதி சொல், மஞ்சு...''

மஞ்சுவின் தொண்டைக் குழியில் ஏதோ வந்து அடைத்தது. மெதுவாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

''என்ன அண்ணா இது. சின்னச் சண்டையெல்லாம் பெரிது பண்ணிக் கொண்டு. மன்னி தான் தன் தவறை ஒப்புக் கொள்கிறாளே..., விட்டுவிடு அண்ணா...ஆயிரம் சண்டை பிடித்துக்கொண்டாலும் கணவன் மனைவி உறவு கற்பகோடி காலத்து உறவு... அது துண்டிக்கப்படக் கூடாது....'' ஏனோ அவள் வதனத்தில் செம்மை படர்ந்தது.

''சரி, சரி! எங்கள் சண்டையில் உன்னை மறந்தே விட்டேன். என்ன விசேஷம்?''

''நான்....'' மஞ்சு இழுத்தாள். ''ஒன்றுமில்லையே....சும்மா வந்தேன். சில பழைய ரவிக்கைகளை ஆல்டர் செய்ய வேண்டும்; புடவை ஒன்று கிழிந்து விட்டது. இதையெல்லாம் எடுத்துக் கொண்டு தையல்காரரைத் தேடி வந்தேன். வந்தது வந்தோம். உங்களையும் பார்க்கலாம் என்று....''

''நன்றாய்ப் பார்த்தாயல்லவா?''

மூவரும் சிரித்தனர்.

'' நீ வந்ததால்தான் எங்கள் வீட்டுச் சண்டை சுலபத்தில் முடிந்தது. இந்தா, சமாதானத் தூதாக வந்த உனக்கு 'ஸ்பெஷல் காப்பி'. இதைச் சாப்பிட்டு விட்டுப் போ'' என்று சிரித்தபடி கூறினாள் மன்னி.

''ரொம்பக் கோபமாகப் பேசி விட்டேனா? பாவம், பயந்து விட்டாய், இல்லே?''

''ஆமாம்! அதுசரி. என் நடிப்பு எப்படி?''

''ஏ ஒன் போ. நானே அரண்டு விட்டேன். அடாடா! அந்தக் கண்ணீரும் விம்மலும் பிரமாதம்! மஞ்சுவுக்கு எவ்வளவு அழகாய்ப் புத்திமதி சொன்னாய். இல்லா விட்டால் அவள் இலேசில் திரும்புகிறவளா என்ன?''

''ராகவன் ரொம்பக் கெட்டிக்காரர்தான். மனைவியின் கோபத்தை உங்கள் உதவியினால் எப்படிப் பொடிப் பொடியாக்கி விட்டார்!''

''உங்கள் என்று சொல்லாதே! நம் என்று சொல்...!''

மஞ்சுவின் அண்ணாவும், மன்னியும் சிரித்துக் கொண்டிருந்த அதே நேரம் அங்கே மஞ்சுவும், ராகவனும் களிப்பில் மிதந்தனர்.!

புதியது

ப்ரோடெக்ஸ் ஒரு சர்வ-காரிய டால்க். அது குடும்பத்தினர் அனைவருக்கும் மிகச்சிறந்தது.



ப்ரோடெக்ஸ் ஒரு உயர்ந்த ரக, மனோரம்மிய நறுமணமுடைய, சர்வ-காரிய டால்க். எல்லாக் குடும்பத்தினருக்கும், குளித்தபிறகும், கோடைக்காலத்தில் குளிர்ச்சிக்கும் மிகச் சிறந்தது. ப்ரோடெக்ஸ் வாங்குங்கள்-மிக மிகப்பெரிய டப்பா-மிகமிகக் குறைந்த விலை.



ப்ரோடெக்ஸ்

ஆல்-பர்ப்பஸ் டால்கம் பௌடர்

PTP-G-7-TAM.




சந்திரனே சாட்சி!

கதை: கௌசிகன் — 9 — சித்திரம்: விநு




உங்களுக்காகத்தானே? அதை இப்படித்தான் ஊரார்க் கெல்லாம் விளம்பரப் படுத்துவார்களா? என் சிநேகிதிகளெல்லாம் இன்று என்னைச் சூழ்ந்து கொண்டு கேலி செய்து அழ வைத்து விட்டார்கள்.
எங்கே என்னைப் பார். அது இன்ப அழுகை தானே? அதற்காகவா இந்த கோபம்?
போங்கள் ஐயாவாம்! உங்களுக்கு எல்லாமே கேலிதான். ஒரு பெண்ணின் அந்தரங்கத்தை இப்படித்தான்....
அவர்கள் கேலியை உண்மையாக்கி விட்டால் போயிற்று!
அது நடக்கக் கூடிய காரியமா? நீங்களெங்கே, நானெங்கே?
இரண்டு பேரும் இங்கேதான்!
பெரிய சர்க்கரை ஆலையின் அதிபர் தம் ஒரே செல்வ..
மகனுக்கு ஏதாவது பெரிய இடத்தில் பெண் பார்ப்பார்!
சர்க்கரை ஆலை அதிபரின் இதயமும் சர்க்கரை என்பது உனக்குத் தெரியாது நளினி. அப்பா என் விருப்பத்துக்கு மாறாக எதுவுமே நடந்ததில்லை.
அது சரி, பெண் கேட்க வந்தால் உங்கள் வீட்டார் விரட்ட மாட்டார்களே, நளினி? அதைச் சொல்.
குறும்பைப் பார் குறும்பை!


நளினி...
ஐயராம்!... என்னை ஏமாற விட மாட்டீங்களே!
மறு நாள்...
அப்பா, கூப்பிட்டீங்களாமே?
ஆமா குழந்தே! இந்தச் சின்ன வயசிலே பெரிய பொறுப்புக்களை எல்லாம் உன் தலையில் சுமத்திட்டேன்... ம்...
எதுக்காக இப்போ இப்படியெல்லாம் மனசை அலட்டிக்கிறீங்க?
அது சரி. காலையிலே யார் வந்திருந்தாங்க? பழகின குரல் போல இருந்ததே.
மாமா தனபால் வந்திருந்தார். உங்க சௌக்கியத்தைப் பத்தி கேட்டு விட்டுப் போகலாம்னு
அந்த அயோக்கியன் ஏன் வந்தான் இங்கே? அவனோடு உனக்கு என்ன பேச்சு?.. ம். இபோ
முடியாத உடம்பிலே ஏனப்பா இப்படி? எனக்கிந்த உலகத்திலே உங்களைத் தவிர உறவுன்னு சொல்ல மாமா ஒருவர் தானே?
தனபாலைப் பத்தி உனக்குத் தெரியாது. என் கண் எப்போ மூடும்னு காத்துக்கிட்டிருக்கான் இங்கே வந்து உக்கார. நீ அவன் விஷயத்திலே எச்சரிக்கையா இருக்கணும்.
சரி. நீங்க நிம்மதியாத் தூங்குங்க..
உங்கம்மா இருந்த நாள் என்னக்கிட நிம்மதியா கண்ணை மூடி இருப்பேன். பொறுப்பில்லாத புள்ளே நீ. 'இந்தச் சொத்தையும் என் புள்ளையையும் காப்பாத்த வேண்டியது உங்களோட பொறுப்புன்னு' உன்னை ஒப்படைச்சிட்டு புடிச்சுக் கொடுத்துத் தான் போனாள் அம்மா. அதுக்கு எப்போ வேளை வருதோ?
அப்பா உங்களை ஒண்ணு கேட்கவா?
கேளுடா கேளு. என் சங்கோசப்படறே?
அந்த ஜெகந்நாதன் காலை தெருக் கோடியிலே வந்தால் அவரை ஏனக்கரிப்பீர் கனா, அப்பா?


தனிப்பட்ட
சிறப்புக்கு
கைக்கொடுக்கிறது
மபத்லால்
க்ரூப்
பாப்லின்கள்
ஷர்ட்டிங்குகள்

...வியாள் விலங்கு

...ணிவண்ணன்



ஆறுவது அத்தியாயம்

தங்கக் கூண்டில் வளர்ந்த தமனியப் பசுங் கிளியாய் அந்த வீட்டின் தனிமையில் ஏங்கி ஏங்கி வளர்ந்தவள் பாரதி. அவள் மனம் ஒப்பி ஆசைப்பட்டு நிறைவேறா மற்போன விருப்பங்கள் என்று எவையும் அந்த வீட்டில் அன்று வரை இருந்ததில்லை. அவள் நினைத்தது எதுவாயினும் அது அப்போதே நடக்க முடிந்த அளவுக்குச் செல்லமாகவும் சீராகவும் வளர்ந்திருக்கிறாள் அவள். 'இது நான் நினைப்பது போல் நடக்க முடியாதோ?' என்று எதை நினைத்தும் நேற்று வரை அவள் கவலைப்பட நேர்ந்ததில்லை. அவள் நினைத்ததை நிறைவேற்றப் பணியாட்கள் பலர் காத்திருந்தனர். அவளுடைய விருப்பங்கள் உடனே நிறைவேற்றப் பட்டனவா, இல்லையா என்று கவலைப்பட்டு அக்கறை செலுத்தவும் அவை உடனே நிறைவேற்றப் பட்டிருந்தால் நிறைவேற்றியவர்களைப் பாராட்டவும், நிறைவேற்றாமல் தாமதம் செய்யப்பட்டிருந்தால், அப்படித் தாமதம் செய்தவர்களைக் கண்டிக்கவும் கூட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன அங்கே. ஆனாலும் எதற்காக ஏங்குகிறோம் என்று தெரியாத ஏதோ ஒன்றுக்காக அவள் ஏங்கி ஏங்கித்தான்

வளர்ந்திருக்கிறாள். படிப்பதற்கு ஆங்கிலத்திலும் தமிழிலுமாகப் புத்தகங்கள் வாங்கிக் குவிக்கப்பட்டிருந்தன. அந்த வீட்டுக்குள் வராத பத்திரிகைகளும் செய்தித் தாள்களும் இல்லை. தோட்டத்தின் ஒரு பகுதியில் அவளுடைய அறைக்குள்ளிருந்து அவளே படியிறங்கிப் போய்ப் பறித்துக் கொள்வதற்கு வசதியாகச் சகல விதமான மலர்ச் செடிகளும், கொடிகளும் பயிரிடப் பட்டிருந்தன. அப்பா அவளை அரச குமாரியாகத்தான் பேணி வளர்த்தார். அவளோ பிச்சைக்காரியைப் போல் எதற்கோ ஏங்கிக் கொண்டே வளர்ந்தாள். சிறு வயதில் தாயை இழந்து விட்ட எந்தப் பெண்ணும் எத்தனை வசதிகளுக்கு இடையேயும் இப்படித்தான் வளர முடியும். தன் அழகில் நிரம்பிக் கிடக்கும் அந்தரங்கங்களும், தன் அந்தரங்கத்தில் நிரம்பிக் கிடக்கும் அழகுகளும் பிறருக்குத் தெரியாமலே வளர்ந்து விட்ட காட்டு மான் கன்று போல் மல்லிகைப் பந்தலின் தனிமையில் செல்வக் குடும்பம் என்ற உயரத்திலிருந்து வெறும் மண்ணில் கீழ் இறங்கி நடக்காமலே வளர்ந்து விட்டாள் அவள். நேற்று வரை தன் மனத்தைப் பாதிக்கும்படியான எந்த எண்ணத்தையும் அவள் எண்ணியதில்லை. இன்று அவளைப் பாதித்திருக்கும் இந்த எண்ணமோ மற்றொருவரிடம் சொல்லி ஆதரவு தேட முடியாத ஒன்று. மிக அந்தரங்கமான விருப்பங்களில் பிரியமுற்று அழுந்தி நிற்கும் போதுகளில் அப்படி அழுந்தி நிற்கிற மனமும் அந்த மனத்துக்குச் சொந்தமானவரும் இந்த உலகில் அநாதையாகவும் நிர்க்கதியாகவும் தன்னந் தனியே கைவிடப் பெறுகிறார்கள். அதைப் பங்கிட்டுக் கொள்ளவோ அதற்கு ஆதரவு தேடவோ சரியான துணை அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அந்த வேளையில் பாரதியும் அப்படித் துணையற்றவளாகத்தான் இருந்தாள். அப்போது அவளுடைய அந்தரங்கத்தில் என்ன இருந்ததோ அதை அவள் இன்னொருவரிடம் சொல்ல முடியாது.

சத்தியமூர்த்தியை 'இண்டர்வ்யூ' செய்த அதே பதவிக்காக விண்ணப்பம் போட்டிருந்த மற்றொருவரையும் 'இண்டர்வ்யூ' செய்து கொண்டிருந்த பூபதி அவர்களோ அப்போது தாம் செய்யும் காரியம் தமக்கு மிக அருகேயுள்ள மென்மையான மனம் ஒன்றைப் பாதித்துக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள நியாயமில்லை. முறையாகவும், ஆர்வம் குன்றாமலும் வழக்கம் போல அந்தப் பதவிக்காக வந்திருந்த இரண்டாவது விண்ணப்பதாரரையும் விசாரித்துக் கொண்டிருந்தார் அவர். நிர்வாகத் துறையில் அது ஒரு முக்கியமான அம்சம். ஒரு பதவிக்கு மனுச் செய்திருக்கிறவர்கள் பலராக இருந்தால் அப்படிப் பலர் மனுச் செய்திருக்கிறார்கள் என்பதே தெரியாமல் ஒவ்வொருவரையும் வெவ்வேறு நேரங்களில் வரச் சொல்லி எல்லாரிடமும் ஒரே விதமான ஆர்வத்தோடு பேசி எல்லாரிடமும் ஒரேவிதமான ஆர்வத்தோடு விசாரித்து வந்து செல்கிற ஒவ்வொருவரும் அந்தப் பதவி தங்களுக்கே கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டு போகும்படி செய்து விட்டு இறுதியில் காதும் காதும் வைத்தாற் போல் இரகசியமாக உண்மைத் தகுதியைக் கண்டு பிடித்து நியமனம் செய்வார்கள். தொழிலதிபர் பூபதியோ நிர்வாகத் துறையில் நிபுணர். சில வேளைகளில் அவருடைய சாமர்த்தியங்கள் பிறர் அநுமானம் செய்ய முடிந்த எல்லைக்கு அப்பாலும் உயர்ந்திருக்கும். தங்கம் நிறுப்பது போல் எதிராளியை மாற்றுக் குறையாமல் கூடாமல் கச்சிதமாக எடை போட்டு அளந்து நிறுத்துத் தெரிந்து கொண்டு அவ்வாறு தான் நிறுத்துத் தெரிந்து கொண்டு விட்டதை நிறுக்கப்பட்ட எதிராளியே புரிந்து கொள்ள விடாமல் பாமரர் போல் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பார் அவர். மல்லிகைப் பந்தல் ரோட்டரி கிளப்பின் தலைவராக இருந்து பின்பு கவர்னராக அவர் கௌரவப் பதவி பெற்ற போது அவருடைய ரோட்டரி கவர்னர் பதவிக் காலத்தில் ரோட்டரி இண்டர் நேஷனல் கன்வென்ஷன் ஒன்று மல்லிகைப் பந்தலில் நடைபெற்றது. அதற்காக மல்லிகைப் பந்தலுக்கு விருந்தினராய் வந்திருந்த கனடா நாட்டுத் தொழில் அதிபர் ஒருவர் பூபதியோடு நாலைந்து நாட்கள் பழகி விட்டுப் பிரிந்து செல்லும் போது நிகழ்ந்த விருந்து ஒன்றில் அவரை இந்தியாவின் 'கமர்ஷியல் மாகனேட்' (தொழில் மன்னர்கள் அல்லது வாணிக வித்தர்கள்)களில் தலைசிறந்த ஒருவராக வருணித்தார். இந்தப் பெருமையெல்லாம் தன் தந்தைக்குக் குறைவின்றி இருப்பது பாரதிக்கும் நன்றாகத் தெரியும்.

ஆனால் அப்போது அவர் சத்தியமூர்த்தி விண்ணப்பம் செய்திருந்த அதே பதவிக்கு மனுச் செய்திருக்கும் இன்னொருவரையும் தனக்கு எதிரே நீண்ட நேரமாக உட்கார வைத்துப் பேசிக் கொண்டிருப்பது அவளுக்குச் சிறிதும் பிடிக்க வில்லை. சத்தியமூர்த்திக்குப் போட்டியாக வந்திருக்கும் மனிதரிடம் தந்தை பேசிக் கொண்டிருக்கிற நேரம் வளர வளரக் காரணமில்லாத தொரு வெறுப்பையும் கோபத்தையும் அவள்

அடைந்து கொண்டிருந்தாள். எதன் காரணமாகவோ பொறுமை யிழந்து ஒரு நிலை கொள்ளாமல் பரபரப்புக் கொண்டு தவித்தாள் அவள். இன்னும் அப்பாவின் அறைக்கு வெளியில் வராந்தாவில் நின்று கேட்டுக் கொண்டிருந்தால் அப்பாவே எழுந்து வந்து தன்னைப் பார்க்க நேரிட்டு விடுமோ என்ற பயமும் தயக்கமும் அவள் மனத்தில் மெல்ல மெல்ல ஏற்பட்டன. அப்பாவின் அறை வழியே வீட்டுக்குள் செல்லுவது போல் சென்றால் வந்திருப்பவர் யார் என்பதையும் பார்த்து விடலாமே என்று அவள் மனத்துக்குள் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் போது கல்லூரிக் கார் வாயிலில் வந்து நின்றது. அதிலிருந்து பிரின்ஸிபலும் ஹெட்கிளார்க்கும் இறங்கி வந்தார்கள். அவர்கள் இருவரும் தந்தையின் அறையை நோக்கி வருவதாகத் தென்படவே அந்த வேளையில் தான் அங்கே வராந்தாவில் தயங்கி நிற்பது நன்றாயிராது என்று எண்ணியவளாக உள்ளே செல்வதற்காக விரைந்தாள் பாரதி.

சத்தியமூர்த்திக்கு எதிராய் எல்லாருமாகச் சேர்ந்து ஏதோ சதி செய்வது போல் அவர்கள் மேல் ஒரே வெறுப்பாக இருந்தது அவளுக்கு. காலையில் தன் பட்டுப் பாதங்கள் பதிய அந்தக் காம்பவுண்டுக்குள் நடந்து வந்து தந்தைக்கு முன் கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்து ஒவ்வொரு கேள்விக்கும் கணீரென்று மறுமொழி சொல்லி விட்டுப் போன அந்தத் தைரியசாலியின் முகத்தை மீண்டும் நினைவுகூர முயன்றாள் அவள். நினைத்துத் தவிக்கிறவர்களுக்கு அதிகம் சோதனை செய்யாமல் அருள் செய்து விடுகிற சில நல்ல தெய்வங்களைப் போல் அவள் நினைத்தவுடன் ஞாபகத்துக்கு வந்தது அந்த எழில் முகம். அளவாகவும், அழகாகவும் பேசும் அந்தக் குரல், சத்திய வேட்கை நிறைந்த அந்த முகம், 'சுக துக்கங்கள் நிறைந்த இந்த வாழ்க்கையின் முடிவற்ற பாதையில் இன்னும் ஓர் அடி முன்னால் எடுத்து வைக்க எப்போதும் நான் தயார்' என்பது போல் வலது பாதம் முன் இருக்க நிமிர்ந்து உட்காரும் அவன் வனப்பு, எல்லாம் நினைவு வந்தன அவளுக்கு. அவள் நெட்டுயிர்த்தாள். தன் நினைவு இது வரை அடைந்திருந்த இனிய ஞாபகங்களையும், இனி அடைவதற்கு இருந்த இனிய ஞாபகங்களையும் அந்த வீட்டின் முன் அறையில் அப்போது உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் தந்தையும், கல்லூரி முதல்வரும் சேர்ந்து பறித்துக் கொண்டு விடுவார்களோ என்று எண்ணி மனம் நலிந்தாள் அவள். போதாத குறைக்கு இப்போது ஹெட்கிளார்க் வேறு கூட வந்திருக்கிறார். 'எல்லாருமாகச் சேர்ந்து என்ன முடிவுக்கு வரப் போகிறார்களோ? ஒரு வேளை இப்போது இரண்டாவதாக வந்திருக்கும் இந்த மனிதரே தமிழ் விரிவுரையாளராவதற்குத் தகுதியானவர் என்று இவர்கள் எல்லாரும் ஒரு மனமாகத் தீர்மானம் செய்து விட்டால்...?'

இப்படி நினைத்த போது அவள் சிந்தனை மேலே ஒன்றும் எண்ணத் தோன்றாதபடி இருண்டது. என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கவும் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கேட்கவும், விருப்பம் கொண்ட அவள் ஒரு காரியமும் இல்லாமலே தந்தையின் அறைக்கு அடிக்கடி போய் விட்டு வந்தாள். கடுவன் பூனை மாதிரி முகமும் கொலைக் களத்து வெட்டரிவாளைப் போன்ற பெரிய மீசையும் முரட்டுப் பார்வையுமாக வீற்றி

பொன் மொழிகள்

மிக அந்தரங்கமான விருப்பங்களில் பிரியமுற்று அழுந்தி நிற்கும் போதுகளில் அப்படி அழுந்தி நிற்கிற மனமும் அந்த மனத்துக்குச் சொந்தமானவரும் இந்த உலகில் அநாதையாகவும் நிர்க்கதியாகவும் தன்னந் தனியே கைவிடப் பெறுகிறார்கள்.

ருந்த மனிதர்தான் சத்தியமூர்த்தியின் பதவிக்குப் போட்டியாக வந்தவராக இருக்க வேண்டும் என்று அவளால் அநுமானம் செய்துகொள்ள முடிந்தது. அந்த மனிதருக்கு ஐம்பது வயதுக்கு இரண்டொன்று குறைவாகவோ, கூடவோ இருக்கலாம் என்று தோன்றியது. 'பதவிக்காலம் முடிந்து ஓய்வு பெறுவதற்குச் சில ஆண்டுகளே இருக்கும்போது ஏற்கெனவே வேலை பார்க்கிற இடத்திலேயே தொடராமல் இந்த முரட்டு மனிதர் சத்தியமூர்த்திக்குப் போட்டியாக இங்கு ஏன் வரவேண்டும்?' என்று நினைத்து ஒரு பாவமும் அறியாத அந்த மூன்றாம் மனிதர் மேல் கோபப்பட்டாள் அவள். வயதானவராகவும், முன் அநுபவம் உள்ளவராகவும் இருக்கிறார் என்ற காரணங்களால் தன் தந்தையே இந்த மனிதரைத் தேர்ந்தெடுத்து விடுவாரோ என்ற பயமும் அவள் மனத்தில் பற்றியிருந்தது. எது நடக்கும், எது நடக்காது என்று முடிவாகத் தெரிந்து கொள்ள இயலாத அந்த நிலையில் பொறுமை யிழந்து போய்த் தவித்தாள் பாரதி. ஞாபகத்

தின் எல்லாப் பக்கங்களும் ஒரே நினைவில் ஆரம்பமாகி ஒரே நினைவில் முடிந்திருந் போல் அந்த ஒரே ஒரு நாளில்தான் அவ்வளவு பெரிய பைத்தியமாக ஆனது எப்படி என்று எண்ணித் தன்னைத் தானே வியந்து கொண்டாள் அவள்.

சத்தியமூர்த்தியை 'இண்டர்வ்யூ' செய்த போது தன் தந்தையும் கல்லூரி முதல்வருமே இருந்ததுபோல் அல்லாமல் இப்போது 'ஹெட்கிளார்க்' வேறு புதிதாக வந்திருப்பது அவளுடைய சந்தேகத்தை வளர்த்தது. 'ஒரு வேளை ஹெட்கிளார்க்கினிடம் சொல்லி இந்த மனிதருக்கு நேரிலேயே கொடுத்து விடுவதற்காக ஆர்டர் டைப் செய்ய ஏற்பாடாகிறதோ?' என்று பயப்படுவதற்குரிய சந்தேகம் ஒன்றைத் தானாகவே நினைவில் கற்பித்துக் கொண்டது அவள் மனம். எதை எதையோ எண்ணி மனம் குழம்பினாள் அவள். காலையில் தன் தந்தையும் சத்தியமூர்த்தியும் பேசிக் கொண்டிருந்த பேச்சின் முடிவில் 'இந்தக் கல்லூரிக்கு இது வரை பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் வந்திருக்கிற அத்தனை பேரிலும் நீங்கள் ஒருவர்தான் மிக இளம் பருவத்தினராக இருப்பீர்கள் என்று தோன்றுகிறது' என்ற வார்த்தைகளைச் சத்தியமூர்த்தியிடம் தன் தந்தை சொல்லி விட்டுத் தயங்கியதையும் இந்தத் தயக்கத்தை அடுத்து இதன் காரணமாகவே வளர்ந்த உரையாடலில் இருவருக்குமிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டதையும் இப்போது ஞாபகப்படுத்திக் கொண்டு பயந்தாள் பாரதி.

'அவரும்தான் அப்படித் துடுக்குத்தனமாகப் பேசி அதுவரை தன்னைப் பற்றி அப்பாவின் மனத்தில் வளர்த்துக் கொண்டிருந்த நல்ல அபிப்பிராயத்தை அந்த ஒரு விநாடிப் பேச்சில் கெடுத்துக் கொண்டிருக்க வேண்டாம். அவர்தான் ஏதோ பேசி விட்டார் என்றால் அப்பாவாவது அந்தச் சிறிய காரியத்தை மறந்து பெருந் தன்மையாக நடந்து கொள்ளக் கூடாதா? வயதில் இளைஞர் என்ற ஒரே காரணத்துக்காகச் சத்தியமூர்த்தியைப் புறக்கணித்து விட்டு இப்போது வந்திருக்கும் இந்த முதியவருக்கு அந்த வேலையைக் கொடுப்பார்கள் என்று எண்ண முயலும் போதே அந்த எண்ணத்திலுள்ள ஏமாற்றத்தின் மிகுதியைத் தாங்க முடியாமல் மண்டை வெடித்து விடும் போல் இருந்தது பாரதிக்கு.

அப்பா இருந்தாற் போல் இருந்து திடீரென்று அப்படி ஓர் அநியாயத்தைச் செய்வார் என்பதையும் அவள் மனமார எதிர்பார்த்து நம்பி ஒப்புக் கொண்டு விடத் தயாராக இல்லை. அப்படிச் செய்கிறவராக இருந்தால், 'உங்களைப் பல விதங்களில் எனக்குப் பிடித்திருக்கிறது' என்றும் 'உங்களைப் போல் ஆர்வம் மிக்க இளைஞர் ஒருவரைச் சந்தித்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி'— என்றும் சத்தியமூர்த்தியோடு பேசிக் கொண்டிருந்த போதும் ஊருக்குச் செல்ல விடை பெறும்போதும் அவரிடம் அப்பா சொல்லியிருக்க மாட்டார். சத்தியமூர்த்தியும் அப்பாவும் பேசிக் கொண்டிருந்தவற்றையும், பேசிக் கொண்டிருந்தபோது நடந்தவற்றையும் ஒவ்வொன்றாக நினைவுகூர முயன்றாள் அவள். அவ்வாறு நினைத்துப் பார்த்தபோது, சத்தியமூர்த்தி தன் பேச்சாலும் தான் நடந்து கொண்ட முறையாலும் தன் தந்தையைக் கவர்ந்த இடங்களே அதிகமாகவும் கவரத் தவறிய இடம் குறைவாகவுமே அவளுக்குத் தோன்றியது. அந்த இளைஞருடைய சாமர்த்தியமான உரையாடலைக் கேட்டுத் தந்தையின் முகம் வியந்து மலர்ந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் ஞாபகம் கொண்டு மகிழ்ச்சி பெற முயன்றாள் அவள். மகிழ்ச்சிக்குரிய பல சந்தர்ப்பங்களாகத் தேடி ஒன்று சேர்த்து அவள் நினைக்க முயலும்போது சிறிதும் மகிழ்ச்சியைத் தர முடியாத ஏதோ ஒரு சந்தர்ப்பம் மட்டும் நினைவில் முந்திக் கொண்டு பாய்ந்து வந்தது. மனம் அதற்கு உடைமைக்காரர்களோடு ஒத்துழைக்காத நேரங்களில் இதுவும் ஒன்று. நினைக்க விரும்புவது எதுவோ அது நினைவில் வந்து பதியாமல் நினைக்க விரும்பாததும் நினைக்கக் கூடாததும் நினைவு வந்தால் வேதனை தரக் கூடியதுமான ஏதோ ஒன்று மட்டுமே நினைவு வந்து சந்தோஷகரமான மற்றவற்றின் வரவை வழியடைத்துக் கொள்கிற நுணுக்கமான துயரத்தை மீற முடியாது தவித்தாள் அவள்.

அன்று காலையில் இண்டர்வியூ முடிந்த பின் தன் தந்தையும் அவரும் வேறு எதையோ பற்றி உரையாடிக் கொண்டிருக்கையில், 'நான்தான் இனிமேல் இந்த ஊருக்கே வந்துவிடப் போகிறேனே'— என்று அவர் புன்முறுவலோடு கூறிய போது ''நீங்கள் இங்கே வரவேண்டுமென்று இன்னும் அதிகாரபூர்வமாக நாங்கள் தெரிவிக்கவில்லையே?'' என்று தந்தை சிரித்தபடியே மறுத்த சம்பவம் நினைவில் வந்தது அவளுக்கு. இரண்டு பேருமே வேடிக்கையாகப் பேசிக்கொண்டார்கள் என்று அந்தச் சம்பவத்தைச் சாதாரணமாக ஒதுக்கிவிட முயன்றாலும் அதுவே திரும்பத் திரும்ப அவள் நினைவில் வந்து அதற்கு அப்பால் வரக் காத்திருந்த மற்ற நம்பிக்கைகளின்

ஏன்?

இந்த ஹேர் ஆயில்கள் உங்கள் கூந்தலுக்குச் சிறந்தவை



காரணம், இவை
ஆரோக்கியமும்
நறுமணமும்
அளிக்கின்றன.



டாடாவின் தூய, தாவர ஹேர் ஆயில்கள் அடி மண்டை ஓட்டுக்குக் குளிர்ச்சியூட்டி, கூந்தல் அடர்த்தியாக வளரவும், பாங்காகப் பரிமளிக்கவும் உதவுகின்றன. கோகோனட் அல்லது கேஸ்டர் ஹேர் ஆயிலைத் தேர்ந்தெடுங்கள். ஆனால் அது டாடா தயாரிப்புதானா என்பதை மட்டும் உறுதி செய்துகொள்ளுங்கள். தராதரம் தெரிந்தோர் அதைத்தான் எப்போதும் செய்கிறார்கள்.


டாடாவின் கோகோனட் ஹேர் ஆயில்: 3 வித சைஸ்களிலும், ரோஜா, மல்லிகை, லாவண்டர், புஷ்பா ஆகிய 4 நறுமணங்களிலும் கிடைக்கிறது. டாடாவின் கேஸ்டர் ஹேர் ஆயில்: 3 வித சைஸ்களில் ரோஜா நறுமணத்துடன் கிடைக்கிறது.

டாடாவின் ஹேர் ஆயில்களை வாங்கும்போது சிவப்பு. மற்றும் பொன்னிற லேபில்களைக் கவனித்து வாங்குங்கள்

THOY-45 TAM.



மின்சாரச் செலவு குறைவு



கண்கவர் அமைப்புள்ள கணேஷ் டிலேட விசிறிகள் சிறிதும் சப்தமின்றி சுற்றுவதுடன் பல்லாண்டு காலம் பழுதடையாமல், சிறந்த உழைப்பளிக்கிறது. அதிகப்படியான காற்றோட்டத்திற்காக இந்த விசிறியின் பிளேடுகள் விஞ்ஞான முறையில் அமைக்கப்பட்டு, மிக நுட்பமாக இணைக்கப்பட்டிருக்கின்றன.

கணேஷ்

டிலேட் விசிறிகள்

கணேஷ் பிளவர் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
64-65 நஜப்கர் ரோடு, புது டில்லி-15

சென்னை டிப்போ : நெ. 2, தம்பு செட்டித் தெரு (போன் : 21680)
விஜயவாடா டிப்போ : சாம்ரங்கம் சௌக்

மைசூருக்கு சோல் ஏஜண்டுகள் :
அசோகா எலக்ட்ரிகல் & என்ஜினீயரிங் கம்பெனி
6-T பிரிகேட் ரோடு, பெங்களூர் (போன் : 4200)

மதுரைக்கு டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
1. நெல்லை டிரேடிங் (மதுரை) கோ., மதுரை
2. சைகிள் வேர் ஹவுஸ், மதுரை
3. சைகிள் சென்டர், ஸ்ரீவில்லிபுத்தூர்

திருநெல்வேலி ஜில்லாவுக்கு டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
ஸிட்டி எலெக்ட்ரிக் ஸ்டோர்ஸ்
உமா பில்டிங்ஸ், கூலக்கடை பஜார், திருநெல்வேலி-6

கன்னியாகுமரி ஜில்லாவுக்கு டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
ஷிவ்ராஜ் எலெக்ட்ரிகல்ஸ், நாகர்கோவில்



கோபால் பல்பொடி

பல் வலி, பல் அரணை, வாய் நாற்றம்
பல்லில் இரத்தம் வடிதல், முதலிய
பல் வியாதிகளை குணப்படுத்தி
பல்களுக்கு வெண்மையும்
பலத்தையும் தருகிறது.



தயாரிப்பவர்கள் :— எஸ்.பி.எஸ். ஜெயம் அண் கோ,
25, கீழ நாப்பாளையத் தெரு...... மதுரை.

MINERVA

பாதையை மறிக்கலாயிற்று. மனத்தின் பலவீனமான வேளைகளில் இதுவும் ஒன்று. ஓர் அவநம்பிக்கை பத்து நம்பிக்கைகளை மறைத்துவிட முடிகிறது. அல்லது மறக்கச் செய்ய முடிகிறது. பத்து நம்பிக்கைகள் சேர்ந்து ஓர் அவநம்பிக்கையை மறைத்துவிட அல்லது மறக்கச் செய்துவிட முடிவதில்லை. அந்த நேரத்து இதயத்தின் தவிப்பில் அவள் இதை நன்றாக உணர முடிந்தது. சத்தியமூர்த்தியே அந்தப் பதவிக்கு உரியவனாக நியமிக்கப் பெற்று மறுபடி மல்லிகைப் பந்தலின் மண்ணில் அவனைக் கண்டாலொழிய அந்த ஊரே பொலிவில்லாமல் போய்விடும் போல் அவள் உருகித் தவித்தாள். இப்படி எதற்காகவும் அவளுடைய வாழ்க்கையில் அவள் இதுவரை தவிக்க நேர்ந்ததில்லை. இந்த அநுபவம் அவளுக்கு ஏற்படுவது இதுவே முதல் தடவை.

''இவர்களுக்கு எல்லாம் தேநீர் கொண்டு வா அம்மா!'' என்று தந்தை குரல் கொடுத்தபோது, 'நான் எதற்காக என் கைகளால் இவர்களுக்குத் தேநீர் கொடுக்க வேண்டும்?' — என்ற வெறுப்போடு வேலைக்காரனைக் கூப்பிட்டுக் கொடுத்தனுப்பினாள் பாரதி.

''முன் அறையில் கொண்டு போய்க் கொடு. காலேஜ் ஆட்கள் யாரோ வந்திருக்காங்களாம்..'' என்று வார்த்தைகளையும், ட்ரேயையும் வேண்டா வெறுப்பாக வேலைக்காரனிடம் கொடுத்தவளுக்கு அந்தத் தேநீரைக் குடிக்க இருப்பவர்கள் மேலெல்லாம் எதற்காகவோ கோபப்பட வேண்டும் போல் இருந்தது. வேலைக்காரனை முன் அறைக்கு அனுப்பிவிட்டு ஒரு வேலையும் ஓடாதபோது எந்த வேலையை எதற்காகச் செய்து கொண்டிருக்கிறோம் என்ற ஞாபகமே இன்றிச் செய்யப்படும் பரவசமான காரியமாய்த் தோட்டத்தின் பக்கமாய் இறங்கிச் சென்றாள் அவள். நல்ல சிவப்புமில்லாமல் நல்ல வெளுப்புமில்லாமல் எப்படியிருந்தால் கண்களில் உறுத்தாமல் மென்மையாகத் தோன்ற முடியுமோ அப்படி நளினமான சிவப்பு நிறத்தில் ரோஜாப் பூக்கள் ஆடிச் சிரித்துக் கொண்டிருந்தன. ரோஸ் என்ற நிறத்துக்கே இந்தப் பூவைப் பார்த்த பிறகுதான் லட்சணமும் பெயரும் கிடைத்திருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. அதுவரை பெய்து கொண்டிருந்த மழை அப்போதுதான் நின்று போயிருந்ததனால் இலைகளிலும் பூக்களிலும் நீர் சிலிர்த்து நின்றது. பன்னீரில் குளித்துவிட்டு நிற்கும் கந்தர்வ லோகத்துக் குழந்தைகளின் முகங்களைப் போல் தோட்டத்துப் பூக்கள் அப்போது பொலிந்து கொண்டிருந்தன. பளீரென்ற வெளுப்புமில்லாமல் கண்ணைக் குத்தும் கருஞ்சிவப்புமில்லாமல் சாயங்கால வானத்தில் ரோஜாக் குவியலாய்க் கொட்டிக் கிடக்கும் சில மேகங்களைப் போல் ஒரு நிறத்தையே தனக்குப் பெயராகப் படைத்துக் கொண்டு தன் நிறத்தால் ஒரு பூவுக்கு அழகாகி நிற்கும் அவற்றைப் புதிய கண்களுடன் அன்றுதான் அப்படி முதன் முதலாகப் பார்க்கிறவள் போல் பார்த்தாள் பாரதி. அந்தப் பூக்களின் இளஞ் சிவப்பு நிறமும் சாயங்கால வானத்தில் தவழும் ரோஸ் மேகங்களும் நினைவு வந்தபோது அவற்றின் தொடர்ச்சியாகச் சத்தியமூர்த்தியின் அழகிற் சிறந்த பாதங்களையும் நினைத்தாள் அவள். நினைத்தாள் என்று சொல்வதை விடப் பொருத்தமாக அதைச் சொல்வதானால் அந்த நிலையில் அவளால் அவற்றை நினைக்காமல் இருக்க முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

'பாதங்கள் மட்டுமென்ன? முகம், உதடுகள், உள்ளங்கைகள் எல்லாமே ரோஜாப் பூக்களாகத்தான் அவருக்கு வாய்த்திருக்கின்றன. அவருக்கென்றே வாய்த்த நிறமா அது?' என்று எண்ணி அந்த எண்ணத்தின் விளைவாகத் தனக்குத் தானே கூச்சமுற்று நாணினாள் அவள்.

காரில் தன்னுடன் வரும்போது, 'உங்கள் ஊர் மல்லிகைப் பூக்களின் வாசனையை எப்படிப் புகழ்வதென்றே தெரியவில்லை' என்று சத்தியமூர்த்தி கூறியிருந்த சொற்கள் இப்போது ஞாபகம் வந்தன அவளுக்கு. அந்த ஞாபகத்தைக் கருத்தில் கொண்டு அப்போது தான் நின்று கொண்டிருந்த இடத்துக்கு மிக அருகில் உள்ள குடை மல்லிகைச் செடியிலிருந்து இரண்டு பூக்களைப் பறித்துக் கூந்தலில் சொருகிக் கொண்டாள் பாரதி. அந்தப் பூக்கள் இரண்டும் அவற்றைச் சார்ந்த நினைவுமாக இணைந்து அதிகமாய் மணப்பது போல் இருந்தது. இலைகளே இல்லாமல் செடி முழுதும் பூக்களே நிறைந்த ஒரு ரோஜாச் செடியைக் கற்பனை செய்து கொண்டு பார்த்தால் எப்படி இருக்குமோ அப்படித்தான் சத்தியமூர்த்தியின் பொன் மேனியையும் கற்பனைசெய்யத்தோன்றியது அவளுக்கு. மல்லிகைப் பந்தல் என்ற மலை நாட்டு நகரத்தின் செம்மண் நிலம் மழை பெய்ததன் காரணமாக அன்று எப்படி நெகிழ்ந்து போயிருந்ததோ அப்படியே சத்தியமூர்த்தியைப் பற்றிய நினைவுகளால் அவள் மனமும் நெகிழ்ந்து போயிருந்தது. சுருக்கமாகச் சொன்னால் அவள் பைத்தியமாகியிருந்தாள். தோட்-

டத்திலிருந்து வீட்டுக்குள்ளே போய் மறுபடியும் அவள் தன் தந்தையின் அறையருகே சென்றபோது இண்டர்வியூவுக்கு வந்திருந்த மீசைக்காரர் விடை பெற்றுக் கொண்டிருந்தார். அவரை அனுப்பி விட்டுத் தந்தையும், முதல்வரும், ஹெட்கிளார்க்குமாக ஏதோ பேசி விவாதிக்கத் தொடங்கவே அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைக் கேட்பதற்காகப் பாரதி திரை ஓரமாக நாற்காலியை எடுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தாள். நிச்சயமாக அவர்கள் அப்போது ஆலோசனை செய்து விவாதிக்கிற விஷயம் 'தமிழ் விரிவுரையாளராக யாரை நியமிப்பது?' என்பதைப் பற்றியதாகவே இருக்கும் என்று தோன்றியது அவளுக்கு. முதலில் கல்லூரி முதல்வர்தான் பேச்சை ஆரம்பித்தார்:

''ஐந்தாறு ஆண்டுகளாவது 'சர்வீஸ்' உள்ளவராக இருந்தால்தான் ஒருவர் நமக்குப் பயன்படுகிற நல்ல விரிவுரையாளராக அமைய முடியும். இப்போது வந்துவிட்டுப் போகிற இந்த முதியவர் நிறைய ஆண்டுகள் முன் அநுபவம் உள்ளவராக இருக்கிறார். இன்னொரு தகுதி — வயதானவராகவும் இருக்கிறார்...''

''அப்படியெல்லாம் தகுதிகளிருந்தும் இப்போது தாம் வேலை பார்த்துக் கொண்டிருக்கிற கல்லூரியை விட்டு விட்டு இங்கே எதற்காக வரவேண்டும் என்கிறார்?''

—சிரித்தபடி இப்படி வினவிய குரல் தன் தந்தையினுடையதாக இருக்



கவே பாரதிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்து 'அப்ளாஸ்' கொடுப்பது போல் தட்டிவிட இருந்தவள் தான் உட்கார்ந்திருந்த இடம், சூழ்நிலை ஆகியவற்றால் எச்சரிக்கை பெற்று இரண்டு கைகளையும் சேர்த்து ஓசைப்படாமல் பிரித்தாள். பிரின்ஸிபலும் தந்தையுமே விவாதித்தார்கள். ஹெட் கிளார்க் பயபக்தியோடு அடக்கமாக ஒதுங்கி நின்று கொண்டிருந்தார். பிரின்ஸிபலின் வலுவற்ற மறுமொழிகளையும் தந்தையின் வலுவான வினாக்களையும் பாரதி மிக அருகிலிருந்து மறைவாகக் கேட்க முடிந்தது.


''ஒருவேளை நம் கல்லூரியில் விரிவுரையாளர்களுக்குச் 'சம்பள ஸ்கேல்' அதிகம் என்று வருகிறார் போலிருக்கிறது...?'' என்று வார்த்தைகளை இழுத்து இழுத்து நிறுத்தித் தயங்கியபடியே மெல்லச் சொன்னார் கல்லூரி முதல்வர்.

''இப்போது அவர் இருக்கிற இடத்தை விட்டு இங்கே சம்பளம் அதிகம் என்ற ஒரே காரணத்துக்காக மட்டும் வருகிறவராயிருந்தால் நாளைக்கு இதைவிட அதிகமாகச் சம்பளம் கிடைக்கிற ஓர் இடம் தெரிந்தால் இங்கே விட்டுவிட்டு அங்கே போக மாட்டார் என்பது என்ன நிச்சயம்?''

—கல்லூரி முதல்வரால் இந்தக் கேள்விக்கு ஒரு மறுமொழியும் கூற முடியவில்லை. மௌனம் நிலவியது. பின்பு அவள் தந்தைதான் முதலில் பேசினார்: ''பிரின்ஸிபல் சார்! காலையில் வந்திருந்த பையனை எனக்கு எல்லா விதங்களிலும் பிடித்திருந்தது. எதை யெடுத்தாலும் விவாதம் செய்து எதிர்த்துப் பேசுகிறான் என்கிற துடுக்குத்தனம் ஒன்றைத் தவிரத் தோற்றம் படிப்பு எல்லாம் திருப்திகரமாயிருந்தன... வயது கொஞ்சம் குறைவு.....மற்றப்படி....''

''எனக்கென்னமோ அவனைப் பார்த்தாலே பயமா யிருக்கிறது. எடுத்தெறிந்து பேசுகிறான். அவனுடைய மொழி வெறியைப் பார்த்தால் ஏதாவது அரசியல் கட்சிகளில் பங்கு கொண்டிருப்பானோ என்று கூடச் சந்தேகப்படுகிறேன். அவன் படித்த கல்லூரியும் அப்படிப்பட்டது. இப்படிப்பட்ட குறும்புத்தனமான திறமைசாலி ஒருவன் நம் கல்லூரியில் புகுந்து கொண்டு மாணவர்களையெல்லாம் தனக்குத் தலையாட்டுகிறவர்களாக மாற்றிக் கவர்ந்துவிட்டால் பின்பு கல்லூரி நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்துவது எனக்கு ஒவ்வொரு நாளும் ஒரு பிரச்னையாயிருக்கும். இளம் பருவமும் தோற்றப் பொலிவும் கேட்பவர்களை மயக்கிவிடுகிற பேச்சுக் கவர்ச்சியும் உள்ள இத்தகைய இளைஞனால் மாணவர்கள் மனங்களை விரைவில் கெடுக்க முடியும்...''

''மொத்தத்தில் நீங்கள் பயப்படுகிறீர்கள்! இல்லையா?'' என்று பிரின்ஸிபலைப் பார்த்துக் கேட்டுவிட்டு நகைத்தார் பூபதி. எந்த அர்த்தத்தில் நகைத்தார் என்று புரிந்துகொள்ள முடியாத நகைப்பா யிருந்தது அது. சாமர்த்தியசாலிகளை எதிரே சந்திக்கப் பயப்படுகிற




அந்த 'அப்பாவிப் 'பிரின்ஸிபலே' எண்ணி நகைக்கிறாரா, சத்தியமூர்த்தியின் துடுக்குத்தனத்தை இகழ்ந்த பாவனையில் நகைக்கிறார்—என்று எதிராளி விளங்கிக் கொள்ள முடியாமலிருந்தது அந்தச் சாதுரியமான சிரிப்பு.

அவர்களுடைய உரையாடலின் கடைசிப் பகுதியைக் கேட்டுக் கொண்டிருந்த பாரதிக்கு நெஞ்சு 'திக் திக்' என்று வேகமாக அடித்துக் கொண்டது. பிரின்ஸிபல் பேசிய அநியாயத்தை நினைத்து ஆத்திரத்தோடு கைகளைச் சொடுக்கினாள் அவள். நல்ல வேளையாக அவளுடைய நம்பிக்கை முற்றிலும் வாடிக் கருகி விடாமல் அவள் தந்தையின் பேச்சு சிறிது ஆறுதல் அளிப்பதாக இருந்தது. சத்தியமூர்த்தி துடுக்குத்தனமாக எதிர்த்துப் பேசியது தன் தந்தையின் மனத்தைப் பாதித்திருந்தாலும் அவருடைய திறமைகளைத் தந்தை ஓரளவு புரிந்து கொண்டு மதிப்பதை அவள் இப்போது தெரிந்து கொண்டுவிட்டாள். 'பிரின்ஸிபல் பிடிவாதமாக இருந்து காரியத்தைக் கெடுத்துவிட்டால்...?' — என்ற கேள்வி எழுந்தபோது அவளுக்கு ஒரே மலைப்பாயிருந்தது. இந்த நிலையில் சத்தியமூர்த்திக்காக ஏங்கும் அவள் மனம் சுறுசுறுப்பாகச் சிந்தனை செய்தது. தந்தையின் மனத்தில் இப்போதே சத்தியமூர்த்தியின் தகுதியைப் பற்றி முக்கால் வாசி நல்ல அபிப்பிராயம் நிறைந்திருக்கிறது. நிறையாமல் இருக்கிற மீதிக் கால் பகுதியையும் எப்படியாவது நிறையும்படி செய்துவிட்டால் கவலை இல்லை. யாருக்கு ஆர்டர் கொடுப்பது என்பதைப் பற்றி அவர்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. 'அவர்கள் இனி என்ன முடிவு செய்யப் போகிறார்களோ?' என்ற கவலை ஒரு புறம் இருந்தாலும் இந்த விநாடி வரை அவர்கள் ஒரு முடிவும் செய்யவில்லை என்பதே ஒரு திருப்தியாயிருந்தது அவளுக்கு. அந்தக் கல்லூரியிலும் அதன் இலட்சியங்களிலும் பரிபூரணமான ஆர்வமுள்ளவர்களும், நம்பிக்கை உள்ளவர்களுமே அங்கு வேலைக்கு வரவேண்டுமென்று தாம் எதிர்பார்ப்பதாகக் கல்லூரி விழாக்களில் தலைமையுரையாற்றும் சந்தர்ப்பங்களில் பலமுறை தந்தை பேசியிருப்பதை அவளே கேட்டிருக்கிறாள். தனக்கு அங்கு வரவேண்டுமென்ற ஆர்வம் மெய்யாகவே இருப்பதாகக் கல்லூரியைச் சுற்றிப் பார்த்துவிட்டு விடை பெறும்போது சத்தியமூர்த்தி தன்னிடம் கூறியதை நினைத்துக் கொண்டாள் பாரதி. தானே அவருக்கு ஒரு கடிதம் எழுதி 'நீங்கள் மெய்யான ஆர்வமும் இலட்சியமும் கொண்டுதான் இந்தக் கல்லூரிக்குப் பணியாற்ற வர விரும்புவதாகவும், என் தந்தையின் கல்விப் பணியில் உள்ள புனித இலட்சியங்களைப் பாராட்டுவதாகவும் அவருக்கு நேரடியாக ஒரு கடிதம் எழுதுங்கள்! நான் இங்கிருந்து தூண்டி எழுதச் சொல்லியதாகத் தெரிய வேண்டாம். நீங்களாகவே ஊர் திரும்பியதும் அவருக்கு எழுதுவது போல் உடனே எழுதுங்கள். இது மிகவும் அவசியம்' என்பதைத் தெரிவிக்கலாமா என்று எண்ணினாள். முன் பின் தெரியாது ஒரு நாள் பழகிய ஆண் மகன் ஒருவனுக்கு அப்படித் திடீரென்று தான் கடிதம் எழுதலாமா என்ற தயக்கமும் பயமும் சூழ்ந்து கொண்டு அவளைத் தடுத்தன. சத்தியமூர்த்தியே அந்தக் கடிதத்தைப் படித்துத் தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டால் என்ன செய்வதென்றும் அவளுக்குப் பயமாக இருந்தது. தந்தையின் மனத்தை முற்றிலும் மாற்றுவதற்கு இதைத் தவிர வேறு வழி இருப்பதாகவும் அவளுக்குத் தெரியவில்லை. தான் இதைச் செய்யலாமா கூடாதா என்று சிந்தித்துத் தவித்தபோது அவள் உடலில் குப்பென்று வேர்த்துக் கொட்டியது. அவளுடைய மனமும் எண்ணங்களும் போராடின. அவள் மனம் யார் மேல் எந்த விநாடியில் சத்தியத்தின் ஆழம் நிறைந்த அன்பைச் செலுத்தத் தொடங்கியதோ அந்த அன்புதான் வென்றது. அவள் பைத்தியமானாள். ஏதோ நான்கு வாக்கியங்கள் எழுத வேண்டுமென்று ஆரம்பித்த கடிதம் முழுமையாக இரண்டு தாள்களில், நான்கு பக்கங்களுக்கு வளர்ந்துவிட்டது. ஒவ்வொரு வாக்கியத்தின் வார்த்தைகளையும் எழுதிக் கொண்டிருக்கிற போதே 'தான் எவ்வாறு இப்படித் துணிந்தோம்? இப்படி ஓர் இளைஞனுக்குக் கடிதம் எழுதும் துணிவு தனக்கு எப்படி வந்தது?' என்ற வியப்பு அவளுள்ளே விசுவரூபம் எடுத்து அவளுள்ளேயே ஒடுங்கிக் கொண்டிருந்தது. அன்பின் ஆழத்திலிருந்து துணிவு பிறந்ததா, துணிவு பிறந்ததனால் அந்த அன்பு ஆழமாகியதா என்று காரண காரியங்களைப் புரிந்து கொள்ள முடியாமலே விநோதமானதொரு தைரியத்தை அவள் அப்போது ஆண்டு கொண்டிருந்தாள். வெறி பிடித்தவள் போல் முனைந்து அந்தக் கடிதத்தை எழுதி முடித்த பின் ஏதோ மனத்தில் தோன்றவே, நாணமும் புன்னகையும் சாயலிடும் முக பாவத்தோடு சற்று முன்புதான் தனது கூந்தலின் உள் முடியில் சொருகிக் கொண்டிருந்த அந்த இரண்டு குடைமல்லிகைப் பூக்களையும் அவசரமாகவும் பரபரப்புடனும் எடுத்துக் கடிதத் தாள்களின் மடிப்புக்குள்

வைத்து உறையிலிட்டு ஒட்டினாள். 'எந்த முகவரிக்கு இதை அனுப்புவது' என்ற முக்கியமான பிரச்னை எல்லா முக்கியமான பிரச்னைகளும் — வழக்கமாக ஞாபகம் வருவதைப் போல் கடைசியில் ஞாபகம் வந்து அவளைத் திணறச் செய்தது. அப்பாவின் அறைக்குள் அவர் மேஜை மேல் அந்த ஆண்டு கல்லூரியின் எல்லாப் பதவிகளுக்கும் விண்ணப்பம் அனுப்பியிருந்தவர்களின் முகவரி டைப் செய்யப்பட்டு இருக்கும் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் 'அதை எப்படி எடுப்பது?' என்ற தயக்கத்தோடு அவள் திரையை விலக்கி முன் பக்கத்து அறைக்குள் எட்டிப் பார்க்கவும் பிரின்ஸிபலோடும் ஹெட் கிளார்க்கோடும் பேசிக்கொண்டே அப்பா வெளிப்புற வராந்தாவுக்குச் செல்லவும் சரியாயிருந்தது. பதறும் கால்களால் பூனை போல் அடியெடுத்து வைத்து அப்பாவின் மேஜையருகே சென்று டைப் செய்த காகிதங்களைப் புரட்டினாள் அவள். அந்த முகவரிகள் மேலாகவே இருந்தன. மூன்றே மூன்று வரிகளில் பெயர், எண், தெருப் பெயர், ஊர் என்ற வரிசைப்படி இருந்த சத்தியமூர்த்தியின் முகவரியை நன்றாக ஞாபகத்தில் பதித்துக் கொண்டு உள்ளே ஓடிப்போய் உறையில் அதை அவசர அவசரமாக எழுதினாள். அப்படி எழுதும்போதே அந்த முகவரி அவள் மனத்தில் நிரந்தர ஞாபகமாகப் பதிந்து கொண்டது. பங்களா வாசலில் எதிர்ப்புறம் மரத்தடியில் தபால் பெட்டி உண்டு. வேறு யாரிடமும் கொடுப்பதற்கில்லை என்பதால் அப்பாவுக்குத் தெரியாதபடி தானே நேரில் போய்த் தபாலில் சேர்த்துவிட்டு வர எண்ணி அப்பா எங்கே இருக்கிறார் என்று பார்த்தாள் பாரதி. வராந்தாவின் மேலக் கோடியில் பிரின்ஸிபலோடும், ஹெட் கிளார்க்கோடும் பேசிக் கொண்டிருந்தார் அப்பா. செடிகளின் மறைவில் பதுங்கிப் பதுங்கி வெளியேறித் தெருவுக்கு வந்தாள் அவள். அப்போதுதான் தபால் பெட்டியைத் திறந்து மஞ்சள் பையில் கடிதங்களை அள்ளிப் போட்டுக்கொண்டிருந்தான் தபால் இலாகா ஊழியன். ஓடிப்போய் அவள் அந்த உறையைப் பெட்டியில் போட்டாள். தபால் ஊழியன் அதையும் சேர்த்துத் தபால் பையில் அள்ளிப் போடுவதைத் தன் கண்களாலேயே அவள் பார்த்துக் கொண்டு விட்டாள். அப்போது தனக்குப் பின்னால் யாரோ வந்து நிற்பது போலவும் கவனிப்பது போலவும் தோன்றவே அவள் திரும்பினாள். திகைத்தாள். (தொடரும்)

காதுக்குள்ளே நடப்பதென்ன ?



அமைதியான ஓர் இடம். எங்கோ ஒரு மெல்லிய ஓசை உண்டாகிறது. அதை உன் காது உணர்ந்து விடுகிறது. அது மட்டுமல்ல, அது என்ன ஓசை என்பதையும் நீ ஊகித்து விடுகிறாய். இந்த உணர்வையும் ஊகத்தையும் உனக்கு அளிப்பது ஒரு சுத்தியல், கருமான் இரும்பை வைத்து அடித்து நீட்டுவானே பட்டடைக் கல் அது; குதிரை சவாரி செய்பவர் பாதம் வைக்க உதவும் வளையம், ஒரு நத்தை ஆகியவைதான்! ஏன் வியப்பாக இருக்கிறதா? உங்களுக்கே தெரிந்த விஷயம்தான். கொஞ்சம் விளக்கினால் புரிந்து விடும்.

உன் காதிலுள்ள டமாரம் போன்ற ஜவ்வுக்குப் பின்னால்தான், அதைத் தொட்டுக் கொண்டு மூன்று சின்னஞ்சிறிய எலும்புகள் இருக்கின்றன. இந்த எலும்புகளுக்குத்தான் சுத்தி (ஹாமர்) பண்டைக் கல் (ஆன்வில்) குதிரைச் சவாரி வளையம் (ஸ்டிர்ரப்) என்று பெயர். அவைகளின் உருவ அமைப்பு அப்படி இருப்பதால் இப்பெயரை அவைகளுக்குச் சூட்டியிருக்கிறார்கள். ஒலி அலைகளை இந்த மூன்று எலும்புகளும் தாங்கி, உன் காதினுள் இருக்கும் ஒருவித திரவத்தினுள் செலுத்துகின்றன. உன் காது விசித்திரமானதும் பல சிக்கல்களையும் கொண்டதொரு வளைவுப் பாதை. இந்த வளைவுப் பாதையில் நத்தையின் கூட்டைப் போல் ஒரு சின்ன எலும்பு உள்ளது. இதற்கு ஸ்நெயில் என்று பெயர். இதை மயிரிழை போன்ற ஆயிரக் கணக்கான உணர்ச்சி நரம்புகள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. திரவத்துக்கு முதலில் குறிப்பிட்ட அந்த மூன்று எலும்புகளும் கொண்டு வந்து சேர்த்த அதிர்ச்சியை இந்த நரம்புகள் தாங்கி மூளைக்குக் கொண்டு சேர்க்கின்றன. மிக மெல்லிய ஓசையையும் அது குண்டூசி விழுந்ததால் ஏற்பட்டது என்பதையும் நீ உணர்ந்து கொள்ளுகிறாய். இமைக்கும் நேரத்துக்குள் உன் மூளை இதை உனக்கு அறிவிப்பதற்குள் உன் காதினுள் இத்தனை காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை நினைக்க வியப்பாக இல்லை?

இவர்கள் என்ன செய்கிறார்கள்? விடை :- 1. அம்பு விடுகிறான் 2. படகுக்குத் துடுப்புப் போடுகிறான் 3. கூடைப் பந்தாட்டம் ஆடுகிறான் 4. கயிற்றைப் பற்றி ஏறுகிறான் 5. மாடு துரத்த ஓடுகிறான் 6. 'டக் அப் வார்' கயிறு இழுக்கிறான் 7. டென்னிஸ் விளையாடுகிறான் 8. உல்லாச நடை போடுகிறான் 9. ஸ்கிப்பிங் ஆடுகிறான் 10. சைக்கிள் விடுகிறான்.



வீடும் வாழ்வும் — 4

ஜப்பானியக் குடியானவன்

ஜப்பானில் பெரும் பகுதியினர் நிலத்தை நம்பியே வாழுகின்றனர். அதுவும் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு தமது மூதாதையர் எப்படி நிலத்தைப் பாடுபட்டுப் பண்படுத்திப் பயிரிட்டு வாழ்ந்தார்களோ அதே முறையில்தான் இன்றைய ஜப்பானியரும் வாழ்கிறார்கள். ஒவ்வொரு செழிப்பான நிலத்தையும், பள்ளத்தாக்கையும் அடுத்துப் பல கிராமங்களும் பண்ணைகளும் நெல் வயல்களுக்கு மத்தியில் அழகுறக் காட்சியளிப்பதைக் காணலாம். பீடபூமிகளில் தேயிலையையும் பட்டுப் பூச்சிகளுக்கான மல்பரி மரங்களையும் பயிரிடுகிறார்கள். நெல் வயல்களுக்கு மத்தியில் உருவாகி யிருக்கும் ஒரு பண்ணை வீட்டையே மேலே நீங்கள் பார்க்கிறீர்கள். ஈரம் தங்காதபடி கற்களைக் கொண்டு மேடாக்கப்பட்ட இடத்தில் இந்தப் பண்ணை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. கோடை காலத்துக் கடுமையான மழையிலிருந்து காத்துக் கொள்ள ஓடுகளுக்கு அப்பாலும் ஒருவிதப் புல்லைக் கொண்டு வேய்ந்திருப்பதைப் பாருங்கள். ஜப்பானியக் குடும்பத்தில் குழந்தைகள் உள்பட ஒவ்வொருவரும் உழைக்கிறார்கள். உழைப்பால் உயர்ந்த நாடல்லவா ஜப்பான்!

1 日
2 月
4 一
6 口
7 亖
9 木
11 手

சித்திரச் சீனமொழி

சீனக்காரர்களின் பாஷை சீன மொழி என்று உங்களுக்கெல்லாம் தெரியும். சீன எழுத்தைப் படிக்கா விட்டாலும் பார்த்திருப்பீர்கள். நாம் இடமிருந்து வலமாக எழுதுகிறோம். உலகிலுள்ள பாஷைகள் எல்லாமே இந்த வகையில்தான் எழுதப்படுகின்றன.

சீனர்கள் மேலிருந்து கீழே, நீங்கள் வாய்பாடு எழுதுவதைப் போல, எழுதுவார்கள். இவர்களின் மொழிக்குச் சித்திர எழுத்துக்கள் என்று பெயர். புராதன சீனர்கள் தங்கள் கருத்தைப் பிறருக்குப் படங்கள் மூலம் தெரிவித்தார்கள். உதாரணமாகச் சூரியன் என்று குறிப்பிட ஒரு வட்டத்தின் நடுவே ஒரு புள்ளி விட்டுக் குறித்தார்கள். சந்திரன் என்று எழுதப் பிறைச் சந்திர பிம்பத்தை வரைந்து அதன் நடுவே ஒரு புள்ளியிட்டார்கள். இந்தப் படங்களே பிற்காலத்தில் சீன எழுத்துக்களாக உருவெடுத்தன. கருப்பான மசியினால் தூரிகை கொண்டு சீனர்கள் தங்கள் மொழியான சித்திர எழுத்தை எழுதுகிறார்கள். இன்றைய சீன சித்திர எழுத்துக்கள், புராதன சீன எழுத்துக்களைப் போல் கலபமாகப் புரிந்து கொள்ள முடியாதவை. பிற மொழிகளில் பல எழுத்துக்கள் சேர்ந்து ஒரு சொல்லாகும். ஆனால் சீன மொழியில் ஒரு சித்திரமே ஒரு முழு வார்த்தையின் பொருளாகச் செயல்படும். சில சமயங்களில் இரண்டு சித்திரங்கள் ஒன்றுசேர்ந்தால் மூன்றுவதாக ஒரு வார்த்தை உருவாகி விடும்.

உதாரணத்துக்குச் சில சீன சித்திர எழுத்துக்களைப் பாருங்கள். முதல் படம் சூரியனைக் குறிக்கிறது. இரண்டாவது சந்திரன். இவை இரண்டையும் அருகருகே எழுதினால் (3) சந்திர சூரியர்களிடமிருந்து என்ன கிடைக்கும்? பிரகாசம் — இதுவே மூன்றுவது எழுத்தின் பொருள்.

நான்கு, அடிவானம். ஒன்றின் கீழ் நான்கை எழுதினால் அடிவானத்துக்குச் சற்று மேலே சூரியன். அதாவது சூரியோதயம். (5)

ஆறாவது எழுத்து வாயைக் குறிக்கிறது. ஏழாவது ஆவியைக் குறிக்கிறது. வாயிலிருந்து வெளிவரும் ஆவி — அதாவது வார்த்தைகள் — என்பதைக் குறிக்க ஆறின் மேலே ஏழை எழுத வேண்டும். (8)

ஒன்பதாவது படம் மரத்தைக் குறிக்கிறது. இரண்டு மரங்களை அருகருகே எழுதினால் அது கானகம் என்பதைக் குறிப்பதாகும். (10)

படம் பதினொன்றில் குறித்திருப்பது போம் போட்டால் கை என்று பொருள். இரண்டு கைகளை அருகருகே போட்டால், 'ஷேக் ஹாண்ட்ஸ்' - கைகுலுக்கும் நட்புணர்ச்சியைக் குறிக்கிறது. இதுதான் அந்தச் சின்னப் புத்திச் சீனர்களிடம் கிடையாதே என்கிறீர்களா? வாஸ்தவம்தான்!

3 明
5 旦
8 言
10 林
12 拜



இவர்கள் என்ன செய்கிறார்கள்?

வெள்ளி வெளுக்க

ரமணியின் அம்மா அன்று இரவு நடக்க இருந்த விருந்துக்காக உள்ளே வைத்திருந்த வெள்ளிப் பாத்திரங்களை வெளியில் எடுத்தாள். அவைகள் ஒளி இழந்து காணப்பட்டன. 'என்ன செய்வது?' என்று குழம்பித் தவித்த அம்மாவுக்கு ரமணி அபயமளித்தான். ஒரு பெரிய அலுமினியப் பாத்திரத்தினுள் வெள்ளிப் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் அலுமினியப் பாத்திரத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும்படி அடுக்கினான். இப்படி அடுக்கிய வெள்ளிப் பாத்திரங்களின் மீது கொதிக்கும் வெந்நீரை ஊற்றினான். பிறகு ஒரு பைண்ட் நீருக்கு ஒரு டீஸ்பூன் வீதம் சமையலுக்குப் பயன்படும் உப்பையும், பேக்கிங் பௌடரையும் ஊற்றிய நீருக்குத் தகுந்த அளவில் அதில் கலந்தான். வெள்ளிப் பாத்திரங்கள் இந்தக் கரைசலில் மூழ்கி இருந்தன. ஐந்து நிமிஷம் கழித்து, ஊறப் போட்டிருந்த வெள்ளிப் பாத்திரங்களை வெளியே எடுத்து நன்றாகக் கழுவிக் காய வைத்தபின் மிருதுவான துணியினால் அழுத்தித் தேய்த்தான். என்ன ஆச்சரியம்! புது வெள்ளிப் பாத்திரங்களைப் போல அவை பளபளத்தன. "சாப்பாட்டு உப்பு, பேக்கிங் பௌடர் இவைகளுக்குப் பதில் ஒரு பிடி வாஷிங் சோடாவை மட்டும் கூடப் போடலாம், அம்மா!" என்றான் ரமணி. மகனின் திறமையை எண்ணிப் பூரித்துப்போனாள் அவன் அம்மா.



பாரத நாட்டு வீர புத்திரன்

பாரதத்தின் தென்பகுதியில் ஹம்பியைத் தலைநகராகக் கொண்டு, விந்தியம் முதல் குமரி வரையில் விரிந்து பரந்து கிடந்த விஜய நகர சாம்ராஜ்யத்தின் புகழ் வளர்ந்தோங்கியிருந்த காலத்தில் நிகழ்ந்த கதை படமாக்கப்பட்டிருக்கிறது. விஜயநகர ஆட்சிக்கு உட்பட்டுப் பல குறுநில மன்னர்கள் இருந்தனர். அவர்களுள் குருவராயரும் ஒருவர். அவர் வெகு நாட்களுக்குப் பிறகு பிறந்த தம் ஒரே மகனைப் பார்ப்பதற்காக வெளியூரிலிருந்து ஆவலோடு வந்து கொண்டிருந்த போது அவரது தேர்ச் சக்கரத்தில் அடிபட்டு ஒரு சிறுவன் உயிர் இழக்கிறான். புத்திர சோகத்தால் துடித்த அவன் தந்தை குருவராயரைப் பழி வாங்க நினைத்து அவருடைய பச்சைக் குழந்தையைத் திருடிக் கொண்டு போய் விக்கிரமன் என்று பெயர் வைத்து வளர்க்கிறார். விக்கிரமன் பெரியவனாக வளர்ந்து, வீரனாகப் பெயரெடுத்துத் தந்தையையே போரில் வெல்கிறான்.

இதில் காதல், சூழ்ச்சி, போர், சாகஸம் ஆகியவையெல்லாம் குறுக்கிட்டுக் குட்டை குழப்புகின்றன.

மிக மிகப் பழங் கதை. மகன் தந்தையைப் பழி வாங்கினானோ இல்லையோ ஆர். என். ஆர். பிக்சர்ஸார் நம்மைப் பழி வாங்கி விட்டனர்! படத்தின் ஆரம்பத்தில் சிதிலமடைந்து கிடக்கும் ஹம்பி நகரத்தைக் காணும்போது மட்டும்தான் 'ஒரு சரித்திரக் கதையைப் பார்க்கிறோம்' என்னும் எண்ணம் உண்டாகிறது. மற்றப்படி வேறெங்கேயும், எந்தச் சமயத்திலும் சரித்திரக் கதை என்ற நினைவே தலை காட்டவில்லை. நாகேந்திரராவ் வில்லன் குருவராயராக வந்து கத்திச் சண்டை போட்டு, சதித் திட்டங்கள் தீட்டி, ஒழிந்த வேளையில் ஹேமா தேவியிடம் வம்புகள் செய்து, படத்தையும் டைரக்ட் செய்திருக்கிறார். இது பெரிய சாதனை இல்லையா?

பல்லாண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த சரித்திரக் கதையைத் தயாரிப்பதற்கும் பல்லாண்டுகள் ஆகியிருக்கின்றன! படத் தயாரிப்பாளர்களுக்கு இது சரித்திரப் பிரசித்தியைத் தேடித் தரலாம்! ஆனால் நடிகை சரோஜா தேவியின் விஷயத்தில் சதி செய்து விட்டது. இப்போது பட உலகின் புகழ் ஏணியில் ஏறிக் கொண்டிருக்கும் சரோஜா தேவி ஹேமாவாகத் தோன்றுகிறார். சுவாரஸ்யம் இல்லாமல் நடிக்கிறார்; காதலனுடன் காதலும் புரிகிறார். சரோஜா தேவியின் துடிப்பையும், சிறந்த நடிப்பையும், நெஞ்சையள்ளும் சோகத்தையும் ஆவலோடு எதிர்பார்த்துப் படத்துக்குச் செல்கிறவர்கள் அடியோடு ஏமாந்துதான் போவார்கள்.

சரித்திரக் கதையைப் படமாக்குவது என்பது எளிதான காரியமல்ல. என்றைக்கோ நிகழ்ந்த ஒரு சரித்திர நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு இன்றைக்கு உள்ள மக்கள் ரசிக்கும்படியாகப் படம் தயாரிக்க வேண்டுமானால் படம் முழுவதும் சுவாரஸ்யமாயிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் முக்கியமாக, சரித்திர காலத்தின் மகோன்னத நிலையை நினைவூட்டும் வண்ணம் காட்சிகளைக் கம்பீரமாகத் தயாரிக்க வேண்டும். அது முடியாவிட்டால், எல்லோரும் பார்த்துச் சிரிக்கும்படியாகவாவது இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் அல்லவா? சரித்திரக் கதைகளைப் படமாக்குவதாகக் கூறிக் கொண்டு இப்படிச் சிலர் பாழ் பண்ணிவிடுவதனால்தான் சரித்திரக் கதைக்கே தரித்திரம் ஏற்பட்டு விடுகிறது!

இது கன்னடப் படம்; தமிழில் 'டப்' செய்து தமிழர்களைச் சோதனைக்குள்ளாக்கி விட்டனர்.

குயிலன் இயற்றியிருக்கும் பாடல்களில், ''மலராம் பொன் கரம் ஏந்தும் வீணையே'' என்ற பாடல் நன்றாயிருக்கிறது. ஆனால் ஒலிப் பதிவு பல இடங்களில் நன்றாயில்லை.

குதிரைச் சவாரியும், கத்திச் சண்டையும், வீர சாகஸங்களும் நிறைந்த படமாயிருந்தும் ஒலிப் பதிவு பாழாக்கி விட்டது.

''பாரத நாட்டு வீர புத்திரன்'' என்ற பெயரில்தான் வீரம் இருக்கிறதேயொழிய, மற்றப்படி படத்தில் எங்கும் வீரத்தைக் காண முடியவில்லை.


படத்தைப் பார்த்ததாகச் சொல்லவே கூசும்படியான படம். படத்தின் பெயர் மட்டும்தான் நீளம் என்று நினைத்து ஆறுதல் அடைவதற்கில்லை. படமும் நீளம்தான். படம் தயாரித்தவர்கள் பரிதாபத்துக்கு உரியவர்கள், படம் பார்த்தவர்கள் அநுதாபத்துக்கு உரியவர்கள்; படத்தைப் பார்க்காதவர்கள் பாக்கியசாலிகள்! — காந்தன்

திரயம்பக திரயம்பகநாதர்


தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

'செங்கண் நெடுமாலும்
சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம்
பூதலத்தே போந்தருளி'

நின்றவன் அண்ணாமலையான் என்று மணிவாசகர் தம் அம்மானைப் பாடல்களைத் தொடங்குகிறார். எல்லாம் வல்ல இறைவனது அடியையும் முடியையும் விஷ்ணுவும் பிரமனும் காணாமல் அலமந்து நின்ற தன்மையை மணிவாசகர் பல பாடல்களில் பாடிப் பாடி மகிழ்கிறார். கதை நமக்குத் தெரிந்த கதைதான், சுவையான கதை. ஆதலால் எத்தனை தரம் சொன்னாலும், எத்தனை தரம் கேட்டாலும் அலுப்ப



இல்லை. ஆம், படைப்புத் தொழில் நடத்தும் பிரமனுக்கும், காத்தல் தொழில் நடத்தும் விஷ்ணுவுக்குமே ஒரு பலத்த போட்டி: தங்களில் யார் பெரியவர் என்று. இவர்களிடையே சிவபெருமான் வருகிறார்: அழல் உருவில் நிற்கிறார். தம் அடியையோ அல்லது முடியையோ யார் முதலில் கண்டு வருகிறார்களோ அவர்களே பெரியவர் என்று போட்டியை ஆரம்பித்து வைக்கிறார். சரி என்று திருமால் வராக உருவில், இறைவன் திருவடி காணப் பூமியைக் குடைந்து குடைந்து கீழே செல்கிறார். பிரம்மாவோ அன்ன உருவில் வானில் பறந்து இறைவன் முடி காணப் புறப்படுகிறார். இருவரும் சென்றுகொண்டே யிருக்கிறார்கள். அடியையோ முடியையோ கண்டபாடாக இல்லை. ஆனால் இறைவன் திருமுடியில் இருந்து விழுந்து பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் தாழம்பூ ஒன்றைச் சந்திக்கிறார் பிரமன். அப்பூவோ, பிரமனால் இறைவனது முடியைக் காண முடியாது என்று சொல்லி விடுகிறது. பிரமன் அதனால் மயங்கவில்லை. முடியைக் கண்டு விட்டதாகவும் முடியிலிருந்த தாழம்பூவே அதற்குச் சாட்சி என்று பொய்ச்சாட்சி சொல்லும்படியாகவும் அதனைத் தயாரித்திருக்கிறார். இருவரும் பூமிக்கு இறங்குகிறார்கள். இறைவனிடம் தாம் தயாரித்த பொய்ச்சாட்சியுடன் தம் கதையைச் சொல்கிறார் பிரமன். இறைவனுக்கு உண்மை தெரியாமல் போகுமா? பொய் சொன்ன பிரம்மாவுக்கு வழிபாடே இல்லாமல் போவது என்றும், பொய்ச்சாட்சி சொன்ன தாழம்பூ தம் பூசனைக்கே உதவுதல் கூடாது என்றும் சாபமிட்டு விடுகிறார். அழல் உருவில் நின்ற அண்ணல் உறைந்து அண்ணாமலையாக நின்று விடுகிறார். இதுதான் வேங்கடத்துக்கு இப்பால் உள்ள திரு அண்ணாமலையின் வரலாறு என்று புராணங்கள் எல்லாம் கூறும். இதே கதையை வேங்கடத்துக்கு அப்பால் செல்லும் நமது தல யாத்திரையிலும் கேட்கிறோம், திரியம்பகம் என்ற தலத்திலே. கதையின் முடிவிலேதான் ஒரு சிறிய மாற்றம். சாபம் பெற்ற பிரமன் வேண்டிக் கொண்டபடியே இறைவன் மலையாக இருக்க இசைகிறான் என்றும் அந்த மலையையே பிரமன் பெயரால் பிரம்மகிரி என்று அழைக்கவும் இசைகிறான் என்பதுதான் மாற்றம். இந்தப் பிரம்மகிரி இருக்கும் தலம் தான் திரயம்பகம். அந்தத் திரயம்பகத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.





திரயம்பகம் செல்ல பம்பாய் ஜால்கன் ரயில் பாதையில் சென்று அஸ்வாலி என்ற ஸ்டேஷனில் இறங்க வேணும். ஆனால் அஸ்வாலி சிறியதொரு கிராமம். அங்கிருந்து திரயம்பகம் செல்ல வண்டியோ, பஸ்ஸோ, காரோ கிடைப்பது அரிது. ஆதலால் நாசிக் ரோட் ஸ்டேஷனில் இறங்கி அங்கிருந்து பதினெட்டு மைல் தூரத்தில் உள்ள திரியம்பகத்துக்குப் பஸ்ஸிலோ, காரிலோ செல்லலாம்.

கார் ஏற்பாடு செய்துகொண்டு சென்றால் வழியில் உள்ள கணேஷ்குண்ட், பாணகங்கை முதலிய இடங்களையும் பார்த்து விட்டுச்செல்லலாம். கார் திரயம்பகத்தின் மேல் கோடி

வரை செல்லும். அதற்கு அப்பால்தான் பிரம்மகிரி மலை இருக்கிறது. அங்குதான் கோதாவரி நதி உற்பத்தியாகிறது. அண்ணாமலையில் கிரிப் பிரதட்சிணம் செய்வது போல் திரயம்பகத்திலும் கிரிப் பிரதட்சிணம் செய்கிறார்கள். ஆனால் சுற்ற வேண்டியது இருபது மைல் தூரம். ஆதலால் நம்மால் எல்லாம் கிரிப்பிரதட்சிணம் செய்ய இயலாது. பிரதட்சிணத்தை ஒதுக்கி விட்டு நாம் முதலில் மலை ஏறிக் கோதாவரி உற்பத்தி ஸ்தானத்துக்கே செல்லலாம். இந்த இடத்துக்குச் செல்லப் படிக்கட்டு கட்டியிருக்கின்றனர் இரண்டு மைல் தூரம். ஏழுநூறுக்கு மேற்பட்ட படிகள் ஏறிக் கடந்தே போக வேணும். கொஞ்சம் சிரமமாகவே இருக்கும். அப்படிப் படி ஏற இயலாதவர்கள் மலை அடியில் நின்றே வணக்கத்தைச் செலுத்தி விட்டுத் திரும்ப வேண்டியதுதான். இன்னும் ஒன்று. மலை ஏற விரும்புகிறவர்கள் அதிகாலையிலேயே அங்கு சென்று விட வேணும். பகல் பத்து மணிக்கு மேல் வெய்யிலால் படிகள் எல்லாம் சூடாகி விடும்; ஏறுவது இயலாததாக இருக்கும். அங்கு ஒரு மண்டபம். மண்டபத்தின் முன்பு ஒரு நந்தி. மண்டபத்தில் கோதாவரி அம்மனின் சிலை இருக்கிறது. அது பளிங்குக் கல்லால் ஆனது. அந்த அம்மனின் காலடியில் இருக்கும் கோமுகத்தில் இருந்து தண்ணீர் ஒரு தொட்டியில் வடிகிறது. அந்தத் தண்ணீர் தொட்டியில் வீழ்ந்ததும் மறைந்து பின்னர் கொஞ்ச தூரத்தில் ஓர் ஓடையாய் உருவெடுத்து ஓடுகிறது. கோதாவரி அம்மன் மண்டபத்தில் உள்ள தொட்டியில் இறங்கி ஒரு முழுக்குப் போட்டுக் கொள்ளலாம்.

கோதாவரியின் உற்பத்தி ஸ்தானத்திலேயே நீராடும் பாக்கியம் எளிதாகக் கிடைக்குமா என்ன? அந்த மலை மீதே கௌதமர் ஆசிரமம் என்னும் குகை யிருக்கிறது. மற்றொரு பக்கம் கோரக்நாதர் குகை ஒன்றும் இருக்கிறது. இரண்டு குகைகளிலும் சிவலிங்கங்கள் இருக்கின்றன. இங்கெல்லாம் நாம் வணக்கம் செலுத்தி விட்டு மலையை விட்டு இறங்கலாம். வழியில் ராமகுண்டம் லக்ஷ்மண குண்டம் எல்லாம் இருக்கின்றன. மலை அடிவாரத்தில் கோடி தீர்த்தம் என்னும் திருக்குளம் ஒன்றும் இருக்கிறது. அதிலும் இறங்கி நீராடலாம். அவ்விரு குளத்தைச் சுற்றிச் சிவலிங்கங்கள் பல பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. அக்குளத்தின் மேல் திசையில் பள்ளி கொண்ட பெருமாளின் வடிவம் ஒன்று இருக்கிறது. அப்பெருமாளின் திருவடியில் நீர் ஊறிக் கொண்டே யிருக்கிறது. இந்த நீரில் துளசி மணக்கிறது.

இங்குள்ள தீர்த்தக் கட்டங்களில் சிறப்பானது குசாவர்த்த தீர்த்தம்தான். பிரம்மகிரியிலிருந்து பிரவகித்த கோதாவரியைக் கௌதமர் தம் கையில் உள்ள தருப்பையால் தடுத்திருக்கிறார். அதனாலேயே அவள் பூமியில் மறைந்து திரும்பவும் வெளி வந்திருக்கிறாள் என்கின்றனர். மலையடிவாரத்தில் உள்ள தீர்த்தக் கட்டத்தைக் கௌதம குண்டம் என்கின்றனர். நல்ல படிக்கட்டுகள், மண்டபங்களெல்லாம் கட்டி வைத்திருக்கின்றனர். தென்புறம் ஒரு கோயிலைக் கட்டி அதில் சிவலிங்கப் பிரதிஷ்டையும் செய்திருக்கின்றனர். இந்தக் குண்டத்தில் பலர் குளித்துக் கொண்டிருப்பார்கள். !தண்ணீரோ பச்சைப் பசேல் என்று மிக்க அசுத்தமாக இருக்கும். ஆதலால் குண்டத்தில் உள்ள நீரைத் தலையில் புரோட்சித்துக் கொண்டதுடன் திருப்தியடைய வேண்டியதுதான். கௌதம குண்டத்திலிருந்து கிழக்கு நோக்கி வந்த வழியே திரும்பினால் இந்தத் தலத்துக்கே சிறப்பான திரயம்பக நாதர் கோயில் வந்து சேருவோம்.

கோயில் கிழக்கு நோக்கிய கோயில் என்றாலும் நாம் வடக்கு வாயிலின் வழியாகத்தான் உள்ளே நுழைய வேணும். வடக்கு வாயிலின் பேரில்தான் பேரிகை மண்டபம் கட்டியிருக்கிறார்கள். நாலு பக்கமும் மதில்கள் சூழ்ந்த கோயில் அது. அங்குள்ள திறந்த வெளிப் பிராகாரத்தில் வலப்புறமாகச் சுற்றியே பிரதான கோயில் வாயில் வந்து சேர வேணும். அக்கோயில் கருங்கற்களால் கட்டப்பட்டிருக்கிறது என்றாலும் அது நம் நாட்டுக் கருங்கல்லைப் போல் உறுதியானதல்ல. இதனைக் கருஞ் சலவைக்கல் என்னும்படி பளபளப்பாக இருக்கிறது. கோயில் விமானத்தின் மேல் தங்கக் கலசம் ஒன்றிருக்கிறது; அதற்குமேல் திரிசூலமும் இருக்கிறது. கோயில் மாடக் கோயிலைப் போல் கொஞ்சம் உயரமான இடத்திலே கட்டியிருக்கிறார்கள். ஆதலால் படிகள் ஏறித்தான் கோயிலுள் செல்ல வேணும். அப்படிப் படி ஏறும்போதே கௌபீனதாரியாய் நிற்கும் ஒரு விநாயகர் வடிவைக் காண்போம். அதைப் போன்ற வடிவத்தை நான் வேறு இடங்களில் காணவில்லை. பிள்ளையார் பிள்ளைப் பிராயம் கடந்து வளர்கிறவர் என்று காட்டவே அவருக்குக் கௌபீனம் தரித்து நிறுத்தியிருக்கிறான் போலும் சிற்பி. கோயில் முன் மண்டபம், சபாமண்டபம், கருவறை என்று மூன்று பகுதியாக இருக்கிறது. முன்மண்டபத்தில் உள்ள தளவரிசையில் எல்லாம் பல சிவலிங்க வடிவங்கள். முன் மண்டபத்தைக் கடந்து சபாமண்டபத்துக்கு வந்தால் அங்கு நந்தியிருக்கும். அதன் மேல் கோடியில் உள்ள அர்த்தமண்டபம் வந்தால் கருவறை வாயில் வந்து சேருவோம். கருவறை ஆறு அடிப் பள்ளத்தில் இருக்கிறது. அது மிகவும் விசாலமாகவே இருக்கும். அதன் நடுவில்தான் லிங்க வடிவில் இறைவன் இருக்கிறார். அவர் இந்திய நாட்டில் உள்ள பன்னிரண்டு சோதிர் லிங்கங்களில் ஒன்று என்பர். கருவறையில் உள்ள படிகளில் இறங்கியே இறைவனைத் தரிசிக்க வேண்டும். ஆனால் பெண்களைக் கருவறைக்குள் அநுமதிப்பதில்லை. அவர்கள் கருவறை வாயிலிலிருந்தேதான் வணங்க வேண்டும். இந்த லிங்க வடிவமாக இருக்கும் இறைவனுக்கு உயரமான ஆவுடையார் கிடையாது. அதன் தலையில் மூன்று சிறு ரோஜா மொட்டுக்கள் போன்ற உருவங்கள் இருக்கின்றன. மும்மூர்த்தி சொரூபமானவரே திரியம்பகர் என்பதை விளக்கவே இப்படி அமைத்திருக்கிறார்கள். இந்தத் திரியம்பகநாதர் அடியிலே எப்போதும் நீர் ஊறிக் கொண்டேயிருக்கிறது. திரயம்பக நாதர் நமக்கு மரணமில்லாப் பெரு வாழ்வு அளிக்க வல்லவர். அவரது தோத்திரத்தில் சிறப்பானது மிருத்யுஞ்சய மந்திரம் ஆகும்.

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
சுகந்தம்
புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனாத்
மிருத்யோர் முக்ஷீய
மா அம்ருதாத்

என்பது தோத்திரம். தமிழிலே தொழவும் அன்பர் ஒருவர் பாடி வைத்திருக்கிறார்.

அண்டமெலாம் கன்றாகக் கொளினும்
காண்டற்கு அணுத் துணையும்
கூடா என்று அனந்தவேதம்
விண்டலறி ஓலமிட்டுப் புலம்ப
மோன வெளிக்குள் வெளியாய்
நிறைந்து விளக்கும் ஒன்றே
கண்ட வடிவாய், அகண்ட மயமாய்
எங்கும் கலந்து நின்ற
பெருங் கருணைக் கடவுளே, எம்
சண்ட வினைத் தொடக்கறச்சின்
மயத்தைக் காட்டும் சற்குருவே !
திரியம்பகத்தே சார்ந்த தேவே.

என்று பாடியும் துதிக்கலாம்.

இந்தத் திரயம்பகநாதர் கோயிலில் நமது அண்ணாமலையில் நடப்பது போலவே கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று ரதோத்சவம் நடக்கிறது. மாசி மகத்தில் சிறப்பான பூஜை நடக்கிறது. நமது கும்பகோணத்தில் நடப்பது போலவே பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு தடவை மகாமகமும் அதை ஒட்டி ஒரு மேளாவும் நடக்கிறது என்கின்றனர். அடுத்த மகாமகம் 1968ல்தானாம். இந்தக் கோயிலை நாநாசாஹிப் பேஷ்வா 1795ல் கட்டி முடித்தார் என்று சரித்திர ஏடுகள் பேசுகின்றன. இக்கோயில் கட்டி முடிக்க முப்பத்தொரு வருஷங்கள் ஆயின என்கின்றனர்; கட்டி முடிக்கச் செலவு பத்து லட்சம் ரூபாய் என்றும் தெரிகிறது.

இத்தலத்தில் திரயம்பகநாதர் கோயிலைத் தவிர இன்னும் பல கோயில்கள் உண்டு. குசாவர்த்த தீர்த்தத்தின் பின்புறம் கிருஷ்ணன் கோயில் ஒன்று இருக்கிறது. அதில் கிருஷ்ண விக்கிரகம் ஒன்று சலவைக்கல்லில் செய்து நிறுத்தி யிருக்கிறது. கிருஷ்ணாஷ்டமி அன்று பூஜை சிறப்பாக நடக்கிறது. குசாவர்த்த தீர்த்தத்தின் வடபுறம் கங்கைக்கு ஒரு கோயில் இருக்கிறது. கங்கையம்மாள் சிறிதாக இருந்தாலும் அழகாக இருக்கிறாள். மாசி மகத்தில் இங்கு உற்சவம் நடக்கிறது. இன்னும் பல சிறிய கோயில்கள் இருக்கின்றன. ஊருக்கு வடபுறம் நீலபருவதம் என்னும் அழகிய குன்று ஒன்று இருக்கிறது. ஏறிப் போக நல்ல படிகள் இருக்கின்றன. அதன் உச்சியில் தத்தாத்ரேயர் கோயில் ஒன்றும், காலபைரவர் கோயில் ஒன்றும் இருக்கின்றன. நீலாம்பிகைக்கு என்று தனிக் கோயில் ஒன்றும் உண்டு. இக்கோயிலை அடுத்து நீல தீர்த்தம் என்று ஒரு குளிர்ச் சுனை இருக்கிறது. இத்தலத்திலுள்ள குசாவர்த்தமும் இமயமலையில் உள்ள கங்கா துவாரமும், பில்வ தீர்த்தமும், நீல தீர்த்தமும் ஹரித்துவாரத்திலுள்ள கன்கல் தீர்த்தமும் மறுபிறப்பைப் போக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஆசாரியருக்கு ஆராதனை



இன்றைய சிருங்ககிரி பீடாதிபதிகளின் குருவாகிய ஸ்ரீ சந்திரசேகர பாரதி அவர்கள் தவத்திலும், அருளிலும் சிறந்து விளங்கிய மகான். யோகத்திலும், பூஜையிலும் தமது பொழுதவ்வளவையும் செலுத்திய புனிதர் அவர். அவர்களின் அதிஷ்டானத்துக்குக் கும்பாபிஷேகம் செய்வதாகவும், சண்டிஹோம மகாயக்ஞம் நடத்துவதாகவும் சிருங்ககிரி பீடாதிபதிகளின் ஆக்ஞையின் கீழ் நிச்சயமாகி யிருக்கிறது. இந்த வைபவங்கள் சிருங்ககிரியில் இம்மாதம் 27-ந் தேதியிலிருந்து மார்ச்சு மாதம் 3ந் தேதிவரை நடைபெறும். ஆசாரிய லக்ஷணங்கள் பூரணமாக நிறையப் பெற்ற யதீசுவரருக்கு அஞ்சலி செலுத்த இது ஒரு நல்ல வாய்ப்பாகும். ரூ. 11 அனுப்பி ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் அர்ச்சனை செய்வோருக்கு ஆசாரியரின் பிம்பம் பொறித்த வெள்ளிப் பதக்கம் பீடாதிபதிகளின் ஆசியுடன் அனுப்பி வைக்கப்படும். குரு சேவையில் ஈடுபடுமாறு அன்பர்கள் யாவரும் கோரப்படுகின்றனர்.

மகத்தான வெற்றியும் மாபெரும் தோல்வியும்



மூப்பது லட்சம் வீரர்கள், ஐம்பது ஆயிரம் மோட்டார் வாகனங்கள், ஐயாயிரம் போர்க் கப்பல்கள், பதினோராயிரம் விமானங்கள்—

அவ்வளவும் தேவைப்பட்டன, ஹிட்லரை முறியடிக்க. ஐரோப்பாவைக் கபளீகரம் செய்து விட்டு அடுத்தாற்போல் பார் மீது பாயலாம் என்று நோட்டம் பார்த்துக்கொண்டிருந்தார் அவர். இப்படிப்பட்ட ஒரு பெரும் சேனையைத் திரட்டிக் கொண்டுதான் பிரான்ஸை ஜெர்மானிய ஆட்சியிலிருந்து நேச நாடுகள் விடுவிக்க முற்பட்டன. அவ்வாறு இருந்தும் விதி சதி செய்திரா விட்டால் ஹிட்லரை அவர்களால் வென்றிருக்க முடியுமா என்பது சந்தேகம்தான்! ஜெர்மானியத் தளபதி ரோமல் விரக்தியும் வெறுப்பும் மிகக் கூறினார்: ''மகத்தான வெற்றி மாபெரும் தோல்வியாக மாறப் போகிற சரித்திரப் பிரசித்திபெற்ற தினம் இது. இந்தத் தோல்விக்குக் காரணம் என்ன? சொன்னால் நம்புவது கடினம்தான் என்றாலும் அந்த உண்மை, ஹிட்லர் தூங்கிக் கொண்டிருக்கிறார், அவரை எழுப்ப யாருக்கும் தைரியம் வரவில்லை என்பதுதான்!''

ஹிட்லருக்கு அன்று டாக்டர் தூக்க மருந்து கொடுக்காமல் இருந்திருந்தால், அவர் விழித்துக் கொண்டிருந்திருப்பார். விழிப்புடன் இருந்திருந்தால் நேசநாடுகளின் படையெடுப்பைப் பற்றி உடனுக்குடன் அறிந்திருப்பார். சற்றும் தாமதியாமல் ரிஸர்வில் இருந்த 'பான்ஸர்' எனப்படும் இரும்புக் கவச வாகனங்களுடன் கூடிய பட்டாளங்களை நார்மண்டி கடற்கரைக்கு அனுப்பியிருப்பார். நேச நாடுகளின் அத்தனை பெரிய சைனியமும் கடற்கரையிலேயே நிர்மூலமாகி யிருக்கும். ரோமலுக்கு இதைக் குறித்து லவலேசமும் ஐயப்பாடு கிடையாது. ஆனால் 'பான்ஸர்' பட்டாளத்தை நகர்த்தும் அதிகாரத்தை ஹிட்லர் தமது ஏகபோக உரிமையாக்கிக் கொண்டிருந்தாரே!

இதைப் பார்க்கும் போதுதான் நியாயம் பலத்தை ஆளும் **(Right rules over might)** என்கிற ஆங்கிலப் பொன்மொழியில் நமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்படுகிறது.

உலக சரித்திரத்தில் நிரந்தர இடம் பெற்று விட்ட இந்தத் தினத்தில் — பிரஞ்சுக்காரர்கள் தங்களுக்குக் கதி மோட்சம் கிடைத்ததாகக் கருதுகின்ற அந்த நாளில் — நடந்தவற்றையெல்லாம் மறவாமல் மக்கள் நினைவிலிருத்திக் கொள்கின்ற முறையிலும் அன்று போரிட்ட வீரர்களுக்கும் அவர்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச்சென்ற தளபதிகளுக்கும் தக்கதொரு ஞாபகச் சின்னமாகவும் ''தி லாங்கஸ்ட் டே'' **(The Longest day)** என்ற பிரமாதமான திரைப் படத்தை உருவாக்கி யிருக்கிறார்கள். பிரமாதம் என்கிறபோது ஒன்றிரண்டு அம்சங்களை மட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு சொல்லவில்லை, எல்லாமே பிரமாதம்தான். அன்றைய தினம் போராட்டத்தில் பங்கு பற்றியவர்களில் கண்ணுறங்கியவர்கள் அநேகமாக யாருமே இல்லை என்பதால் படம் நீண்ட நாள் என்ற பெயரைப் பெற்றிருக்கலாம். நீளத்திலும் படம் பிரமாதம்தான். மூன்று மணி நேரம் ஓடுகிறதும் அலுப்பு சலிப்புத் தெரியவில்லை. சக்திவாய்ந்த பொதுவான ஓர் எதிரிக்கு முன்னால் நண்பர்களுடன் கூட்டுச் சேருவதன் அவசியத்தையும் சிறப்பையும் உணர்த்துகின்ற இப்படத்



தைப் போர்க்கோலம் பூண்டிருக்கும் பாரத நாட்டின் இன்றையச் சூழ்நிலையில் அனைவரும் பார்த்துப் புத்துணர்ச்சி பெற வேண்டும். குறிப்பாக நம்முடைய படாதிபதிகள் பார்க்க வேண்டும். பார்த்து விட்டு, காப்பி அடிக்காமல் வெட்டிச் சேர்க்காமல் இது போன்ற வீரத்தையும் தீரத்தையும் ஊட்டும் படங்களைத் தயாரிப்பதில் முனைய வேண்டும். இனி தயாரிக்கப் போகும் படங்களின் நீளங்களை மட்டும் அவசரக் காலத்தை முன்னிட்டுக் குறைத்துக் கொண்டால் போதாது. போதவே போதாது! இந்தப் படத்தை எடுப்பதற்காக மறுபடியும் உலக மகாயுத்தத்தையே நடத்தியிருக்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு நம் படாதிபதிகளிடம் தொழில் நுணுக்க வசதி இல்லை என்பது வாஸ்தவம்தான். ஆனால் உணர்ச்சிகளுக்குப் பஞ்சமில்லையே?

கதிமோட்ச தினம் — ஜூன் 6ந் தேதி அன்று படையெடுப்பில் பங்கு பற்ற ஒவ்வொரு சிப்பாயும், தளபதியும் துடித்தது போலவே உலகப் புகழ் பெற்ற நாற்பத்திரண்டு நட்சத்திரங்கள் 'நீ முந்தி நான் முந்தி' என்று டேரைல் எப். ஸானூக் தயாரித்த இப்படத்தில் நடிக்கப் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்திருக்கிறார்கள். சரித்திரத்தில் நிலையான இடம் பெற்று விட்ட அந்தப் பிரும்மாண்டமான படையெடுப்பில் நானும் கலந்து கொள்ளப் போகிறேன் என்று அந்தச் சிப்பாய்கள் பெருமைப்பட்டிருக்கலாம். நடிகர்களும் அதே போல் நல்லதொரு சந்தர்ப்பத்தை இழக்காமல் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால் இவர்கள் அனைவரையும் விடத் திரைப் படத்தைப் பார்க்கும் நாம் அதிர்ஷ்டசாலிகள். சிப்பாய்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்பட்ட அநுபவங்களைத்தான் அறிந்திருப்பார்கள். நடிகர்களும் யாருடைய பாகத்தை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களுடைய உணர்ச்சிகளைத்தான் புரிந்து கொண்டிருப்பார்கள். நாமோ யுத்தகளத்தின் பல முனைகளையும் பார்த்து வருகிறோம். ஐஸன்ஹோவர் முதல் சாதாரணச் சிப்பாய் வரை பல்வேறுபட்டவர்களின் மன நிலைகளை அறிந்து இன்பதுன்பங்களுக்கு உள்ளாகிறோம், எல்லாம் மூன்று மணி நேரத்துக்குள்ளாக!

ஜெர்மானியத் தளபதிகளின் திறமையைக் குறைத்துக் காட்டாமல் உண்மையைச் சொல்வது தயாரிப்பாளர்களின் பண்பைக் காட்டுகிறது. இயற்கையாக, நடந்ததை நடந்தபடியே மக்கள் பார்க்க வசதி செய்து தர வேண்டும் என்பதற்காகவோ என்னவோ, ஜெர்மானியத் தளபதிகளை ஜெர்மன் மொழியிலேயே பேசுமாறு செய்திருக்கிறார்கள். அந்தப் பாஷை புரியாதவர்களுக்குக் கீழே ஆங்கிலத்தில் சம்பாஷணையின் மொழிபெயர்ப்பு எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படிக்கும் போது நடிப்புத் திறனை உன்னிப்பாகக் கவனித்து ரசிக்க இயலாது போகிறது. இந்த ஒரு குறைதான்.

உலக யுத்தத்தின் வெற்றி தோல்வி ஒரு புறமிருக்க, திரைப் பட உலகத்தில் உன்னத நிலையை எட்டிப் பிடிக்கும் போட்டியில் இந்தப் படம் ஒரு மகத்தான வெற்றியைக் கண்டிருக்கிறது. — குட்டிகிருஷ்ணன்

மாரிக்காலம். நேற்று முதலே தவிட்டுத் தூற்றல் போட்டுக் கொண்டிருந்தது. இன்று காலை பெருந் தூற்றலாகத் தொடங்கியது. நடுப் பகலுக்குள் கனத்த மழையாகப் பிடித்துக் கொண்டு விட்டது.

தூங்கி விழித்த பின்னரே சிதம்பரத்துக்கு இவ்விஷயம் தெரிய வந்தது. திறந்த ஜன்னல் வழியாக மழைச் சாரல் பக்கத்து அறைக்குள் நுழைந்து தரையை நனைத்திருப்பதைக் கண்டான். அந்த வீட்டுக்கு மொத்தம் மூன்று அறைகள். பல இடங்களில் மழை ஒழுக்கு. எனவே, 'டப், டப்' என்று நீர் சொட்டி வீட்டுத் தரை முழுவதையுமே தெப்பமாக நனைத்திருந்தது. சுவர்க் கால் வழியாக வேறு நீர் வழிந்து கொண்டிருந்தது. வீட்டுக் கூரை, தரை எல்லாமே ஈரம் காத்துக் கிடந்தன. எல்லாவற்றைக் காட்டிலும் மிக மிக மோசமாக இருந்தது அந்த வீட்டுச் சமையற் கட்டேயாகும்.

இதைக் கண்ணுற்ற சிதம்பரத்துக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நடுக் கூடத்தில் விரித்திருந்த பாயில் போய் மீண்டும் படுத்துக் கொண்டான்.

அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதலாக, அவன் வாடகை வீட்டில்தான் குடியிருந்து வருகிறான். அதுவும் சிறுசிறு சாதாரணமான வீடுகள். அதிக வாடகை கொடுத்து நல்ல வீட்டில் இருக்கும் அந்தஸ்து அவனுக்கு இது வரை உண்டாகவே இல்லை. ஒண்டுக் குடித்தனம் காரணமாக, உலகத்தில் இல்லாத கஷ்டங்களையெல்லாம் அவன் அநுபவித்தான். வீட்டுக்காரர்கள் போட்ட நிபந்தனைகளையெல்லாம் ஏற்றான். அவர்களது மனப் போக்குக்கு ஏற்ப நடந்தான். அதுமட்டுமா? எத்தனையோ வீடுகள் மாற்றி மாற்றிக் குடிக்கூலிக்கு இருக்கத் தன்னை நன்றாகப் பழக்கப் படுத்தியும் கொண்டான்.

ஐம்பத்தைந்து வயதாகி விட்டது அவனுக்கு. இப்பொழுதுதான் நேற்றோ முந்தா நாளோ வேலையிலிருந்து ஓய்வு பெற்றான். இத்தனை நாளும் அவன் பார்த்து வந்தது பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலை. சேமிப்பு நிதித் தொகையான ஐயாயிரம் ரூபாயைக் கையில் கொடுத்து, அவன் பார்த்து வந்த வேலையைப் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள்.

அவன் மனம் பல விதமாகப் புழுங்கிக் கொண்டிருந்தது. அவனது வாழ்வின் பொன்னாட்கள் அனைத்தும் சாதாரணமான வாடகை வீடுகளில் வசித்தே கழிந்து விட்டன. ஆயினும் பாயில் படுத்திருந்த அவனது மனத்தில் பலவித விந்தை உணர்வுகள் தோன்றி, அவனை ஆட்டிப் படைக்கலாயின. ஒழுகும் அந்தச் சிறு வீடு வேறு அவனது அந்த உணர்வுகளுக்கு ஏற்ப ஒத்துப் பாடிக் கொண்டிருந்தது.

திடீரென்று அவன் மனத்திலே ஓர் எண்ணம்: 'எப்படியும் நாம் ஒரு வீடு விலைக்கு வாங்கிவிட வேண்டும்.' உடலில் ஒரு கணம் மின்னல் அலையாகப் பாய்ந்தது போன்ற பிரமை. ஆகா! என்ன இனிமையான உணர்வு!

நேற்றுத்தான் ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளாக அவனோடு பழகி வந்த நண்பன் ஒருவன் வந்து, அவன் உள்ளத்திலே இவ்வெண்ண விதையைத் தூவி விட்டுச் சென்றான். அதோடு தன் வீட்டையே விலைக்கு வாங்கிக் கொண்டு தனக்கு உதவி புரியுமாறு அவனை மிகவும் வேண்டிக் கொண்டான். அவனுடைய தந்தையும் தாத்தாவும் அரசபோகத்தில் திளைத்து வாழ்ந்த வீடாம் அது. அவன் கூடச் செல்வச் செழிப்போடு வாழ்ந்திருக்கிறான். இப்பொழுதுதான் அவன் கையில் ஒன்றும் இல்லாமல் போய் விட்டது. மிகுந்திருந்தது வறட்டுக் கௌரவம்தான். தாள முடியாத அந்த ஏழைமையிலும் செல்வச் செருக்கோடு இருப்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற மோகம் மட்டும் அவனை இன்னும் விட்டபாடில்லை.

வீடும் வாழ்வும்

கொம்மூரி வேணுகோபால ராவ்

பால்மணம் மாறாத அவன் குழந்தைக்கு நல்ல ஜுரம். அதற்குச் சிகிச்சை செய்யக் கையில் காசுகூட இல்லாமல் திண்டா



டிக் கொண்டிருந்தான் அவன். ஆனால் தன் சிரமத்தைக் காட்டிக் கொள்ள அவன் கூனிக் குறுகினான். பிறகு எப்படியோ தன்னைச் சமாளித்துக்கொண்டு தாழ்ந்த குரலில் சொன்னான்: ''பிறரோடு பேரம் பேசி நான் என் மானத்தை இழக்க விரும்பவில்லை. நீதான் என் வீட்டை விலைக்கு வாங்கிக் கொண்டு என் மானத்தைக் காக்க வேண்டும். வாய் விட்டு விலை கூறினால் இரண்டாயிரம் நாலாயிரம் அதிகமாகக்கூடக் கிடைக்கலாம். ஆனால் உனக்கு எண்ணாயிரம் ரூபாய்க்குத் தருகிறேன். உன்னிடம்தான் சேமிப்பு நிதிப் பணம் ஐயாயிரம் ரூபாய் இருக்கிறதே! மீதி மூவாயிரத்துக்கு எப்படியாவது ஏற்பாடு செய்து வாங்கிக் கொள்ளேன்!''

நண்பனின் இந்தச் சொற்கள், சிதம்பரத்தின் மனத்தில் ஒரு மூலையில் உறங்கிக்கொண்டிருந்த நினைவை, - வீட்டுக்குச் சொந்தக்காரனாக வேண்டும் என்ற ஆசையைக் கிளறி விட்டன. ஆனால் அந்த ஆசை கண நேரம் தான் தங்கியிருந்தது. மனத்திலே பல பிரச்னைகள் முளைக்கவே, ''யோசித்துத்தான் சொல்லவேண்டும். நாளைக்குச் சொல்கிறேன்!'' என்றான் சிதம்பரம்.

நண்பன் மறு நாள் மாலை வந்து சந்திப்பதாகக் கூறி விடைபெற்றான். சிதம்பரத்துக்கு இரவு முழுதும் சரியாகத் தூக்கம் வரவில்லை. எண்ணக் கடலில் முக்குளித்துத் தவித்துத் திணறிக் கொண்டிருந்தான்.

நண்பனின் ஆலோசனை இரவு முழுவதும் பெரும் பிரச்னையாக உருவெடுத்து, அவனை இல்லாத பல சிந்தனைகள் புரிய வைத்துவிட்டது. வாடகை வீடுகளில் அவன் அனுபவித்த கஷ்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்து அவன் மனத்தை வாட்டி எடுத்தன. தனக்கென்று ஒரு வீடு ஏற்பட்டு விட்டால் அந்த மாதிரிக் கஷ்டங்களும் அவமானங்களும் அனுபவிக்க வேண்டி நேராதல்லவா? நண்பனின் வீடு அவன் நன்றாகப் பார்த்ததுதான். அவன் இப்பொழுது குடியிருக்கும் வீட்டைக் காட்டிலும் மூன்று மடங்கு பெரியது. வீடா அது? இல்லை, இல்லை! பங்களா! மின்சார வசதி இருக்கிறது. குழாய் இருக்கிறது. இன்னும் எல்லாச் சௌகரியங்களுமே இருக்கின்றன. இதைக்காட்டிலும் வேறு என்ன வேண்டும்? அது மட்டுமல்ல; தானும் இருந்து கொண்டு ஒரு பகுதியை வாடகைக்கு வேறு விடலாம். ஜனங்கள் அவனைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். வீட்டைத் தங்களுக்கு வாடகைக்கு விடுமாறு கெஞ்சுவார்கள். ஊரில் அவன் மதிப்பு உயரும், மரியாதை பெருகும். கைக்கு நாலு காசும் வரும். ஏதாவது ஒரு தொழிலும் தொடங்கலாம். இப்படி எண்ணிப் பார்ப்பதிலேயே அவன் பெருமையைக் கண்டான். செல்வம் செழிப்பதாகக் கனவுகளும் கண்டான். அவனுக்கு மகிழ்ச்சியில் மயிர்க்கூச் செறிந்தது. ஆனால் அவனுக்கு மூவாயிரம் ரூபாய் யார் கடன் கொடுப்பார்கள்? உள்ளத்தில் எழுந்த ஆவல் அப்படியே அடங்கி விட்டது. மனம் மீண்டும் சிக்கலில் சுழன்று தவித்தது.

இதே நேரத்தில் யாரோ வாசற் கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்தால் நண்பன் குடையைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். ''என்ன தீர்மானம் செய்தாய்?'' — உள்ளே நுழைந்தவன் பாயில் உட்காருவதற்குள்ளாகவே ஆதுரத்துடன் கேட்டான். கண நேரத்துக்குச் சிதம்பரம் தயங்கினான். பிறகு மெதுவாக, ''நான் அவ்வளவு தர முடியாது!'' என்றான்.


''சரி, அப்படியானால் எத்தனை ரூபாய்க்கு வாங்குவதாக உத்தேசம்?''

''ஆறாயிரத்துக்கு மேல் ஒரு பைசா கூட அதிகம் தர முடியாது!''

நண்பன் எழுந்து நடந்தான். அவனுக்கு அந்தப் பேரம் பிடிக்க வில்லை. நண்பன் போவதைக் கண்ட சிதம்பரத்துக்கு மனத்தை என்னவோ செய்தது.

''சரி, ஐந்நூறு சேர்த்துத் தருகிறேன்!''

''பரவாயில்லை.''



''அப்படியானால் உன் வீடு எனக்கு வேண்டாம், போ!'' சிதம்பரத்துக்கு ஒரேயடியாகக் கோபம் வந்துவிட்டது.

''சரி, சம்மதம்!'' போனவன் திடீரென்று நின்றுவிட்டான். சிதம்பரத்துக்கு உண்டான மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை இல்லை. உடனே நண்பன் கையை நீட்டி, ''முதலில் ஐயாயிரத்தைக் கொண்டு வா!'' என்றான்.

''பணம் இங்கே கையில் எங்கே இருக்கிறது? பாங்கியில் இருக்கிறது. நாளைக்கு எடுத்துத் தருகிறேன். ஆனால்....''

''ஆனால் என்ன?''

''ஆயிரத்தைந்நூறு எனக்கு யார் கடன் தருவார்கள்?''

''அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடு. வீட்டை அடமானம் வைப்பதாயிருந்தால், நான் பணம் வாங்கித் தருகிறேன்.''

நண்பன் போன பிறகு சிதம்பரம் மீண்டும் பாயில் அமர்ந்து கொண்டான். தனது நிர்மானத்தை நினைத்தபொழுது அவனுக்கு ஒரு புறம் ஆனந்தமும் இன்னொரு புறம் ஆச்சரியமும் ஏற்பட்டன.

மூன்று நாட்களுக்குள் எல்லாச் சாங்கியங்களும் முடிவு பெற்றன. சில சில்லறைரிப்பேர்கள் செய்ய வேண்டியிருந்தது. எனவே, கடன் சுமை இரண்டாயிரமாக உயர்ந்து விட்டது. அதனால் என்ன? மூன்றும் நாளே வீடு அவன் வசத்துக்கு வந்து விட்டது.

இந்தச் சமாசாரம் அவன் மனைவிக்குக் கூடத் தெரியாது. குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தாள் அவள். திரும்ப மூன்று நாட்களாவது ஆகும். திரும்பியதும் அவர்கள் வியப்புற வேண்டும், ஆனந்தத்தில் மூழ்கித் திளைக்க வேண்டும் என்பது அவன் ஆசை.

மூன்றாவது நாள் அவனுடைய பழைய வீட்டு வாசலில் ஒரு மாட்டு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கினவர்கள் ஓர் அம்மாள், இருபத்திரண்டு வயதுள்ள இளைஞன், பதினாறு வயதுப் பெண் ஒருத்தி, இரண்டு பெண் குழந்தைகள், ஒரு சிறு ஆண் குழந்தை. இறங்கிப் பார்த்தால் வீட்டு வாசலில் பூட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. தாய்க்கும் தனயனுக்கும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அது முற்றுவதற்குள்ளாகச் சிதம்பரம் வந்து விட்டான்.

வெகு நேரம் வரை எல்லோரும் கல்யாணத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். சிதம்பரமும் வீட்டைப் பற்றிப் பேச்சே எடுக்கவில்லை. திடீரென்று பேசி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தத் திட்டமிட்டிருந்தான் அவன். சாப்பிட உட்கார்ந்ததும் அவன் மனைவி திடீரென்று நினைவு வந்தவளாக, ''நான் உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேனே! வரதட்சிணை இல்லாமல் அவர்கள் ஜானகியைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டார்களாம். திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள்!'' என்று கூறினாள்.

சிதம்பரத்தின் வாய்க்குள் போன கவளம் வாயிலேயே தங்கிவிட்டது. கண நேரத்தில் முகம் அறுந்து தொங்கியது. இறங்கிய குரலில், ''இதுவரை இப்படி ஒரு பேச்சே இல்லையே!'' என்றான்.

''பெரிய இடத்தி லிருந்தெல்லாம் பெண்கள் வருகின்றனவாம். வரதட்சிணையும் நிறையத் தருவதாகச் சொல்கிறார்களாம். அதனால்....''

''அதிருக்கட்டும், நீ என்ன சொன்னாய்?'' என்று கேட்டான் சிதம்பரம்.

''எத்தனையோ சொல்லிப் பார்த்துவிட்டேன். கெஞ்சாத தோஷமாகக் கேட்டுப் பார்த்துவிட்டேன். பயன் இல்லை!''

''இனி என்ன செய்வது?'' அவன் கலவரமடைந்த குரலில் கேட்டான். மனைவி சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். பிறகு, ''ஏதோ நிதியாமே! எனக்கு அதன் பெயர் நினைவு வரமாட்டேன் என்கிறது. அதிலிருந்து இப்பொழுதுதானே உங்களுக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைத்திருக்கிறதாம். முதல் பெண்ணுக்குச் செலவு செய்யக்கூடாதா என்று கேட்கிறார்கள்'' என்றாள்.

சிதம்பரத்துக்குத் தலையில் இடி விழுவது போல் தோன்றியது. சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தவன் கோபத்தோடு, ''ஒரு பைசா என்றால் பைசாக் காசு என்னிடம் பெயராது!'' என்று சீறினான்.

மனைவி கலவரமடைந்தாள் முதலில். அப்புறம் சமாளித்துக் கொண்டு, ''நாமும் பிடிவாதம் பிடித்தால், அப்புறம் காரியம் எப்படி நடைபெறும்? நாமோ பெண்ணைப் பெற்றவர்கள். நாம் ஒரு படி தாழ்ந்துதான் போக வேண்டும்!'' என்றாள்.

''எனக்கும் இதெல்லாம் தெரியும். ஆனாலும் வரதட்சிணை இன்றிக் கல்யாணம் செய்து கொள்ள முன் வருகிறவர்கள் வரும்போதுதான் இந்தக் கல்யாணம் நடைபெறும்.''

''இதெல்லாம் வீண் வெட்டிப் பேச்சு. இவ்வளவு நெருங்கி வந்த சம்பந்தம் கைநழுவி விட்டால், அப்புறம் பெண்ணுக்குக் கல்யாணம் ஆனாற்போலத்தான்!''

''நான் என்ன செய்யட்டும்? என்னிடம் பணம் இல்லையே!''

''அந்த ஐயாயிரம்....?''

''வீடு வாங்கி விட்டேன்!'' — விஷயம் வாயிலிருந்து வெளி வந்து விட்டது.

பரிமாறும் மனைவி, உணவருந்தும் தனயன், சுவர் மறைவில் நிற்கும் பெண் எல்லோருமே ஏக காலத்தில் கல்லாய்ச் சமைந்து விட்டார்கள்.

சிதம்பரத்தின் மனத்தில் ஒரே அலைமோதல். மனைவி கேள்விக்கு மேல் கேள்வி கேட்கவே ஆவேசத்தோடு பேசினான்: ''பையன் படித்துத் தேர்ந்து விட்டான். மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பாதித்து வந்து தருகிறான். வயதான இந்தக் காலத்தில் கூட 'அக்கடா' என்று நிம்மதியாயிருக்க எனக்கு உரிமை கிடையாதா?''

வந்த கோபத்தில் அப்படியே வீட்டை விட்டு வெளியேறியும் விட்டான். மணிக்கணக்கில் மனப் போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. எவ்வித நோக்கமுமின்றி இங்கும் அங்கும் சுற்றிக் கொண்டிருந்தான். வீடு திரும்ப அவனுக்குத் துணிவே உண்டாகவில்லை. கடைசியில் அலுத்துச் சலித்து ஓய்ந்த பின் இரவு ஏழு மணி சுமாருக்கு வேறு வழியின்றி வீடு திரும்பினான். பின்னை வீட்டில்தான்

[கதைத் தொடர்ச்சி 73-ம் பக்கம் பார்க்க]

அத்தியாயம் நாற்பத்தொன்பது

தகூடலேகை

அது என்ன மாயமோ தெரியவில்லை. புலியெனச் சீறிப் பாய்ந்து வந்த கோவிந்தவர்மன் புயலால் சுருட்டித் தூக்கி யெறியப்பட்ட ஆட்டுக் குட்டி போல் விர்ரெனப் பின்னால் சுழன்று கொண்டே போய் மடாரெனச் சுருண்டு வீழ்ந்து தன் வலக் கைத் தோள் பட்டையை இடக் கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டு 'ஹா' என்று அலறித் துடித்தான். அவன் கையிலிருந்த நீண்ட வாள் சற்றுத் தொலைவிலே போய்த் தரையில் குத்திட்டு நின்றது.



பத்தினிக் கோட்டம்

என்ன நடந்தது, எப்படி நடந்தது என்று அறிய முடியாத இமைப் பொழுதுக்குள் இவை நடந்து முடிந்து விட்டன!

இரு கைகளையும் இடுப்பின் மேல் ஊன்றிக் கொண்டு மலைபோல் எழுந்து நின்றார் பெரும் பிடுகுமுத்தரையர். அவரது உடைவாள் உறையிலேயே இருந்தது. அதை அவர் தொடவே இல்லை.

அப்படியானால் அவரைத் தாக்க வந்த கோவிந்தவர்மனைத் தடுத்துத் தூக்கி எறிந்தவர் யார்? ஏதோ, பாறை மேல் மோதிய பந்துபோல் அல்லவா பாய்ந்து வந்த அதே வேகத்தில் பின்னால் போய் வீழ்ந்து கிடக்கிறான்?

அவன் வாளைச் சுழற்றிக் கொண்டு வெறியுடன் தாவிய அதே சமயம் வில்லெனத் துள்ளி யெழுந்த முத்தரையர் பக்கவாட்டில் சாய்ந்து திரும்பி அவனது வலது தோளின் மூட்டெலும்பிலே இலேசாக ஒரு தட்டுத் தட்டினார்; அவ்வளவுதான்; அடுத்த கணம், அவன் கையிலிருந்த வாள் திசை மாறிப் பிடுங்கிக் கொண்டு போக, அவனும் நிலை தடுமாறிச் சுருண்டு வீழ்ந்தான்.


நடந்தது இவ்வளவே!

குறும்பு செய்த பிள்ளையை அடித்து விட்டு வருந்தும் தந்தையைப் போல் கவலையுடன் நின்ற முத்தரையர் அமைதியாக நடந்து போய் வலி பொறுக்க மாட்டாமல் துடித்துக் கொண்டிருந்த கோவிந்தவர்மனை மெல்லத் தூக்கித் தம் மார்பு மேல் சாய்த்துக் கொண்டு அவனுடைய தோள்புறத்தை இதமாக வழித்துத் தடவிக் கொடுத்தார்.

ஜெகசிற்பியன்

சுய நினைவு பெற்ற கோவிந்தவர்மன் சட்டென்று அவர் அணைப்பிலிருந்து திமிறிக் கொண்டு போய் ஐயனார் சிலையருகில் உட்கார்ந்து முகத்தை இரு கரங்களாலும் பொத்திக்கொண்டான். அவனுக்கு ஏற்பட்ட ஆத்திரமும் சினமும் அடங்கவில்லை என்பதற்கறிகுறியாக அவன் உடல் கிடுகிடுவென நடுங்கிக் கொண்டிருந்தது.

அநுதாபத்துடன் அவனையே பார்த்துக்கொண்டிருந்த முத்தரையர் மெல்லச் சிரித்தார். மதுக் கோப்பையில் விழுந்த பவழ மணிகள்போல் அவரது சிவந்த கண்கள் நீர்ப் போர்வையிட்டுப் பளபளத்தன. "பல்லவ நாடு இனி விமோசனம் பெற்றுவிடும்! சளுக்கியப் பகைவரைச் சங்காரம் பண்ணி, இழந்த சுதந்திரத்தை அது மீட்டுக் கொண்டு விடும்! அந்த நம்பிக்கை இப்போது எனக்கு ஏற்பட்டு விட்டது! ஐயத்துக்கு இடமின்றி அது உறுதிப்பட்டு



விட்டது!" என்று தமக்குள் தனிவாக முணுமுணுத்துக் கொண்டார்.

விம்மும் விறைப்புமாக உட்கார்ந்திருந்த கோவிந்தவர்மன் இதைக் கேட்டுச் சட்டென்று திரும்பினான். ஈரம் கசிந்த அவன் கண்கள் நிலை கொள்ளாமல் படபடத்தன. "வளர்த்த கிடா மார்பில் பாய்வது போல் உணர்ச்சி வசப்பட்டு ஏதோ செய்து விட்டேன்; மன்னியுங்கள் ஐயா!" என்று வெட்கமும் வேதனையும் செறிந்த குரலில் குமுறிக்கொண்டே தலை குனிந்தான் அவன்.

முத்தரையர் ஒரு வறண்ட சிரிப்புச் சிரித்தார். "மன்னிப்பதா? மன்னிக்க வேண்டிய தவறேதும் இங்கு நிகழவில்லையே!" என்று கூறித் தம் புஜங்களைக் குலுக்கிக் கொண்ட அவர், மேலும் கூறினார்: "பல்லவ இளவரசரிடம் பொங்கியெழுந்த அவ்வீறார்ந்த உணர்ச்சிப் பேரழலைக் கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கிறேன். காடவர் குலத்தின் வீரம், காலஞ்சென்ற நரசிம்ம வர்மரோடு அடிசாய்ந்து விடவில்லை என்பதை அறிந்து அகம் பூரித்துக் கொண்டிருக்கிறேன்."

கோவிந்தவர்மன் அவரை நிமிர்ந்து பார்க்கவும் வெட்கப்பட்டு, யானை வாகனச் சிலையின் துதிக்கையில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மிப் பொருமினான்.


இவ்வளவு நேரம் அனற் செறிவுடன் எரித்துக் கொண்டிருந்த வானம் மந்தாரமிட்டுக் கறுக்கத் தொடங்கியது. ஆனால், மேகப் பொதிகளின் நடமாட்டம் ஏதும் தென்படவில்லை. வட திசையின் தொலை தூரத்துக்கு அப்பால், கீழிருந்து மேலெழும்பிய ஏதோ ஒரு விதப் புழுதிப் படலம்தான் வெளுத்துக் கிடந்த வானப் பிராந்தியத்தை இருளடையச் செய்து கொண்டிருந்தது. அது என்ன புழுதிப் படலம்? எங்கிருந்து, எதனால் அது எழுகிறது?

முத்தரையர் அதைக் கவனிக்கவில்லை. பெருவளநல்லூர்ச் சாலைக்குத் தெற்கே, ஆலம்பாக்கத்தை நோக்கியே அவர் தம் பார்வையைச் செலுத்தியவாறு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

"ஐயா!..."

அவர் மெல்லத் திரும்பினார். தாள முடியாத துக்கத்துடன் அவரையே பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்த கோவிந்தவர்மன் விம்மலிடும் குரலில் மூச்சு முட்டக் கேட்டான்: "பழையாறைச் சோழர் சொன்ன அந்த விஷயம் உண்மைதானா? என் உயிரின் உயிரான இளங்கோப்பிச்சியைச் சளுக்கிய இளவரசனுக்கு மணம் செய்து தர இணங்கிவிட்டது உண்மைதானா?"

வெறுப்புடன் முகத்தைச் சுளித்து அவனை வெறித்துப் பார்த்த முத்தரை



யர், ''என் செவிபடக் கேட்ட சேதியைத்தான் சொன்னேன். அதில் சிறிதளவும் சந்தேகமில்லை'' என்றார் அடித்தொண்டையில்.

''திடீரென்று இப்படி ஓர் அநியாய முடிவுக்கு அவரால் எப்படி வர முடிந்தது, ஐயா?'' என்று அழமாட்டாக் குறையாக வினவினான் கோவிந்தவர்மன்.

''அநியாயத்துக்கு எப்போதுமே இரண்டு முகங்கள் உண்டு. நிகழ்த்துகிறவர்களிடம் தன் நிஜமான முகத்தை மறைத்து நியாயம்போன்ற போலி முகத்தையே அது காட்டும். எனவே, அப்படி ஓர் அநியாய முடிவுக்கு அவர் எப்படி வந்தார் என்று கேட்பதைவிட ஏன் வந்தார் என்று கேளுங்கள்: பல்லவபுரம் அரண்மனைக் கோட்டைச் சிறையிலிருந்து சோழ இளவரசியின் உதவியால் நீங்கள் வெளியேறியது கோழைத்தனமான செயல், உங்களுடைய சுயநலத் திட்டங்களுக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளவே அவளைக் காதலிப்பது போல நடிக்கிறீர்கள், அதற்காகவே அவளை ஏமாற்றிப் பழையாறை அரண்மனையிலிருந்து வெளியேறச் செய்திருக்கிறீர்கள், சிறைப்பட்டிருக்கும் உங்கள் பெரிய அன்னையாரை மீட்பதற்காக இப்போது அவளைப் பயன்படுத்தத் திட்டமிட் டிருக்கிறீர்கள் — என்றெல்லாம் நான் சொல்லவில்லை; பழையாறைச் சோழர் சொல்கிறார்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்றார் முத்தரையர்.

''வீண் பழி! விஷமத்தனமான குற்றச்சாட்டு!''

''இளவரசரால் அவ்வளவுதான் சொல்ல முடியும்........''

''அப்படியானால் அவர் சொன்னதெல்லாம் சரி என்று நீங்களும் நினைக்கிறீர்களா?''


''அவருடைய நிலையில் நான் இருந்தால் அப்படித்தான் நினைப்பேன், இளவரசே!''

''துரோகிகள்! நயவஞ்சகர்கள்! மனச்சாட்சியற்ற மாபாவிகள்!''

''இன்னும் பெரிய வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து வசை பாடலாம். ஆனால் வசைச் சொற்களை வீசவும் ஒரு தகுதி வேண்டும்என்பதை மறந்துவிடக்கூடாது.''

''மாபெரும் பல்லவ சாம்ராஜ்யத்தின் மகா சக்கரவர்த்தி பரமேசுவர வர்மருடைய இளவல் நான்! அவரது திருக்கரத்தால் இளவரசுப் பட்டம்









சூட்டப்பெற்ற பல்லவ இளவரசன் நான்! இவற்றைவிட வேறென்ன தகுதி வேண்டும் எனக்கு?''

''இறந்த காலத்தின் பட்டங்களை நிகழ் காலத்தில் சுமந்து கொண்டு எதிர்காலத்தை எட்டிப் பார்க்க முயல்வது அறியாமை.''

''சந்திரலேகைச் சிற்றரசே!.......'' என்று பயங்கரமாகப் பிளிறிக் கூவினான் கோவிந்தவர்மன்.

''இப்பொழுதாவது உங்களுடைய உண்மை நிலையைப் புரிந்து கொண்டீர்களா இளவரசே?'' என்று புன்முறுவலுடன் கேட்டுக்கொண்டே போய் அவனது விம்மிப் புடைத்த தோள்களில் தம் இரு கைகளையும் வாஞ்சையுடன் போட்டுக்கொண்டு அவன் முகத்தையே ஒரு கணம் உற்றுப் பார்த்த முத்தரையர் அடைத்த குரலில் மேலும் சொன்னார்: ''பழையாறைச் சோழர் தம் அருமைக் குமாரியைச் சளுக்கிய விநயாதித்தனுக்கு மணம் செய்து தர எப்படித் துணிந்தார் என்ற வினவுக்கு மெய்யான விடை இதிலேதான் அடங்கியிருக்கிறது. பல்லவ இளவரசரான நீங்கள் இப்போது பெயரளவில்தான் இளவரசராயிருக்கிறீர்களே தவிர, அதற்கான எவ்வித உரிமையும் அந்தஸ்தும் உங்களிடம் இல்லை. பழையாறைச் சிற்றரசரின் அந்தஸ்துக்குச் சமதையாகக்கூட நீங்கள் இருக்கவில்லை. இதுவே அவர் மனமாற்றத்துக்கு உரிய உண்மைக் காரணம்.''

அவமானச் சினத்தால் அனற்பிழம்பாகச் சிவந்து துடித்த கோவிந்தவர்மன் அக்குமிக்குமாக விழித்துப் பார்த்துப் பற்களை நறநறவெனக் கடித்தான். சுடு மணலில் எறியப்பட்ட விரியன் பாம்புபோல் தன் உடலை நெளித்து வளைத்து முறுக்கிக்கொண்டு நின்ற அவன் சடாரென்று திரும்பி, ''ஏன் ஐயா! பழையாறைச் சோழரின் அந்தப் பச்சைத் துரோகமான முடிவுக்கும், அவரது குமாரி காணாமற் போயிருப்பதற்கும் ஏதாவது தொடர்பு இருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?'' என்றான் ஆத்திர விம்மலுடன்.

''அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. இளங்கோப்பிச்சி எங்கும் போயிருக்க மாட்டாள். அவளது தந்தையே நேரில் வந்து அவளைப் பழையாறைக்கு அழைத்துப் போயிருக்கலாம். அல்லது அநந்தமதியைத் துணைக்கு வைத்துக்கொண்டு அவளே தன் தந்தையிடம் போய்ச் சேர்ந்துவிட்டிருக்கலாம். இந்த விவரம் தெரியாத ஆபத்துதவி சம்புவராயன் அவள் காணாமற் போனதாக எண்ணித் தன்னை நவகண்டம் செய்து கொள்ள முயன்றிருக்கலாம். அல்லது உண்மையை மறைத்து நம்மை ஏமாற்றுவதற்காக அந்தக் காடுகிழான் கோயிலில் அப்படியொரு நாடகத்தை அவன் நடத்திக் காட்டியிருக்கலாம்...'' என்று எங்கோ பார்த்தவாறு வெகு அலட்சியமாகக் கூறினார் முத்தரையர்.

கோவிந்தவர்மனுக்குத் துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்து விட்டது. கண்டம் வெடித்து விடுவதுபோல் விம்மிப் பொருமிய அவன் கிர்ரென ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டே போய் ஐயனார் சிலைமேல் துவண்டு சாய்ந்தான்.

பெருவளநல்லூர்ச் சாலைக்கு வடக்கே அகண்டாகாரமாகக் கிளம்பிப் பரவிய புழுதிப் படலம் வான வெளியை அடைத்து மூடியவாறு அதிவேகமாக முன்னேறி வந்து கொண்டிருந்தது!....

வெறித்த நோக்கில் நின்றிருந்த முத்தரையர் சட்டென்று திரும்பி, மயங்கிச் சாய்ந்து கிடந்த கோவிந்தவர்மனைத் தூக்கி நிறுத்திவிட்டு அவன் முகத்தை உற்றுப் பார்த்தார். பிறகு கடகடவெனச் சிரித்துக் கொண்டே மிடுக்கான குரலில் கூறினார்: ''இளவரசே! எந்த மனிதனும் காதலுக்காகவோ காதலிப்பதற்காகவோ மட்டும் பிறப்பதில்லை; வேறு எத்தனை எத்தனையோ காரிய — காரணங்களுக்காகவும் அவன் பிறக்கிறான். காதல் என்பது வாழ்க்கையில் நேரிடும் பல அசம்பாவிதங்களில் ஒன்று. மற்ற அசம்பாவிதங்களைவிட இது சற்றுக் கவர்ச்சிகரமான அசம்பாவிதம் — அவ்வளவே. அதற்கு மேல் அதில் விசேஷம் ஏதும் இல்லை. வாழ்க்கையின் மொத்தக் கணக்கைக் கூட்டிப் பார்க்கும்போது அதில் பயனே இல்லாத நஷ்டக் கணக்கு ஒன்று தென்படுமானால் அதுதான் காதல். இங்கிருக்கும் துரும்பை அங்கெடுத்துப் போடுவதைவிட எளிதான காரியம் ஒன்று உலகத்திலே உண்டென்றால் அதுதான் காதலிப்பது. இந்த அற்பமான காதலுக்காகவா, வாழ்வின் அஸ்திவாரமே அதிர்ந்து சரிந்து போனாற்போல் கலங்கிக் கண்ணீர் வடிக்கிறீர்கள்? மனிதன் காதலை உருவாக்குகிறானா, காதல் மனிதனை உருவாக்குகிறதா? யோசித்துப் பாருங்கள், இளவரசே!''

சூட்டுக்கோல் பட்ட காளை போல் நிமிர்ந்து தலைதூக்கினான் கோவிந்தவர்மன். அதைக் கவனியாதது முத்தரையர் மேலும் கூறினார்: ''பல்லவ குலத்தில் பிறந்த கோவிந்தவர்மரை ஒரு மாசற்ற இலட்சியவாதியென இந்நாள் வரை எண்ணியிருந்தேன். சுதந்திர வேட்கை கொண்ட ஒரு மானமிக்க வீர இளைஞர் என்றும் எண்ணியிருந்தேன். ஆனால் அவரோ, காதலைத் தவிரத் தமக்கு வேறு

எதுவுமே தெரியாது — காதலிப்பதைத் தவிர வேறு இலட்சியமே தமக்கு இல்லை என்பதுபோல் இதோ கண் கலங்கி நிற்கிறீர். எவ்வளவு பெரிய ஏமாற்றம் இது! எனக்கு மட்டுமா? இல்லை; இந்தப் பழம் பெருமை வாய்ந்த பல்லவ நாட்டுக்கே நேர்ந்த மாபெரும் ஏமாற்றம்!''

படபடவெனக் கண்களைத் துடைத்துக் கொண்ட கோவிந்த வர்மன், வெறி பிடித்தவன் போல் அவரை விழித்துப் பார்த்தான்.

''ஹூம்! இனி இங்கே நிற்பதுகூட என் வீரத்துக்கு இழுக்கு. நான் சென்று வருகிறேன்.'' — விருட்டென்று திரும்பினார் முத்தரையர்.

அடுத்த கணம் வீசிய வேலெனப் பாய்ந்தோடிய கோவிந்த வர்மன் அவர் எதிரே போய் முரட்டுத்தனமாக மோதிக்கொண்டு நின்று, பயங்கரமாகச் சிரித்தான். ''காதலாம்! கண்ணீர் விடுகிறேனாம்! யார் சொன்னது அப்படி?'' என்று சொற்களை அரைத்துக் குதப்பிக் கொண்டே பயங்கரப் பேய்ச் சிரிப்புச் சிரித்தான் அவன்.

அவனுடைய அனல் பறியும் மூச்சைத் தாளமாட்டாதவர் போல் ஓரடி பின்னால் நகர்ந்து கொண்ட முத்தரையர், வியப்பும் துடிப்புமாக அவனைக் கூர்ந்து பார்த்தார்.

''சொல்லுங்கள் ஐயா! இந்தக் கோவிந்தவர்மன் ஒரு மாசற்ற இலட்சியவாதிதான்; சுதந்திர வேட்கை கொண்ட ஒரு மானமிக்க வீர இளைஞன்தான் — இதை ஆயிரம் முறை சொல்லுங்கள்! அதற்கு முழுதும் தகுதியாக இதோ வந்து நிற்கிறேன்! சொல்லுங்கள் ஐயா!''

மகிழ்ச்சியால் விம்மிச் சிலிர்த்து நிமிர்ந்த முத்தரையர் அவனை அப்படியே ஆரத் தழுவி மார்புடன் அணைத்துக்கொண்டார். சில விநாடிகளுக்குப் பின் அவருடைய அணைப்பிலிருந்து விடுபட்ட கோவிந்தவர்மன் சற்றுத் தள்ளிப் போய் நின்றான். ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி மௌனமாயிருந்த முத்தரையர் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர் போல் தம் இடுப்பிலிருந்த ஓர் ஓலை நறுக்கை எடுத்து அவனிடம் நீட்டினார்.

கோவிந்த வர்மன் அதை அவசரமாக வாங்கிப் படித்தான். அவன் முகம் ஆச்சரியத்தால் விரிந்து மலர்ந்தது. ''இத்தனை நாட்களாக இந்த விஷயத்தை என்னிடம் நீங்கள் சொல்லவே இல்லையே?'' என்று மகிழ்ச்சி மேலிடக் கேட்டான்.

''சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். இன்றுதான் அது சரிப்பட்டு வந்தது'' என்று மெல்லச் சிரித்துச் சொன்னார் முத்தரையர்.

தன் கையிலிருந்த ஓலையை மீண்டும் ஒரு முறை படித்துப் பார்த்த கோவிந்த வர்மன், ''இது என் தமையனார் பரமேசுவர வர்மர் எழுதிய ஓலையா? அல்லது....?'' என்று தயக்கத்துடன் வினவினான்.

முத்தரையரின் முகம் கறுத்தது. பீதியுடன் சுற்று முற்றும் பார்த்துக் கொண்ட அவர் உள்ளடங்கிய ரகசியக் குரலில் கூறினார்: ''சந்தேகமின்றி இது ஒரு தகடு வேலைதான், இளவரசே! அதாவது, பல்லவ மன்னர் பரமேசுவர வர்மரின் பெயரால் அவரே தம் கைப் பட எழுதியது போல் — தயாரிக்கப் பட்ட ஒரு பொய் ஓலை இது!''

திகைப்பும் வியப்புமாக அவரைக் கூர்ந்து நோக்கினான் கோவிந்தவர்மன்.

''எதிரிகளின் இருப்பிடத்துக்குப் போன பரமேசுவர வர்மர் இன்னமும் திரும்பி வராததாலும், அப்படியே அவர் வந்தாலும் இப்படி ஓர் ஓலையை அவரிடம் எழுதி வாங்க இயலாது என்பதாலும்தான் நானே இந்தக் காரியத்தைத் துணிந்து செய்திருக்கிறேன். இதனால் ஏதேனும் நன்மைகள் விளையுமானால் அவை முழுக்க முழுக்கப் பல்லவ மன்னருக்கும் பல்லவ நாட்டுக்குமே உரியவை ஆகட்டும்; தீமைகள் விளையுமானால் அவற்றின் முழுப் பொறுப்பையும் நானே ஏற்றுக் கொள்வேன். இப்போதைக்கு இது பற்றி இவ்வளவே என்னால் சொல்ல முடியும்.'' — முத்தரையரின் குரல் கம்மிக் கரைந்தது.

பக்தி விநயத்துடன் அவரையே பார்த்துக்கொண்டிருந்த கோவிந்த வர்மன், ''அப்படியானால் நான் இந்த ஓலையை எடுத்துக்கொண்டு இப்போதே புறப்படலாம் அல்லவா?'' என்று உற்சாகம் ததும்பக் கேட்டான்.

''விழிப்போடு சென்று வெற்றியுடன் வாருங்கள்'' என்று எங்கோ பார்த்தவாறு சொன்ன முத்தரையர் சட்டெனத் திரும்பி, ''சற்று நேரம் இருங்கள், இளவரசே! ஆலம்பாக்கத்துக்குப் போயிருக்கும் ஆபத்துதவி இளங்காரிக் குடையான் எடுத்து வரும் செய்தியைத் தெரிந்து கொண்டு புறப்படலாம்'' என்று கூறினார்.

வேதனைச் செருமலுடன் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்ட கோவிந்த வர்மன், ''வேண்டாம், ஐயா! எனக்கு இனிமேல் அந்தச் செய்தி தேவையில்லை. என் இலட்சிய வேள்வியில் என்னையே ஆஹுதி செய்துகொள்ளத் தீர்மானித்து விட்டேன். அதைத் தவிர என் வாழ்க்கையில் வேறேதும்

இனி குறுக்கிட முடியாது. நான் சென்று வருகிறேன்'' என்றவாறு சற்றுத் தொலைவில் நின்றிருந்த இரண்டு குதிரைகளில் ஒன்றின் மீது தாவி ஏறினன். மறு கணம் அந்தக் குதிரை தென் திசை நோக்கி வளியென விரைந்து மறைந்தது.

பிரமை பிடித்தவர்போல் விறைத்து நின்ருர் பெரும்பிடுகு முத்தரையர். அவரை அறியாமலே அவர் கண்கள் கலங்கி நீரை வழிய விட்டன. எவ்வளவு நேரம் அப்படிச் சமைந்து நின்ருரோ, அது அவருக்கே தெரியாது. எங்கோ கொந்தளிக்கும் கடலின் அலையோசை போன்ற குமுறல் ஒலி கேட்கவே அவர் சுய உணர்வு பெற்றுத் திரும்பினர்.

பெருவளநல்லூர்ச் சாலையின் வட திசையிலிருந்து அந்தப் பேரொலி கேட்டது. வானுக்கும் பூமிக்குமாக எழுந்து பரவிய புழுதிப் படலம் ஓங்கி வளர்ந்த மரங்களையெல்லாம் மூடி மறைத்து விட்டிருந்தது. பெரும் புயலும், பேரிடியும், பெரு மழையும் புரண்டு உருண்டு மோதி யடித்துக்கொண்டு வருவது போன்ற முழக்கப் பேரோசை!

ஒன்றும் புரியாமல் வெலவெலத்து நின்ற முத்தரையர், யானை வாகனச் சிலையின் மேடைமீது ஏறி நின்று சாலையின் தொலைதூரத்துக்கு அப்பால் தம் பார்வையைச் செலுத்தினர்.

நூற்றுக் கணக்கான கரி பரிகளும், ஆயிரக் கணக்கான போர் வீரர்களும் சளுக்கியக் கொடிகளை ஏந்தியவாறு புழுதிக் கூடாரமிட்டுப் பல்லவபுரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருப்பது தெரிந்தது!

இந்த முப்பெரும் சளுக்கியப் படைகள் எங்கே எதற்காகப் பெயர்ந்து செல்கின்றன?

மிரட்சியுற்றுப் பரபரத்த முத்தரையர் அந்தக் காட்சியை இன்னும் சரியாகக் கவனிக்க வேண்டுமென்று எண்ணி, மெள்ளப் பின்னல் நகர்ந்தார். யானை வாகனத்துக்கு மறு புறமாகப் பின்னேக்கி நகர்ந்த அவர், ஏதோ தம் உடல்மீது தட்டுப்படவே, திடுக்குற்றுத் திரும்பினர்.

அங்கே, தன்னை மறந்த சிந்தனையில் தலையைத் தாங்கிப் பிடித்த வண்ணம் துயரமே உருவாக உட்கார்ந்திருந்தான் பரமேசுவரவர்மன்.

அத்தியாயம் ஐம்பது

பருவ மேகம்

பல தினங்களுக்குப் பின் இன்றுதான் சோழ இளவரசி இளங்கோப்பிச்சியின் சுந்தர வதனத்தில் மகிழ்ச்சி குடியேறியது.

தன்னைத் தேடிக்கொண்டு வந்த இளங்காரிக்குடையானின் மூலம் எல்லா விவரங்களையும் கேட்டறிந்த அவள், தான் பல்லவபுரம் இலவந்திகைப் பள்ளிக்குப் போக நேர்ந்த தகவல்களைக் கூறிச் சற்று முன்தான் அவனை அனுப்பி வைத்திருந்தாள்.

ஆந்திர இளவரசி உத்தமசீலியின் அழைப்புக்கிணங்கித் தானும் அநந்த மதியும் பல்லவபுரத்துக்குப் போனதால் ஏற்பட்ட விபரீதங்களை நினைக்க நினைக்க அவளுக்கு வேடிக்கையாகவும் இருந்தது, வேதனையாகவும் இருந்தது. இத்தனைக்கும் காரணமான ஆபத்துதவி சம்புவராயன் மேல் அடங்காச் சினம் கொண்டாள் அவள்.

'பெருவளநல்லூர்ச் சேதியைக் கலைஞரிடம் பரமேசுவர வர்மரைப் பற்றிய விஷயங்களைச் சொல்லிவிட்டுத் திரும்பி வந்த அவன் என்னைக் காணுததால் பெரிதும் அதிர்ச்சி யடைந்துவிட்டிருப்பான். எதிரிகளால் எனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து விட்டிருக்குமோ என்று பயந்துவிட்டுமிருப்பான். அந்தக் குழப்பத்தில் இங்கே சிறுபொழுது காத்திருந்து பார்க்காமல் அவசரப்பட்டு உடனே என்னைத் தேடிக்கொண்டு ஓடி விட்டிருக்கிறுன். அவனுடைய நிலையில் வேறு யார் இருந்தாலும் அப்படித்தான் அமைந்து போயிருப்பார். என் தந்தையார் என்னைப் பழையாறைக்கு அழைத்து வரும்படி அவனிடம் கட்டளையிட்டிருக்கும்போது, நான் இங்கே காணப்படவில்லையென்றல் அவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! பாவம், அதனல்தான் அவன் காடுகிழான் கோயிலில் தன்னைப் பலியிட்டுக் கொள்ள முயன்ருன் போலும்!' — சம்புவராயன் மேல் பொங்கி யெழுந்த கோபம் இப்போது அநுதாபமாக மாறி வழிந்தது. கடமையே உயிரென மதிக்கும் அந்தச் சுத்த வீரனின் அன்பு உள்ளத்தை எண்ணி மனம் உருகினுள்.

அவளுடைய சிந்தனை வேறு திசையில் திரும்பியது. 'நான் காணுமற்போய் விட்டதாகச் சம்புவராயன் என் தந்தையாரிடம் சொல்லி யிருந்தால் அவருடைய நிலை என்ன ஆகி யிருக்கும்? உயிரே பறிபோன மாதிரி பதறித் துடித்து விட்டிருப்பாரே! அடங்காச்

சினம் கொண்டு தம் எதிர்ப்பட்டவர்களையெல்லாம் சங்காரம் பண்ணுவதல்லாமல், தம்மையும் மாய்த்துக் கொள்ளத் துணிந்துவிடுவாரே! அவருடைய அந்தப் பயங்கரக் கோபத்துக்கு முதற் பலியாகக் கூடியவன் சம்புவராயன்தான்! கடமை தவறியதாகக் குற்றம் சாட்டி அவனைக் கண்டத் துண்டமாக வெட்டி எறிந்து விட்டிருப்பார்! எனினும் அவர் அக்கணமே இந்த ஆலம்பாக்கத்துக்கு ஓடோடி வந்திருக்க வேண்டுமே? என்னைப் பற்றிய தகவலைத் தாமே நேரில் விசாரித்து அறிய இங்கு புறப்பட்டு வந்திருப்பாரே! இத்தனை நாட்களாகியும் அவர் வராமலிருப்பதிலிருந்து, சம்புவராயன் அந்தச் செய்தியை அவரிடம் தெரிவிக்கவில்லை என்றாகிறதே! அப்படியானால் இன்னமும் அவர் என்னைத் தேடும் முயற்சியிலேயே ஈடுபட்டிருக்கிறாரோ?' — நெஞ்சம் நடுங்கித் தவித்த அவள், இத்தனைக்கும் காரணமான ஆந்திர இளவரசனைத் தன் வாயாரச் சபித்துத் தீர்த்தாள். ஆனால் உடனே, அப்படிச் சபித்ததற்காக மனம் வருந்தவும் செய்தாள்.

'அவன்தான் என்ன அழகான பெண்! அழகு மட்டுமல்லாமல் அற்புத குண நலன்களும் வாய்க்கப் பெற்றிருக்கிறான்! தனக்குச் சொந்தமான பட்டோலை என்னிடம் எப்படி வந்தது என்பதை விசாரிப்பதற்காக என்னை அழைத்த அவன், எத்தனை அன்போடும், பண்போடும் நடந்து கொண்டான்! அவன் நினைத்திருந்தால் அந்த விசாரணையைச் சளுக்கியத் தளபதி வில்வேலியைக் கொண்டே நடத்தியிருக்கலாம்; அப்படிச் செய்திருந்தால் என்னைப் பார்க்கவும் இயலாத எத்தனையோ விபரீதங்கள் ஏற்பட்டு விட்டிருக்கும்! அதற்கெல்லாம் அவன் இடம் வைக்காமல் அந்த விஷயத்தை எவ்வளவு சாதுர்யமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டான்! இத்தனைக்கும் அவன் அதை ஏற்கனவே அறிந்தும் இருக்கிறான். அது மட்டுமின்றி, என்னைப் பற்றிய உண்மைகளையும், பல்லவ மன்னர் - பல்லவ இளவரசர் ஆகியோரைப் பற்றிய இரகசியங்களையும் தெரிந்து வைத்திருக்கிறான். அரண்மனைக் கோட்டையில் சிறைப்பட்டிருந்த பல்லவ இளவரசர் தப்பியோட உதவியது நான்தான் என்ற விவரத்தையும் அறிந்து கொண்டிருக்கிறான். பரமேசுவர வர்மர் இந்த இல்லத்துக்கு வந்து போன விஷயமும் அவனுக்குத் தெரிந்திருக்கிறது. இவ்வளவையும் தெரிந்துகொண்டு அவன் ஏன் என்னிடம் அத்தனை அன்பும் பரிவும் காட்டுகிறான்? அவன் நினைத்திருந்தால் என்னை மட்டுமல்ல, பரமேசுவர வர்மரையும், கோவிந்த வர்மரையும்கூட எளிதில் சிறைப் பிடிக்கச் செய்திருக்கலாமே? அவனுடைய பெரிய தந்தையான சளுக்கிய விக்கிரமாதித்தனும், தளபதி வில்வேலியும், பல்லவ மன்னரைத் தேடிப் பிடிப்பதற்காக ஏதேதோ முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும்போது, இவன் அவர்களுக்கு உதவி செய்யாமல் இப்படி நடந்து கொள்ளக் காரணம் என்ன? பரமேசுவர வர்மர் எதிரிகளின் பாசறையான பல்லவபுரத்துக்குப் போய்த் தம்மைத் தாமே ஓவியமாக வரைந்து கொடுத்துவிட்டு எவ்வித இன்னலுக்கும் உள்ளாகாமல் தப்பி வர அநுகூலமாக இருந்தவனும் இந்த ஆந்திர இளவரசன்தானே? இவனைத்தான் 'வரிப் புலிகள் வாழும் காட்டில் மாசற்ற மான்களும் வாசம் செய்யலாம்' என்று அவர் குறிப்பிட்டுப் புகழ்ந்தாரோ?'

இளங்கோப்பிச்சி தன் பூவுடலைச் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தாள். 'இல்லை, இல்லை. இதற்காக அவனைப் பற்றி இத்தனை உயர்வாக எண்ணி விடக் கூடாது. விஷத்தை உள்ளடக்கிய நல்ல பாம்பு போலவும் அவன் இருக்கலாம். எங்களையெல்லாம் கூண்டோடு அழிக்க ஒரு சரியான சந்தர்ப்பத்தை உருவாக்கும் பொருட்டு அவன் இப்படி நல்லவன்போல் நடித்துப்

பசப்பியிருக்கலாம். அவனை நம்பக் கூடாது; நம்பவே கூடாது. பல்லவ இளவரசர் வந்ததும் இந்த விவரங்களைக் கூறி, அவரது யோசனைப்படியே இனி நடந்து கொள்ள வேண்டும்.'

தெளிந்த மனத்துடன் எழுந்த அவள், தன்னை எளிய முறையில் அலங்கரித்துக் கொள்ள விரும்பினாள். பல தினங்களுக்குப் பின் இன்றுதான் அவளுக்கு இந்த எண்ணமே தோன்றியது. மகிழ்ச்சியுடன் அந்தப் பணியில் ஈடுபடலானாள்.

உள்ளே, அணி மணி ஆடைகளை மூட்டை கட்டுவதில் முனைந்திருந்தாள் அநந்தமதி. கோவிந்தவர்மன் இங்கு வந்ததும் இளங்கோப்பிச்சியை அவன் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டுப் பெருவளநல்லூர் சேதியக் கலைஞரின் இல்லத்துக்குப் பயணமாகி விடவேண்டும் என்பது அவள் திட்டம்.

சில விநாடி நேரச் சிங்காரிப்பிலேயே அழகின் இலக்கணமாகி விட்ட இளங்கோப்பிச்சி குதூகலத்துடன் துள்ளி யெழுந்து வாசல் திண்ணைக்கு வந்து சேர்ந்தாள். கவிதை யெழில் வழியும் அவளது கருநீலக் கண்கள் பல்லவபுரம் சாலையை நோக்கிப் பாய்ந்தன. அவள் மனமோ, கோவிந்தவர்மனின் சுந்தர வடிவத்தைக் காதல் தூரிகையால் சித்திரித்து வழிபடத் தொடங்கியது.

'நான் காணமற் போய் விட்டதாகச் சம்புவராயன் சொன்னதைக் கேட்டு அவர் துடிதுடித்து விட்டாராமே! புத்தி பேதலித்தவர் போல் புலம்பிக்கொண்டிருக்கிறாராமே! அன்றிலிருந்து இன்று வரை ஊண் உறக்கமும் கொள்ளவில்லையாமே! ஐயோ, அவர் என்பொருட்டு எத்தனை வேதனைகளை அநுபவிக்கிறார்! நான் இங்கிருப்பதாக இளங்காரிக் குடையான் போய்ச் சொன்னதும் மகிழ்ச்சிக் கூத்தாடுவார்! அந்த விநாடியே முத்தரையரிடம் விடை பெற்றுக் கொண்டு என்னைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டுவிட்டிருப்பார்! வாயு வேகம், மனோ வேகமாகத் தம் புரவியைச் செலுத்தி வந்து கொண்டிருப்பார்!'

மகிழ்ச்சியால் விம்மிப் புடைத்த நெஞ்சகத்தைத் தன் இரு கைகளாலும் போர்த்திக்கொண்டு இன்பக் கிறக்கத்தில் ஆழ்ந்தாள் அவள்.

நேரம் நகர்ந்து கொண்டே இருந்தது. பல்லவபுரம் சாலை வெறிச்சோடியே கிடந்தது.

இளங்கோப்பிச்சி பொறுமை இழந்தாள். வாசல் திண்ணையை விட்டுச் சாலையோரம் வந்து, தொலை தூரத்துக்கு அப்பால் தன் பார்வையை ஓட்டினாள். அது சூன்யமாகவே தென்பட்டது.

அவள் வதங்கிச் சோர்ந்தாள். துக்கம் தொண்டையை அடைத்தது. ஏமாற்றம் இதயத்தை முள்ளெனக் குத்தியது. கண் கலங்கி நின்ற அவள் மீண்டும் வாசல் திண்ணைக்கே போகத் திரும்பினாள்.

'டடாக், டக்! டடாக், டக்!'

தேவகானம் கேட்ட பூங்குயில் போல் பரவசத் துள்ளிட்டு நிமிர்ந்தாள் இளங்கோப்பிச்சி.

அதோ, பல்லவபுரம் சாலையிலே ஒரு புரவி பாய்ந்தோடி வருவது தெரிகிறது. ஒற்றைச் சக்கரம் உருண்டு வருவது போல் தோன்றும் அச் செந்நிறப் புரவியைச் செலுத்தி வருவது யார்? சந்தேகமில்லை; பல்லவ இளவரசன் கோவிந்தவர்மனேதான் அவன்! (தொடரும்)

யாரோ இவள் யாரோ?

வைத்தியக்கார ஆஸ்பத்திரியைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தார் ஒரு பிரமுகரின் மனைவி. அவரோடு ஆஸ்பத்திரி அதிகாரியும் ஒவ்வோர் இடத்தையும் அவருக்கு விவரித்துச் சொல்லிக் கொண்டே வந்தார். தோட்டப் பகுதிக்கு அருகே வந்தபோது ஒரு பெண்மணி காவலாளிகளை அதட்டி உருட்டிப் பாடாய்ப்படுத்திக் கொண்டிருந்தாள். காவலாளிகள் அனைவரும் அப்படியே கதிகலங்கிப் போய் நின்றனர்.

இதைக் கண்டதும் பிரமுகரின் மனைவி, ''இதென்ன? எல்லாரையும் அறையில் பூட்டி வைத்திருக்கிறீர்கள். இவளுக்கு மட்டும் இத்தனை சுதந்திரம் கொடுத்திருக்கிறீர்களே, ஏன்?'' என்று வியப்புடன் கேட்டார்.

''அதுவா?'' என்று தயங்கினார் அதிகாரி.

''ஏன், இவ்வளவு பயம் இவளிடம்? அவ்வளவு தூரம் முற்றி விட்டதா அவளுக்கு.....அவளை அடக்கி வைக்க முடியவில்லையா?'' என்று கேட்டாள் பிரமுகரின் மனைவி.

''மன்னிக்க வேணும்! அவள் என் மனைவி!'' என்று சிரமப்பட்டுச் சொல்லி வைத்தார் அதிகாரி. பிரமுகரின் மனைவியின் முகம் அடைந்த விகாரத்தை விவரித்துச் சொல்ல வேண்டியதில்லையல்லவா?

சுகந்தியின் கல்யாணம்

எஸ். விசுவநாதன்



கோனை வாய்க்கால் பாளையத்திலிருந்து முத்துராமனுக்குக் கடிதம் எழுதக் கூடியவர் அவனுடைய மாமா சம்பூர்ணத்தைத் தவிர வேறு யார் உண்டு?

'ஊருக்கு வந்து வருஷக் கணக்காகிறது... இந்த வருஷம் வந்து விட்டுத்தான் போக வேண்டும்!' என்று எழுதியிருந்தார். 'வந்து விட்டுத்தான் போக வேண்டும் — வராமல் போக முடியுமோ, இல்லை வரத்தான் முடியுமோ?' என்று மானசீகக் கிண்டல் செய்து பார்த்துக் கொண்டான் முத்துராமன். 'எல்லோருக்கும்தான் மாமாக்கள், சித்தப்பாக்கள் இருக்கிறார்கள், டில்லியிலும் பம்பாயிலும், கல்கத்தாவிலும். என் மாமா கோணலிலும் கோணலான அந்தக் கோனை வாய்க்கால் பாளையத்தில்தானா போயிருக்க வேண்டும்!''

'கல்லூரி முடிந்து இஞ்சினீயரிங் படித்து வேலையில் உட்கார்ந்து ஒரு வருஷம் ஆகிறது. ராதல் லீவில் குஷாலாக ஸ்ரீநகர், பெங்களூர் என்று போய் வராமல் கோணல் என்ன வேண்டி யிருக்கிறது. வாய்க்கால் என்ன வேண்டி யிருக்கிறது!' என்று மனசுக்குள் வெறுத்துக் கொண்டாலும், அப்பா, அம்மா யாரும் இல்லாத தனக்கும், தன் சொத்துக்குச் காவலாளியாக இருந்து அன்பும் அபிமானமும் காட்டி வரும் மாமா சம்பூர்ணத்தை நினைத்ததும் பாவமாக இருந்தது. 'போய்த் தொலைப்போம்' என்று தீர்மானித்துக் கொண்டு ஒரு மாத லீவுக்கு விண்ணப்பித்துக் கொண்டான் முத்துராமன்.

லீவுக்கு விண்ணப்பம் செய்து விட்டானே தவிர, முத்துராமனின் சிந்தனை யெல்லாம் பிறகுதான் சுகந்தியின் மேல் திரும்பியது. ஒரு மாதம் எப்படி அவளைப் பார்க்காமல் இருப்பது என்று அமெச்சூர் காதலர்களுக்கே உண்டாகும் அநாவசியக் கவலைகள் அவன் இதயத்தைச் சூழ்ந்தன.

அவளுடைய காலேஜுக்குப் போன் செய்து, மாலை நேரு பார்க்கில் சந்திக்கச் சொன்ன போது, அவள், ''என்ன...என்ன செய்தி?'' என்று பரபரப்போடு கேட்டாள். மனசுக்குள் தான் பெரிய ஹிட்ச்காக் என்ற நினைப்போடு அவள் உள்ளத்தில் 'ஸஸ்பென்ஸ்' உண்டாக்கி விட்டு போனை வைத்தான் முத்துராமன்.

மாலை சுகந்தியைப் பார்த்ததும், அவன் ஒரு மாத விடுமுறையில் மாமாவின் ஊருக்கு மறுநாள் செல்ல விருப்பதைச் சுகந்தி அறிந்து கொண்ட போது, அவள் துடி துடித்துத்தான் போய் விட்டாள்.

''இந்த அழகான சென்னையை விட்டு யாராவது வாய்க்கால் பாளையத்துக்குப் போவார்களா?'' என்று கேட்டாள் சுகந்தி.

''வெறும் வாய்க்கால் பாளையம் அல்ல டார்லிங், கோனை வாய்க்கால் பாளையம்!'' என்று திருத்திய முத்துராமன், ''அது கிடக்கட்டும் சுகந்தி.... உன் அக்காவின் கல்யாணம் என்னவாயிற்று? வரன் கிடைத்ததா?'' என்று ஒரு கேள்வியைப் போட்டான்.

சுகந்தியின் தமக்கைக்கு வரன் பார்த்துக் கொண்டிருப்பதாகவும், அவள் திருமணம் முடிந்த பிறகுதான் சுகந்தியின் கல்யாண விஷயத்தில் தலையிட முடியும் என்று அவள் தகப்பனார் ஒரே காலில் நின்றதுதான் முத்துராமன் – சுகந்தி திருமணம் தள்ளிப் போகக் காரணம்!

''ஒன்றும் சரியாக அமையவில்லை. நீங்களாவது உங்களுக்குத் தெரிந்த நபர்களின் விலாசத்தைத் தெரிவிக்கக் கூடாதா? அப்பாவை 'அப்ரோச்' பண்ணச் சொல்லுவேனே!'' என்றாள் சுகந்தி.

''நான்தான் நாளைக்கு ஊருக்குப் போகிறேனே சுகந்தி.... அங்கே மாமாவுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் பார்க்கிறேன். அது வரையில் பொறுத்துக் கொள், சுகந்தி....!'' என்றான் முத்துராமன்.

பிரியுமுன் அவர்கள் விட்ட பெருமூச்சை அப்படியே பிடித்து ஒரு பலூனில் அடைத்திருந்தால், மூன்று நாளைக்கு ஆகாயத்தை விட்டுக் கீழே இறங்காமல் வானத்தில் வட்டமடித்திருக்கும் அது!

❁ ❁ ❁

கோனை வாய்க்கால் பாளையத்துக்குப் பெட்டி படுக்கை சகிதம் முத்துராமன் வண்டியில் வந்து இறங்கிய போது, அவன் மாமா வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்.

அத்தனை பெரிய வீட்டில், அவன் மாமாவைத் தவிர வேறு யாரும் கிடையாது. மாமா ஒரு பிரம்மச்சாரி. வயது நாற்பதை எட்டப் போகிறது என்றால் யாரும் நம்பமாட்டார்கள்; அப்படிக் கட்டுமஸ்தான உடம்பு. இளமை முழுக்கக் குலையாத முகம்.

எத்தனை குளிரானாலும் குளிர் நீரில்தான் ஸ்நானம். குளிக்கு முன்னால் தேகப்பயிற்சி; தண்டால், பஸ்கி, கர்லாக்கட்டை சுற்றுதல் ஆகியவை. காலையில் காப்பி கிடையாது!

உள்ளே நுழைந்த முத்துராமன், ''மாமா! மாமா!'' என்று குரல் கொடுத்தான்.

சுவரில் பெரிய அளவுக்கு விவேகானந்தரின் படம். அலமாரி நிறைய என்னென்னவோ புத்தகங்கள். விவேகானந்தர், காந்திஜி எழுதியவை.... யோகாசனப் படங்கள்–நூல்கள் வேறு இருந்தன.

''மாமா!'' என்றான் முத்துராமன் மறுபடியும்.

''யாருடா அது? முத்துராமனுடா, வாடா, வா!'' என்று கொல்லைத் தோட்டப் பக்கத்திலிருந்து மாமா சம்பூர்ணத்தின் குரல் வந்தது.

ஹோல்டாலையும் பெட்டியையும் அங்கேயே வைத்து விட்டுக் கொல்லைப்புறம்

போனான் முத்து. தலையில் முண்டாசு கட்டிக் கொண்டு இரும்பு வாணலியில் மண் காந்து, தோட்டத்து மூலையில் சதுரமாக இருந்த திடத்தில் கொண்டு போய்க் கொட்டிக்கொண்டிருந்தார் அவர்.

''எப்பொழுது வந்தாய்?'' என்று கேட்டுக் கொண்டு அவர் முத்துராமனை அணுகவும், முத்துராமன் அவர் மேனியில் படிந்திருந்த மண் துரும்பை அருவருப்போடு பார்த்தபடி, ''என்ன மாமா இது? ஓர் ஆள் போட்டுக் கொள்ளக் கூடாது?'' என்றான்.

''ஆள் எதற்கடா? ஆள் எதற்கு என்கிறேன்! என் கையைப் பார்! உடம்பைப் பார்! இதற்குக் கொஞ்சமாவது வேலை கொடுக்க வேண்டாமா?'' என்றார் சம்பூர்ணம், கண்டு கண்டாகப் புடைத்து நின்ற சதைகளைக் குலுக்கியபடி.

''நானும் இங்கே இதைத்தான் செய்ய வேண்டும். என் பீர்கள் போயிருக்கிறது!'' என்று சிரித்தான் முத்துராமன்.

''பின் வேலை என்ன இங்கே உனக்கு? படுத்துத் தூங்கினால் சொப்பனம்தான் வரும். வேலை செய்தால் பலன் வருமே!'' என்றார் சம்பூர்ணம்.

* * *

மறு நாள் முதல் முத்துராமனுக்குப் பொழுதை எப்படிப் போக்குவது என்பதோடு மட்டுமல்ல, தன் கலியாண விஷயத்தை எப்படி மாமாவிடம் தெரியப்படுத்துவது என்பதும் பிரச்னையாகி விட்டது!

காலையில் எழுந்ததும் தாழ்வாரத்துக்கு வந்தவன், சர்வாங்காசனத்தில் இருந்த மாமாவைப் பார்த்தான்.

அவன் உள்ளே போய்ப் பல் துலக்கித் தனக்கு மட்டும் தயாராகியிருந்த காப்பியைச் சாப்பிட்டு வெளியே வரும்போதும் அவர் சிரசாசனத்தில் இருந்தார். இதையெல்லாம் பார்க்க வேடிக்கையாக இருந்ததோடு மட்டுமல்ல, சிரிப்பும் வரும் போல் இருந்தது. உடம்பில் ஓடும் ரத்தமெல்லாம் முகத்தில் தேங்கி நிற்க, தூணை நிறுத்தி வைத்த மாதிரி அவர் தலைகீழாக நின்ற நிலையை முத்துராமனால் அதிக நேரம் ரசிக்க முடியவில்லை.

''நீ வேண்டுமானால் போய்க் குளிடா, நான் வரு



வதற்குள்!'' என்றார் சம்பூர்ணம். அந்தப் பச்சைத் தண்ணீரை மேலே விட்டுக் கொள்ளவே பயமாயிருந்தது அவனுக்கு.

''குளித்தாயிற்று?''

''இதோ!'' என்று மடமட வென்த் தண்ணீரை மொண்டு மேலே விட்டுக் கொண்டான் முத்துராமன். துவட்டிக் கொண்டு வெளியே வந்து நின்ற பொழுது, ''இதோ நான் குளித்து விட்டு வருகிறேன். அப்பளம் வாங்க வேண்டும்!'' என்றார்.

அவர்கள் கடைக்குப் போய்த் திரும்பி வரும் வழியில், ''மாமா!'' என்று ஆரம்பித்தான் முத்து. 'சீ! நடு ரோட்டிலா கலியாணப் பேச்சை — அதுவும் காதல் கலியாணப் பேச்சை — ஆரம்பிப்பது!' என்று கைவிட்டு விட்டான்.

வீட்டுக்கு வந்ததும், சம்பூர்ணம் சமையயில் கவனம் செலுத்த ஆரம்பித்ததும், பொத்துக் கொண்டு வந்தது முத்துவுக்கு.

''அந்த மிளகாயை அப்படியே சின்னச் சின்னதாய் நறுக்குடா! தாளித்துக் கொட்ட வேண்டும்!'' என்றார்.

வெண்கலப் பானையை ஏற்றுவதும் 'வாழைக்காயை' இறக்குவதும் அரைப்பதும், கரைப்பதும் தாளித்துக் கொட்டுவதுமாக அவர் என்னென்னவோ செய்து கொண்டிருந்தார்.

''எனக்கு மிளகாயை நறுக்கத் தெரியாது!'' என்றான் முத்துராமன் படீச்சென்று.

''தெரியாது என்றால் எப்படி! தெரிந்து கொள்ள வேண்டாமோ? மிளகாய் நறுக்க என்ன ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடி போய்ப் படிக்கணுமா என்ன!'' என்றார் சம்பூர்ணம். பிறகு அவராகவே மிளகாயை நறுக்கிய போது முத்துவுக்கு அனுதாபம் ஒருபுறமும் ஆத்திரம் ஒருபுறமுமாக வந்தன.

''ஒரு சமையல்காரரை வைத்துக் கொள்ளக் கூடாதோ?'' என்று கேட்டான் முத்து.

''சமையல்காரன் சமைப்பதைச் சமையல்காரன்தான் சாப்பிடணும்!'' என்று புது மொழி புனைந்தார் சம்பூர்ணம்.

பன்னிரண்டு மணிக்குச் சாப்பிட்டவுடன், தபாலில் வந்த பத்திரிகை யொன்றைப் புரட்டி விட்டுப் படுக்கையைத் தட்டிப் போட்டார், ''நீயும் படுத்துக்கொள்ளடா! லீவ் எதற்கு? ரெஸ்ட் எடுத்துக் கொள்ளத் தானே?'' என்றபடியே.

'முத்துராமா! முத்துராமா! மோசம் போனாயே முத்துராமா! அருமைச் சுகந்தியுடன் ஆசையோடு பேச முடியுமா இப்போது உன்னால்? அழகான மவுண்ட்ரோடும் அடையாறும் மயிலையும் சுற்ற முடியுமோ இப்போது உன்னால்? ஒரு மாத லீவை இப்படி அநியாயமாக வீணாக்குகிறாயே நியாயமா, இது நியாயமா முத்துராமா!' என்று அவனுடைய அந்தராத்மா 'டயலாக்' பேசிற்று!

அப்போது முத்துராமனுக்கு இரண்டே இரண்டு ஆசைகள் முளைவிட்டன உள்ளத்தில். ஒன்று: மாமாவிடம், தான் சுகந்தி என்ற பெண்ணை நேசிப்பதைச் சொல்லி, அவளை மணக்க விரும்புவதை எடுத்துக் கூறுவது. இரண்டு: அதைச் சொல்லி முடித்தவுடன் முதுகுக்குப் பின்னால் மூட்டை முடிச்சுக்களைத் தூக்கிக் கொண்டு, அந்தக் கோண வாய்க்கால் பாளையத்திலிருந்து ஓடுவது!

கண்ணைக் கசக்கிக் கொண்டு சம்பூர்ணம் எழுந்திருந்த பொழுது, ''மாமா!'' என்று ஆரம்பித்தான் முத்துராமன்.

''என்ன?'' என்று எழுந்து நின்று கொண்டார் சம்பூர்ணம், படுக்கையைச் சுருட்டி எடுத்துக் கொண்டு.

''என் மேல் உங்களுக்கு நம்பிக்கை உண்டு தானே?''

சம்பூர்ணம் உற்று நோக்கினார் மருமானை. ''இது என்னடா விசித்திரமான கேள்வி! உண்டு, நம்பிக்கை உண்டு!''

''நான் எதுவும் தப்புத் தண்டா செய்ததில்லை. நல்ல வழியில்தான் போகிறதுண்டு என்று தெரியுமில்லையா?''

''என்னடா, முத்துராமா! நீ என்ன சொல்ல வருகிறே இப்போது? நீ யோக்கியமான பிள்ளை. போதுமா?''

''நான் ஒரு பெண்ணை நேசிக்கிறேன், மாமா!''

''வாட்?'' என்று சுருட்டிய படுக்கையைத் தொப்பென்று கீழே போட்டார் சம்பூர்ணம். எங்கே அதை விரித்துப் போட்டு மறுபடியும் தூங்க ஆரம்பித்து விடுவாரோ என்று பயந்து போனான் முத்துராமன்!

''முழுவதும் கேளுங்கள், மாமா!'' என்று விட்ட இடத்தைப் பிடிக்க முயன்றான் முத்து. ''அந்தப் பெண்ணுக்குத் தமக்கை ஒருத்தி இருக்கிறாள். முப்பது வயது ஆகப் போகிறது. இன்னும் கலியாணம் ஆகவில்லை...பார்த்துக் கொண்டே யிருக்கிறார்கள்....''

மாமா வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் முத்துராமனை.

''அந்தப் பெண்ணுக்குக் கலியாணம் ஆனால் தான்....''

''என்ன ஆனால்தான்....?''

''நான் சிநேகம் பண்ணுகிற பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள முடியும், மாமா! உங்களுக்குத் தெரிந்தவர் யாராவது....''

''சட், நான்சென்ஸ்! நிறுத்து!'' என்று சம்பூர்ணம் கூச்சலிட்டார். ''இப்போ பெண்ணோட அக்காவுக்கு மாப்பிள்ளை தேடச்சொல்கிறாயா என்னை? அப்புறம் அந்த மாப்பிள்ளையோட மருமானுக்குப் பெண் தேடச் சொல்லி அனுப்புவாய்!''

''மாமா!'' என்று குழைத்தான் முத்துராமன். ''இல்லை யென்றால் நான்... சுகந்தியை மணக்க முடியாது மாமா!''

''யாரடா அது சுகந்தி?''

''அவள்தான்.... அவள்தான் என் ஸ்வீட் ஹார்ட் மாமா!''

''ஸ்வீட்டாவது! ஹார்ட்டாவது!''

'பிரம்மச்சாரிக் கட்டையான உங்களுக்கு இந்தக் கல்லாக் கட்டையைத் தவிர வேறு என்ன தெரியும்!' என்று மனதக்குள் நினைத்துக் கொண்டான் முத்துராமன்.

''சுகந்தியை நான் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்றால் அவள் தமக்கை சுமுனாவுக்குத் திருமணம் ஆக வேண்டும், மாமா! இல்லை யென்றால் இந்த முத்துராமன் — சுகந்தி மாரேஜ் இம்பாஸிபிள் மாமா, இம்பாஸிபிள்!''

''பிரம்மச்சாரியான என்னிடமா பிள்ளை தேடச் சொல்கிறாய், முத்துராமா? அடே... அடே! கலியாண வயதில் எனக்குத் தெரிந்த ஆண் பிள்ளைகளே இந்த ஊரில் கிடையாதே.


Amul
டாக்டர்கள் நற்சான்றுகூறும்
குழந்தைகளுக்கான அமுல் பாலுணவு
தனியே தொழில் நடத்தும் டாக்டர்கள் அமுல் பாலுணவினைக் குழந்தைகளுக்குக் கொடுத்து, சோதனை நடத்தினர். அவர்கள் தந்த நல்ல தீர்ப்பு: அது குழந்தைகளால் விரும்பி அருந்தப்படுகிறது; ஊட்டமிக்கதாக இருக்கிறது; சுலபமாக ஜீரணிக்கின்றது. "அது நமது அன்னைமார்க்கு ஓர் அருட்கொடை," என்கிறார் ஒரு டாக்டர்.
ஏழு வைட்டமின்கள் சேர்ந்தது, ஏற்றமிகு அமுல் பாலுணவு
Amul
தயாரிப்பாளர்கள்:
கெய்ரா டிஸ்ட்ரிக்ட் கோவாப்பரேடிவ் மில்க் ப்ரொட்யூசர்ஸ் யூனியன் லிட்.
அகில இந்திய விநியோகஸ்தர்கள்: VOLTAS வோல்டாஸ் லிமிடெட்
ASP/ABF-25 TAM

மணச்சிப்பின் பையன் இருக்கிறானே, அவனுக்கு இருபத்திரண்டு வயது; மளிகைக் கடைச் சுப்பய்யரின் பையனுக்குப் பதினாறு வயது; ராமசாமியின் மூத்த மருமானுக்கு ஒன்பது வயது. நீ சொல்கிற பெண்ணுக்கு என்னடா வெள்ளையில் முப்பது வயது ஆகப் போகிறது என்கிறே! ஹூம்....'' என்றார் சம்பூர்ணம்.

''கல்யாணம் பண்ணிக் கொண்டால் சுகந்தியைத்தான் பண்ணிக் கொள்வேன் மாமா! சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்!''

''அவள் அக்காவுக்கு வரன் கிடைக்காவிட்டால்தான் இரண்டாமவளுக்குக் கல்யாணமே கிடையாதே! அப்புறம் நீ சுகந்தியை மணப்பது எப்படி?'' என்று ஒரு பயங்கரக் கேள்வியை வீசினார் சம்பூர்ணம்.

நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது முத்துராமனுக்கு.

''வேறு யாரையுமே தெரியாதா உங்களுக்கு?'' என்று பரம விரக்தியோடு கேட்டான் முத்துராமன். வந்த காரியம்தான் என்ன! எடுத்த விடுமுறை என்ன! அது ஒன்றும் பயனே இல்லாமல் போவதா!

''பார்க்கிறேன்!'' என்றார் சம்பூர்ணம் முத்துராமனைப் பார்த்துக் கொண்டே. முத்துராமனும் அவரையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்!

* * *

ஒரு வாரத்துக்குப் பிறகு சுகந்தியிடமிருந்து கடிதம் வந்த போது முத்துராமன் மறுபடியும் கல்யாணப் பேச்சை எடுத்தான், மாமா சம்பூர்ணத்திடம்.

அவரிடம் சுகந்தியின் அக்காவைப் பற்றித் தெரிவித்த போது முதலில் அக்கறை காட்டவில்லையே தவிர, சீட்டாக் கட்டை கழற்றுகிற நேரம் தவிர, அடுப்படியில் அல்லாடும் நேரம் போக அவரும் சுற்றிக் கொண்டேதான் இருந்தார்.

''சுகந்தி எழுதியிருக்கிறாள் மாமா! வரன் ஏதேனும் கிடைத்ததா என்று கேட்டிருக்கிறாள்!'' என்றான் முத்துராமன்.

''ஏன்டா, வரன் என்ன கோணவாய்க் கால்பாளையத்தில் மட்டும்தானா கிடைக்கும்? இல்லே, கேட்கிறேன்!'' என்றார் சம்பூர்ணம், சாம்பாரைக் கலக்கிக் கொண்டே.

''அவர்கள் எல்லா இடத்திலும் பார்த்து விட்டார்கள் மாமா! முப்பது முதல் நாற்பதுக்குள் மாப்பிள்ளை கிடைக்க வேண்டாமா?''

''முப்பது நாற்பது மாப்பிள்ளையா!''

''வயதைச் சொல்கிறேன் மாமா!'' என்று சிரித்தான் முத்துராமன். அழ வேண்டிய நேரத்தில் சிரிக்கிறோமே என்று எண்ணியபடி!

''அதனால் என்ன இப்பொழுது? இந்தச் சுகந்தியில்லாவிட்டால் வேறு ஒரு சாந்தி, விட்டுத் தள்ளு! வேறு ஒரு நல்ல இடம் பார்ப்போம்!''

''ஐயையோ!'' என்று அலறினான் முத்துராமன் இலக்கணச் சுத்தமாக. ''மணந்தால் சுகந்தியைத்தான் மணப்பேன், இல்லாவிட்டால் மணமே கிடையாது மாமா!''

மாமாவுக்கே மனம் சற்று இரங்கியது போலும். ''சரி, போகட்டும்! இரண்டாமவளுக்கு இப்போது ஜாம் ஜாம் என்று கலியாணம் செய்யட்டும். மூத்தவளுக்கு எப்போது கிடைக்கிறதோ, அப்போது பார்த்துக் கொள்ளட்டுமே!''

''அவள் வீட்டில் கேட்க மாட்டார்களே!''

''நான் எழுதுகிறேன், 'என் மருமான் மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்கும் சொத்துள்ள மருமான் — மாப்பிள்ளையாக வேண்டுமானால் இப்போதே இரண்டாவது பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். இல்லையென்றால் அவன் வேறு யாருக்காவது மாப்பிள்ளையாவதை நீங்களும் உங்கள் பெண்ணும், உங்கள் கண்ணாலும் உங்கள் பெண் கண்ணாலும் பார்க்கலாம்!' என்று. விலாசம் சொல்!''

''வேண்டாம் வேண்டாம்!'' என்று முத்துராமன் எவ்வளவோ மன்றாடியும் அதற்குப் பலன் இருக்கவில்லை. முத்துராமன் விலாசம் கொடுக்கும் வரையில் மாமா சம்பூர்ணம் அவனை விடவில்லை.

மாமா சம்பூர்ணம் சுகந்தியின் தகப்பனாருக்குக் கடிதம் எழுதியதும் அதற்குப் பதில் வந்ததும் முத்துராமனுக்கு என்னவும் உதவக்கூடியதாக இருக்கவில்லை.

''மூத்தவள் இருக்க இரண்டாமவளைக் கொடுத்தால், பிறகு மூத்தவளைக் கொடுக்க மிகவும் கஷ்டப்பட நேரும்....'' என்று எல்லோருக்கும் தெரிந்த உண்மையை எழுதியிருந்தார் சுகந்தியின் தகப்பனார்.

''விட்டுத் தள்ளுடா, முத்துராமா! உனக்கு என்று ஒருத்தி பிறந்திராமலா போயிருப்பாள்? அவள் உன்னைத் தேடி வருவாள்.... பொறுத்திரு!''

''விடவும் முடியாது, தள்ளவும் முடியாது மாமா! சுகந்தியை மணக்க முடியாவிட்டால் கலியாணமே வேண்டாம்! எனக்கு என்று பிறந்தவளைக் குளத்தில் விழுந்து சாகச் சொல்கிறீர்களா?''

மாமாவுக்கு ஏகப்பட்ட வேலைகள். குத்தகைக்கு விடப்பட்ட நிலத்திலிருந்து வரும் பணத்தைக் கணக்கு வைக்கவும், சமையல் செய்யவும் தவ்டான் எடுக்கவுமே அவருக்கு நேரம் போதாதே! மருமான் விரக்தியோடு



''சேனைக் கிழங்கு என்ன விலை?''

''கிலோ நாற்பது பைசா!''

''வானொலி விலைவாசி அறிவிப்பாளர் கிலோ இருபது பைசா என்கிறாரே!''

''அப்ப அறிவிப்பாளரிடமே போய் வாங்கிக் கொள்ளுங்கள்!''

அலைந்து விட்டு இரவு வீடு திரும்பியதும், "சாப்பிட்டாயிற்றா?" என்று விசாரித்தார்.

"இல்லே... சாப்பாடு வேண்டாம்.....!" என்று படுக்கையைத் தட்டிப் போட்டான் முத்துராமன், சத்தியாக்கிரக நோக்கத்துடன்.

"சுகந்திக்குத் தெரிந்தால் வருத்தப்படுவாளடா!" என்று சிரித்தார் சம்பூர்ணம்.

முத்துராமனின் நெஞ்சில் புதிதாகக் குடியேறிய எண்ணம் ஒன்று, மாமா அந்தப் பேச்சைத் தொடர இடம் கொடுக்கவும், பளிச்சென்று வெளியே வந்தது.

"ஒரு சின்ன 'சஜஷன்' மாமா!"

"சொல்லு; கேட்கிறேன்!"

"உங்களுக்கு வயது நாற்பதாகப் போகிறது இல்லையா?"

"நான் என்ன பெண்ணா? குறைத்துச் சொல்ல? நாற்பதாகப் போகிறது."

"உங்களுக்குச் சமைக்க, வீட்டு வேலைகளையெல்லாம் கவனிக்க இதற்கெல்லாம் ஆள் வேண்டாமோ!"

"வேண்டும்தான்! ஆனால் ஆளுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமே!"

"நான் ஒன்று சொல்கிறேன், மாமா! சுகந்தியின் தமக்கை ஜமுனா வீட்டு வேலையெல்லாம் தெரிந்த அடக்க ஒடுக்கமான பெண். அவளை நீங்களே கல்யாணம் செய்து கொண்டால் நம் இரண்டு பேர் பிரச்னையும் தீர்ந்து விடும். நீங்கள் ஜமுனாவுக்குச் சம்பளம் கூடக் கொடுக்க வேண்டாம். என்ன சொல்கிறீர்கள்?" என்றான் முத்துராமன்.

"ஹா!" என்று அலறினார் பிரம்மச்சாரி சம்பூர்ணானந்தர். "வந்து வந்து என் தலையில் ஏறி உட்கார்ந்து விட்டாயா? நீ கோணை வாய்க்கால் பாளையத்துக்கு வந்ததே இந்தக் கல்யாணத்தை ஏற்பாடு செய்யவாடா முத்துராமா? என்ன வார்த்தை பேசிவிட்டாய் நீ?"

"மாமா!" என்று எதிர் அலறல் போட்டான் முத்துராமன். "இதில் என்ன தப்பு என்கிறேன்!"

"என் ஆத்திரத்தைக் கிளப்பாதே, முத்துராமா, என்னுடைய கோபத்தைக் கொட்டிக் கொள்ளாதே!"

"மாமா! நீங்கள் மனசு வைத்தால் என் நெஞ்சில் சந்தோஷம் குடிகொள்ளும் மாமா!"

"நான் கையை வைத்தால் உன் கழுத்து முறிந்து விடும் முத்துராமா!"

"மாமா! யோசனை பண்ணுங்கள். உங்கள் அருமை மருமான் தன் மனசுக்குப் பிடித்தவளை மணக்க வேண்டுமானால், நீங்கள் இந்த உதவிகூடவா செய்யக் கூடாது? மாமா...."

"ராமா!" என்று தலையில் கையை வைத்துக் கொண்டு அசந்து உட்கார்ந்து விட்டார் சம்பூர்ணம்.

* * *

மறு நாள் காலையில் எழுந்ததும், கர்லாக் கட்டை சுழற்றிக் கொண்டிருந்த மாமாவிடம் முத்துராமன் கேட்ட முதல் கேள்வி இது தான்: "என்னுடைய யோசனைக்குப் பதில் எங்கே மாமா?"

"என்னை வற்புறுத்தாதே, முத்துராமா! என்னை வற்புறுத்தாதே!" என்று கூறிவிட்டுத் தண்டால் எடுக்கத் தொடங்கினார் சம்பூர்ணம், வியர்வை ஜொலிக்க.

"நீங்கள் மனசு வைத்தால் என் ஆசை நிறைவேறும் மாமா!"

"நீ இங்கிருந்து போ, முத்து!"

"போகிறேன், மாமா! இன்று ஊருக்குப் போயே விடுகிறேன்!"

சம்பூர்ணம் எத்தனை சமாதானப்படுத்தியும் கேளாமல், அவருடைய கெஞ்சலையும் புறக்கணித்து விட்டு, தன்னுடைய தூது தோல்வியடைந்தது கண்டு மனமுடைந்து சென்னைக்கு வண்டியேறினான் முத்துராமன்.

"அந்தச் செய்தியை மறந்து விட்டு, அக்கா இல்லாத வேறு யாரை வேண்டுமானாலும் பார்த்துச் சொல், ஜாம் ஜாம் என்று கல்யாணம் செய்து வைக்கிறேனடா முத்துராமா!" என்று கடைசியில்கூட அறாத குறையாகக் கேட்டுக் கொண்டார் சம்பூர்ணம். தமக்கிருக்கும் ஒரே ஒரு மருமானின் மனத்தையும் ஒரேயடியாகப் புண்ணாக்கி விட்டோமோ என்று அவரே மிக வருந்தினார்.

சென்னை போய்ச் சேர்ந்ததும், நாலைந்து நாட்கள் சுகந்தியைப் பாராமலே இருந்து விட்டான் முத்துராமன். அவளிடம் என்ன பதில் சொல்வது என்ற நினைவே அதற்குக் காரணம்.

ஒரு வாரம் சும்மாயிருந்து பார்த்தான் முத்துராமன். அவனால் அதற்கு மேலும் பொறுக்க முடியாமல் போகவே, சுகந்தியைப் போனில் அழைத்து, 'பார்க்'கில் சந்திக்கும்படி கூறிவிட்டுப் போனை வைத்தான்.

'பார்க்'கில் அவன் அவளை நெருங்க, நெருங்க, அவன் மனம் வேதனையில் படபடத்தது.

"அக்காவுக்கு ரொம்பப் பிடித்து விட்டது. வீட்டில் எல்லாருமே 'ஓகே' என்று சொல்லி விட்டார்கள்!" என்று அவனைக் கண்டதும் காணாததுமாகச் சுகந்தி சொன்ன பொழுது, முத்துவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"என்ன சுகந்தி?" என்றான் பழைய விரக்தியோடு.

"என்ன சுகந்தியாவது! எத்தனை சாமர்த்தியமாக உங்கள் மாமாவையே எங்கள் ஜமுனாவுக்குக் கணவனாகப் பிடித்து விட்டீர்கள்!" என்று சுகந்தி சொல்லியபடியே, "இன்றைக்குத்தான் உங்கள் மாமாவிடமிருந்து கடிதமும் அவருடைய புகைப்படமும் வந்தன. கல்யாணத்துக்குத் தயாராம்! என் மருமான் சந்தோஷமே என் சந்தோஷம் என்று அவர் எழுதி யிருக்கிறாரே!"

முத்துராமனுக்குத் தலை சுழல்வது போல் இருந்தது. அருகில் இருந்த சுகந்தியைப் பிடித்துக் கொண்டான்.


கோணை வாய்க்கால் பாளையம் மாஜி பிரம்மச்சாரி சம்பூர்ணத்துக்கு ஜமுனாவைவிட ஒரு நல்ல பெண் கிடைக்க முடியுமா என்ன? தன் திருமணத்துக்குக் குறுக்கே நின்ற தடையைத் தீர்த்து வைத்த அந்த மாஜி பிரம்மச்சாரி இருக்கும் கோணை வாய்க்கால் பாளையம் நோக்கி முத்துராமன் தெண்டனிடாத நாளில்லை! எல்லாரும் அவன் மனைவிக்குத் தெண்டனிடுவதாகச் சொல்லிச் சிரிக்கிறார்கள்; சிரித்துவிட்டுப் போகட்டுமே! அதனால் என்ன?

வதந்தியைக் கேட்காதீர்கள்-

நாட்டின் தற்கால ஆபத்தான நிலையில் மக்கள், விரிவான முறையில் செய்திகளையும் சரியான தகவல்களையும் கேட்க ஆவலுடன் இருக்கின்றனர். ஆகாசவாணி, அதிகப்படியான செய்தி அறிக்கைகளையும் விசேஷ நிகழ்ச்சிகளையும் வழங்கி, ஒலிபரப்பு நேரத்தை அதிகமாக்கி அவர்களது அவசரத் தேவையைப் பூர்த்தி செய்துவருகிறது. இந்த ஒலிபரப்புச் செய்திகளைக் கேட்பது மூலம் பீதி உண்டாக்கும் வதந்திகளை நிறுத்துவதுடன் நாட்டிற்குச் சேவை புரிவதற்கான பல வழிகளையும் நீங்கள் கற்றுக்கொள்ள முடியும்!

உங்களுக்கு இப்பொழுது ஒரு ரேடியோ தேவை—ஆம், இப்பொழுதே மிகமிகத் தேவை. என்றும் நட்புள்ள உங்கள் பிலிப்ஸ் வியாபாரி, உங்களுக்கு எப்பொழுதும் சேவை புரியக் காத்திருக்கிறார்.

ஆகாசவாணிச் செய்திகளைக் கேளுங்கள்



ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேளுங்கள், பிறரையும் கேட்கச் செய்யுங்கள்!

ஆகாசவாணியே கேளுங்கள்

அதிகாரபூர்வமான செய்திகள்
தலைவர்களின் பேச்சுக்கள்
விசேஷ நிகழ்ச்சிகள்

பிலிப்ஸ் ரேடியோ

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

JWTPHP 48A

[வீடும் வாழ்வும்—52ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்தான். ஆனால் தலையெடுத்தும் அவனைப் பார்க்கவில்லை. அவனும் யாருடனும் பேசவில்லை. கைகால்களைக் கழுவிக் கொண்டு கலத்தில் போய் உட்கார்ந்தான் சாப்பிட. அவன் மனைவி வந்தாள்; பேசாமல் பரிமாறினாள். இருவருமே ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை.

உணவருந்தி முடிந்த பின் அவன் கை கழுவி விட்டு வந்தபொழுது அவன் மனைவி அவனுக்குப் பின்னாலேயே வந்து, மெதுவான குரலில், ''எந்த வீட்டை வாங்கி யிருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''கோவிந்தராவின் வீட்டை!''

இருவரும் சிறிது நேரம் பேசவில்லை.

''எவ்வளவு ரூபாய்க்கு?''

சிதம்பரத்துக்குத் தூக்கிவாரிப்போட்டது. கடன் விஷயத்தைச் சொல்ல விரும்பவில்லை. ''ஐயாயிரம் ரூபாய் மலிவாக!'' என்றான்.

அவள் அப்புறம் ஒன்றும் பேசவில்லை. கண நேர மௌனத்துக்குப் பின் அவனாகவே, ''நாளை மறுநாள் கிருகப் பிரவேசத்துக்கு நாள் நன்றாக இருக்கிறது!'' என்றான்.

அவள் தலையசைத்து விட்டு உள்ளே சென்று விட்டாள்.

சொந்த வீட்டுக்குப் போய்ப் பதினைந்து நாட்கள் ஓடி விட்டன. மன வருத்தம் குறைந்து வீட்டிலே மீண்டும் குதூகலம் தலையெடுத்தது.

சிதம்பரம் தன் கையாலேயே ஒரு பலகையில் 'குடிக்கூலிக்கு விடப்படும்' என்று எழுதி வாசற்புறத்தில் மாட்டினான். பிறகு வாசலில் இறங்கி நின்று ஒரு முறை கம்பீரமாகப் பார்த்தான். மனத்திலே மகிழ்ச்சியும் கர்வமும் தலைதூக்கின. கற்பனையூற்றுச் சுரந்து உடல் புல்லரித்தது. 'நாளை முதல் வீடு வாடகைக்கு வேண்டுவோர் நம் வீட்டைச் சுற்றிச் சுற்றி வருவார்கள்; வாடகையைக் குறைக்க வேண்டுவார்கள். என்ன ஆனாலும் முப்பது ரூபாய்க்குக் குறைத்து வாடகைக்கு விடக் கூடாது.' இப்படியெல்லாம் திட்டமிட்டான்.

ஒரு வழக்கறிஞருக்கு வீடு பிடித்தது. வாடகையும் தீர்மானமாயிற்று. இரண்டு நாட்களுக்கெல்லாம் வழக்கறிஞர், அவர் மனைவி, இண்டர் படிக்கும் அவர் மகன் மூவரும் அவ் வீட்டில் குடியேறினார்கள்.

ஒரு நாள் கடைத் தெருவுக்குப் போய் மளிகை வாங்கிக் கொண்டு அவன் வீடு திரும்பிக்கொண்டிருந்தான். வழியில் எதேச்சையாகப் பலராமையாவைச் சந்திக்க நேர்ந்தது.

''நீ அதிர்ஷ்டக்காரன் அப்பா! கொள்ளை மலிவாக வீடு வாங்கி விட்டாய்!'' என்று புகழ்ந்தான் அவன்.

''என் அதிர்ஷ்டத்தை நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும்! இதற்காக உன்னிடமே இரண்டாயிரம் கடன் வாங்கும்படியாகிவிட்டதே!'' சிதம்பரம் பல்லைக் காட்டிக்கொண்டு சொன்னான்.

''பெரிய மானாத தொகையைக் கொடுத்து விட்டேனே! அதைப் பற்றிக் கவலைப்படாதேயப்பா! உனக்குச் சௌகரியப்பட்டபொழுது திருப்பிக் கொடு, போதும்!''

சிதம்பரம் நன்றியறிதலோடு அவனைப் பார்த்தான். பிறகு சிறிது நேரம் வேறு ஏதேதோ விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டு இருவரும் பிரிந்தனர்.

நாட்கள் பல சென்றன. ஆனால் அவன் நினைத்தபடி காரியங்கள் எதுவுமே நடைபெறுவதாகத் தோன்றவில்லை. கடன்வாங்கிய விஷயத்தையே இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. மாதம் எழுபது ரூபாய் மிச்சப்படுத்தி விடலாம் எனக் கனவு கண்டு கொண்டிருந்தவனால் இருபத்தைந்து ரூபாய்கூட மிச்சப்படுத்த முடிய வில்லை. செலவோ பிடிபடாமல் ஓடிக் கொண்டிருந்தது. இப்படிப் போனால், கடன் அடைவது எப்படி? குடிவந்த வக்கீலோ சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் சட்டப் பிரச்னைகளை எழுப்பி ஆளை மடக்கினார். இரவு பகல், எந் நேரமும் வம்பு தும்பு என்றால் ஒருவன் என்ன தான் செய்யமுடியும்? அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களோ வக்கீலின் பேச்சுக்குத் தலை யாட்டி, அவன் மீதே குற்றத்தைச் சுமத்தி வந்தார்கள்.

எதிர்த்தாற்போலிருந்த பலசரக்குக் கடைக்காரனோ கறுப் போக்கிரி. பலராமையா வேறு சிதம்பரத்தைப் பலே ஆள் என்று சொல்லிச் சிண்டு தட்டி விட்டுக் கொண்டிருந்தான். பதினையாயிரம் பெறக்கூடிய வீட்டை ஆறாயிரத்துக்கு வாங்கி விட்டதாகக் கூறிச் சிதம்பரத்தின் சாமர்த்தியத்தை வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்தான். அவன் ஆளைக் கண்டால் ஒரு பேச்சு, ஆளைக் காணாவிட்டால் வேறு பேச்சாகப் பேசிக் கொண்டிருந்தது சிதம்பரத்துக்குத் தெரியவே தெரியாது.

தபால்காரர் அன்று அவன் மைத்துனன் எழுதிய கடிதம் ஒன்றைக் கொடுத்துப் போனார். தன் மகனுக்கு எத்தனையோ பெண்கள் வந்து கொண்டிருப்பதாகவும், சிதம்பரம் தன் மனத்தில் உள்ளதைத் தெளிவாக்கி விட்டால், வேறு இடங்களிலாவது சம்பந்தம் செய்து கொள்ளச் சௌகரியமாயிருக்கும் என்றும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான்.

''உன் அண்ணா கடிதம் எழுதியிருக்கிறான். என்ன பதில் எழுதலாம்?'' — பக்கத்தில் நின்று கொண்டிருந்த மனைவியின் பதிலை எதிர்பார்த்தான்.

அவள் மௌனமாக நின்று கொண்டிருந்தாளேயொழியப் பதில் ஏதும் சொல்லவில்லை.

''உன் எண்ணம் என்னவென்று எனக்குத் தெரியும்!'' — சிதம்பரத்துக்குத் திடீரென்று கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''தெரிந்தால் கேட்பானேன்?'' — மனைவியும் எரிச்சலோடு கேட்டாள்.

''என்னவானாலும் உனக்கு இந்த வரன் தான் பிடிக்கிறது. குறைந்தது இரண்டாயிரத்தைந்நூறாவது வரதட்சிணையாகக் கொடுக்க வேண்டி யிருக்குமே!''

அவள் பேசவே யில்லை.

''கடன் வாங்கியாவது இந்தக் கல்யாணத்தை நடத்திவிட வேண்டும், அப்படித் தானே உன் எண்ணம்?''

அதற்கும் அவள் மௌனமே சாதித்தாள்.

''உன் பதில் வேண்டும்!'' — அவன் முகம் சிவந்தது.

ஆனால் அவள் வாய் திறக்கவில்லை.

''என்னடி, ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கிறாய்?'' — சீறி யெழுந்தவன் கை நீட்டி

விட்டாள். அவள் கன்னத்தில் ஒரு பேயறை விழுந்தது.

வீட்டில் அமைதி நிலவியது. சிதம்பரத்துக்கு ஒரே சீற்றம். வீட்டை விட்டு வேகமாக வெளியேறினன். சரியான காரணமேது மின்றி மனைவியின் மீது கைவைத்துவிட்டதில் அவனுக்கே மனத்தை என்னவோ செய்தது. பெண்ணின் திருமணப் பிரச்னை, நிழலாகத் தன்னைப் பின்தொடர்ந்து விழுங்க வருவது போலத் தோன்றியது அவனுக்கு. அவன் துணுக்குற்றான்.

அப்பொழுதுதான் கருங் கும்மென்றிருக்கும் இருட்டில் மின்னல் பளிச்சிடுவதுபோல் அவன் மனத்தில் ஓர் உபாயம் தோன்றியது. தன் மகனுக்கு முதலில் கல்யாணம் செய்து வைத்தால் வரதட்சிணை கிடைக்கும் அல்லவா? அதைக் கொண்டு மகளுக்கு வரதட்சிணை கொடுத்துக் கல்யாணம் செய்துவைத்து விடலாமே! — கண நேரத்தில் அவனுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. ஆனல் கடைசி நேரத்தில் தன் சகோதரிக்குக் கொடுத்திருந்த வாக்குறுதி நினைவுக்கு வந்து அவன் மனத்தை அலைபாய வைத்து விட்டது. தன் பிள்ளை ஆனந்தனுக்குத் தன் சகோதரியின் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதாக அவன் தீர்மானித்திருந்தான். தன் சகோதரிக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கலாமா? இத்தனை பயங்கர அநீதி புரிய அவன் ஆத்மா சம்மதியாது. கால் போன போக்கில் திரிந்தவனுக்குக் காலும் கடுத்து, மனமும் சலிக்கவே வீட்டுக்குத் திரும்பினன். வழியில் திடீரென்று அவனுக்கு இன்னொரு விஷயமும் தோன்றியது. இத்தனை மன வருத்தத்துக்கும் அமைதியின்மைக்கும் காரணம் அவன் இந்த வீட்டை வாங்கியதுதானே? இந்த வீட்டை வாங்காமலே இருந்திருந்தால் இந்தத் தொல்லைகளெல்லாம் ஏற்பட்டிராதல்லவா? அமைதியாக அவன் காலம் ஓடிக் கொண்டிருக்கும் அல்லவா?

அன்று இரவு முழுவதும் சிதம்பரத்துக்குத் தூக்கமே பிடிக்க வில்லை. பொழுது விடியும் நேரத்தில் கண் அயர்ந்தபொழுது, தோளைத் தட்டி யாரோ எழுப்பி விட்டார்கள். திடுக்கிட்டு விழித்தவன் எதிரே மனைவி நின்று கொண்டிருப்பதைக் கண்டான். அவள் கண்களில் நீர் கோத்திருந்தது. முகத்தில் விசனக் குறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

''இந்தாருங்கள், இந்தக் கடிதத்தைப் படியுங்கள்!'' தொண்டை யடைக்கக் கூறிய வண்ணம் அவள் ஒரு கடிதத்தை நீட்டினள். அது ஒரு காதல் கடிதம். ஜானகியைக் காதலிப்பதாகவும் அவளின்றித் தன்னல் உயிர் வாழ முடியாது என்றும் அதில் குறிப்பிட்டிருந்தது.

''யார் இந்தக் கடிதம் எழுதியது?''—சிதம்பரத்தின் கண்களில் இரத்தம் கொதித்தது.

''வக்கீலின் பிள்ளை வேலைக்காரி மூலம் கொடுத்தனுப்பி யிருக்கிறன்.''

கொதித்தெழுந்தவன், வாடகைக்கு விட்டிருக்கும் பகுதிக்குத் தாவி ஓடினன். நேரம் கழித்துக் கண் விழித்த வக்கீல் பல் துலக்கிக் கொண்டே வெளியில் வந்தார்.

''இதோ பாருங்கள்! உங்கள் பிள்ளையாண்டான் செய்திருக்கும் காரியத்தை!''

வக்கீல் ஒரே மூச்சில் கடிதம் முழுவதையும் படித்தார். அவர் முகம் கன்றியது. ஆனால் அடுத்தகணமே தம்மைச் சமாளித்துக் கொண்டு, ''என் பையன் இப்படியெல்லாம் ஒரு நாளும் செய்ய மாட்டானே!'' என்றார்.

''பெற்றோர்கள் அனைவருமே இப்படித்தான் நினைக்கிறார்கள். ஆனால் நடந்திருப்பதை நீங்கள் தெளிவாகப் பார்க்கிறீர்களே!''

''என் பையன் இப்படி ஓர் ஆவல் காட்டினான் என்றால், அதற்கு ஏதாவது ஓர் உட்பொருள் இருக்கவே செய்யும்.''

''உட்பொருள் வேறு என்னவாயிருக்க முடியும்? இளமையின் துடிப்புத்தான்!'' என்று குமுறினான் சிதம்பரம்.

''ஆமாம், அதுதான். ஆனால் யாருக்கு?''

''என்ன?'' சிதம்பரம் களையிழந்து, செயலிழந்து நின்றுவிட்டான்.

''ஆமாம், உங்கள் பெண் அவன் ஆசையை வளர்த்திருப்பாள். அதனால் எங்கள் பையன் இப்படிச் செய்திருப்பான்.''

தன் நினைவு மறந்து வக்கீலைப் பற்றி அவரெதிரிலேயே வாயில் வந்தபடி பேசலானான் சிதம்பரம். அவர் கம்பீரமே உருவாகக் கேட்டுக் கொண்டு நின்றார். அக்கம் பக்கத்தினர் நான்கு பேர் கூடிவிட்டார்கள். வக்கீல் விஸ்தாரமாக அவர்களுக்கு விஷயத்தை எடுத்து விளக்கலானார். வந்தவர்களும் குற்றத்தை ஞானமியின் தலையில் சுமத்தத் தயங்கவில்லை.

மதியிழந்தவன் போல் சிதம்பரம் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் வாய் திறந்து எதுவும் பேச முடியவில்லை. அவனது கோபமும் வெறியும் தணிந்து விட்டன. எஞ்சியிருந்தது அவமானம். அதுவும் பொருத்த அவமானம் மட்டுமே!

வந்த வேகத்தோடு திரும்பினான். மயக்கம் வந்தவனைப் போல் படுக்கையில் போய்ப் படுத்துவிட்டான்.

மணி ஒன்று அடித்தும் அவன் எழுந்திருக்கவில்லை. திடீரென்று யாரோ கால்களைத் தொட்டாற் போலத் தோன்றவே, தன் சிவந்த கண்களைத் திறந்து பார்த்தான். மனைவி அவன் காலைப் பிடித்துக் கொண்டு, ''உங்கள் காலில் விழுந்து கெஞ்சுகிறேன். பெண்ணின் கல்யாணத்துக்கு ஏதாவது வழி செய்யுங்கள்!'' என்று வேண்டினாள்.

அவன் பதில் பேசவில்லை.

''பணத்தைப் பார்க்காதீர்கள். அவள் வாழ்க்கையே வீணாகி விடும்!''

சிதம்பரம் மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். மனைவி சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். பிறகு எழுந்து உள்ளே போய் விட்டாள்.

வக்கீல் இரண்டு நாட்களுக்கெல்லாம் வீட்டைக் காலி செய்துவிட்டு வேறு எங்கோ போய் விட்டார். பழைய போர்டு மீண்டும் வாசலில் மாட்டப்பட்டது.

வேடிக்கை என்னவென்றால், இந்தத் தடவை அந்த வீட்டுக்கு யாருமே குடி வரவில்லை. ஒருவனுக்கு வாடகை அதிகமாகப் படும். இன்னொருவனுக்கு அது 'ஆகி' வந்த வீடாகத் தோன்றாது. எதிரே புன்னை பல சரக்குக் கடைக்காரனின் உதடுகளில் மட்டும், இதைக் காணும் பொழுது ஒரு குரூரப் புன்னகை தெரியும். அவனுக்கும் இந்தச் சம்ப

வங்களுக்கும் ஏதாகிலும் பொருள் பொதிந்த தொடர்பு இருக்குமோ?

பெண்ணின் கல்யாணப் பிரச்னை தீர்ந்த பாடில்லை. அதே போலக் கடனும் தீர்ந்த பாடில்லை. இந்த இரு கவலைகளும் சிதம்பரத்தின் உடல் நிலையைப் பாதிக்கத் தொடங்கின. உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டே இருப்பது என்றாலும் அதற்கும் ஓர் எல்லை உண்டல்லவா? எந்த வீட்டுக்காக அவன் கடன் வாங்கினானோ, அந்த வீட்டையே அந்தக் கடனுக்காக விற்றுவிட வேண்டும் போலத் தோன்றியது. வீட்டை விற்கும் விஷயத்தை நினைத்த பொழுது அவன் மனத்தை என்னவோ தான் செய்தது.

கடைசியில் ஒரு நாள் சிதம்பரம் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பலராமையாவின் வீட்டுக்குப் புறப்படக்கூடப் புறப்பட்டு விட்டான். ஒரு பர்லாங் தூரம் போவதற்குள்ளாகவோ, அவனுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. தடுமாறி அப்படியே தெருவில் விழுந்து விட்டான்.

இரண்டு நாட்கள் எழுந்திருக்கக்கூட முடியவில்லை. தன் பிள்ளையை அனுப்பிப் பலராமையாவை அழைத்து வரச் செய்தான். அரை மணிக்கெல்லாம் அவன் வந்து சேர்ந்தான். கதவைச் சாத்திக் கொண்டு சிதம்பரம் மிகவும் மெதுவான குரலில், ''வீட்டை விற்பதாக இருக்கிறேன். வாங்கிக் கொள்கிறாயா?'' என்று கேட்டான்.

பழைய விஷயங்கள் அவனுக்கு நினைவு வந்தன. வரலாற்று ஏடு புரண்டு கொடுப்பதைத் தன் கண்களாலேயே கண்டான்.

பலராமையா சிறிது நேரம் யோசித்தான். பிறகு, ''உண்மையைக் கேட்டால், எனக்கு வீடே தேவையில்லை. ஆனால், உனக்குப் பணம் தேவையென்றால் என்ன செய்வது? உனக்காக வாங்கிக் கொள்கிறேன்!'' என்றான்.

''நீ ஒரு நாள் இந்த வீடு நல்ல பெறுமானமுள்ள வீடு என்று சொன்னாய். ஆனால் எனக்கு லாபம் கீபம் தேவையில்லை. நான் கொடுத்து வாங்கிய பணத்துக்கே நீ எடுத்துக் கொள். போதும்!'' என்றான் சிதம்பரம்.

உடனே பலராமையாவின் புருவங்கள் சுருங்கின. ''இப்போதெல்லாம் வீட்டுக்கு ஒன்றும் கிராக்கி கிடையாது. விலையெல்லாம் ரொம்ப இறங்கி விட்டது. அதோடு என்னிடம் அத்தனை ரூபாய்தான் ஏது?'' என்றான்.

''என்ன தருவாய்?''

''ஐயாயிரத்துக்கு மேல் ஒரு தம்பிடிகூடத் தர முடியாது.''

சிதம்பரத்தின் உதடுகள் துடித்தன. மெதுவாக முணு முணுத்தான். ''எல்லா விதத்திலும் நான் கஷ்ட நஷ்டப்பட்டுவிட்டேன். என் வயிற்றில் அடிக்காதே, பலராமையா!'' என்று கெஞ்சினான்.

பலராமையா சிறிது நேரம் யோசித்து விட்டு, ''சரி, ஐந்நூறு சேர்த்துத் தருகிறேன். அதற்கு மேல் என்றால் ஆகாது!'' என்றான்.

சிதம்பரம் மீன மேஷம் பார்த்தான். பலராமையா எழுந்து புறப்படத் தயாரானான். சிதம்பரத்தின் மனத்தை வேதனை பிழிந்தெடுத்தது. ''சரி. எனக்குச் சம்மதம். நாளைக்கே எல்லாம் முடிந்துவிட வேண்டும். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''பேஷாக. நாளையே வருகிறேன்!'' என்று கூறிப் பலராமையா எழுந்தான். வழி நெடுக, 'நல்ல வேளை! கடனைக் கேட்டு நோட்டீஸ் அனுப்புவதற்கு முன்பே, நம் காரியம் சுலபமாக முடிந்து விட்டதே!' என்று மகிழ்ச்சியில் மிதந்த வண்ணமே நடந்தான்.

வீட்டில் யாருக்கும் எதுவும் தெரியாது. காதும் காதும் வைத்தாற்போலக் காரியம் முடிந்துவிட்டது. கடன், வட்டி போக அவன் கைக்கு மூவாயிரத்து முந்நூறு ரூபாய்கள் வந்து சேர்ந்தன.

நாளடைவில் சிதம்பரத்தின் உடல் நிலை சீர்கேடுற்றது. புரண்டு படுப்பது கூட அவனுக்குச் சிரமம் தரலாயிற்று. வெகு நாட்களுக்குப் பின் ஒரு நாள் இரவு அவன் தன் மனைவியை அழைத்து,''ஒரு வார்த்தை. கேட்டு விட்டுப் போ!'' என்றான்.

மனைவி அவனெதிரே வந்து நின்றாள்.

''இங்கே, இப்படி உட்காரு!''

அவன் சொன்னபடியே அமர்ந்தாள் அவள்.

''என் படுக்கைக்குக் கீழே ரூபாய் இருக்கிறது.'' இதைச் சொல்வதற்குள்ளாக அவன் நாத் தடுமாறியது.

''இந்த ரூபாய் ஏது?'' படுக்கையின் அடியிலிருந்து அத்தனை ரூபாய்களை எடுத்தவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''வீட்டை விற்றுவிட்டேன்!''

மனைவி புடவைத் தலைப்பினால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். சிதம்பரத்தின் குரல் வர வர அடங்கிக் கொண்டே வந்தது. திக்கித் திக்கி, ''பெண்ணின் கல்யாணச் செலவுக்குக் கண்டுவிடும். வரதட்சிணை தரத் தயார் என்று அவர்களுக்குக் கடிதம் எழுதச் சொல்லிவிடு!'' என்றான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுக்குப் பிரக்ஞை தவறிவிட்டது. பிள்ளை பதறியடித்துக் கொண்டு ஓடிப் போய் டாக்டரை அழைத்து வந்தான். பரிசோதித்து விட்டு, ''இத்தனை நாட்களும் கவனிக்காமல் இருந்து விட்டீர்களே! நிலைமை ரொம்பக் கவலைக்கிடமாக இருக்கிறதே!'' என்றார் அவர்.

அதைக் கேட்டு அந்த வீடே அதிர்ந்து விட்டது.

இரண்டு நாட்கள் எப்படியோ ஓடின. அவன் நிலைமையில் எவ்விதமான மாறுதலும் ஏற்படவில்லை. மூன்றாம் நாள் பொழுது விடியும் நேரத்தில் எல்லோரும் நோயாளியைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு மூன்று சொந்தக்காரர்கள் கூட வந்திருந்தார்கள்.

திடீரென்று சிதம்பரத்துக்கு மூச்சுத் திணறியது. நெஞ்சைக் கடைய ஆரம்பித்தது.

''அம்மா!'' — மூத்த மகள் தாயாரின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மலானாள்.

அதே நேரத்தில் பலராமையாவின் ஆட்கள் இருவர் அங்கே யமகிங்கரர்கள்போல் தோன்றி, ''தூக்கு! வெளியே எடுத்துப் போ! வீட்டுக்குள்ளே செத்துக்கிடந்து வைக்கக் கூடாது!'' என்று கர்ஜித்தனர்.

யாரும் எதும் பேசவில்லை; பேச முடியாமல் திணறினர்.

மூத்தமகன் சுற்றத்தார்களின் உதவியோடு தந்தையை வெளிமுற்றத்துக்கு எடுத்துச் சென்றான். தாயும் மகளும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு புலம்பி அழலாயினர். **ரா. வீ.**

நலம் செய்யும் நண்பன்...



பல ஆண்டுகளுக்கு முன்பே, 1921-ல், டாடா எஃகு ஸ்தாபனத்தார் ஜம்ஷெட்பூரில் ஒரு தொழில் நுட்பக்கல்லூரியைத் துவக்கினர். இந்தியாவின் முதல் எஃகுத் தொழிற்சாலையில் பொறுப்பு மிக்க பதவிகளை வகிப்பதற்கு ஏற்ற தொழிற் கல்வி நிரம்பியவர்களைத் தோற்றுவித்தனர். காலடைவில் தொழிற் சிற்பிகளுக்கும் பலதரப்பட்ட தொழிலாளருக்கும் கூடப் பயிற்சி அளிக்கத் தொடங்கினர்.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஜம்ஷெட்பூர் தொழில் நுட்பக் கல்லூரி, ஹிந்துஸ்தான் ஸ்டீல் நிறுவனத்தின் தேவைகளுக்கு ஏற்ற பல விசேஷப் பயிற்சி வகுப்புகளைத் திட்டமிட்டுத் தொடங்கி நடத்தியது. ரூர்கேலா, பிலாய், மற்றும் துர்காபூர் அரசாங்க எஃகுத் தொழிற்சாலைகளிலிருந்து 1800க்கு மேற்பட்ட தொழில் நிபுணர்கள் ஜம்ஷெட்பூருக்கு வந்து அங்கே கிடைத்த நிறைந்த அனுபவச் செல்வத்தாலும் பிற வசதிகளாலும் மிக்க பலனடைந்துள்ளனர். ஜம்ஷெட்பூரில் தொழில் என்பது வெறும் பிழைப்புக்கு வழி மட்டுமன்று; அது ஒரு தனி வாழ்க்கை முறை.

ஜம்ஷெட்பூர்

எஃகு நகரம்

The Tata Iron and Steel Company Limited JWTTN 5443 A

தேசிய பாதுகாப்பு நிதிக்கு தாராளமாகப் பொருள்களை வழங்குங்கள்



அத்தியாயம் 13

பசிக் கொடுமை

"ரத்தபாசம் அழைக்கிறது! பொங்கி எழுங்கள்! காலவிரயம் செய்வதற்கில்லை நாம். கரத்திலே ஆயுதம் ஏந்துங்கள்! அதோ, உங்களுக்கு முன்னால் உங்கள் மூதாதையர்கள் அரும் பாடுபட்டு அமைத்த பாதை உள்ளது. நாம் அந்தச் சாலை வழியே ஏறு நடை போடுவோம். எதிரி சைன்யத்தினூடே புகுந்து வெட்டிச் சாய்த்து வழி ஏற்படுத்திக் கொண்டு ஊடுருவிச் செல்வோம். அல்லது, கடவுளின் விருப்பம் அதுவானால் வீர சொர்க்கம் அடைவோம்! அப்போது, நமது கடைசித் தூக்கத்தைத் தொடங்குகிற தருணத்தில், நமது படைகளை டில்லிக்கு இட்டுச் செல்லப் போகிற அந்தப் பாதையை முத்தமிடுவோம்! டில்லிக்குச் செல்கிற பாதை சுதந்திரப் பாதை! சலோ தில்லி!"

சுபாஷ் சந்திர போஸின் கனல் தெறிக்கும் இம்மொழிகள் வடிவேலுவின் செவிகளில் சதா ஒலித்துக் கொண்டேயிருந்தன. அவருடைய கம்பீரமான தோற்றமும் அடிக்கடி அவன் மனக் கண்ணெதிரே தென்பட்டு வந்தது. அவ்வாறு அவரை நினைக்கும்போதெல்லாம் ஏதோ ஒருவித மந்திர சக்தியில் கட்டுண்டவன் போல் அவன் புதுத் தெம்பு பெற்று நடந்தான். தனது சகாக்களையும் களைப்பைப் பற்றிச் சிந்திக்காமல் நடக்கச் செய்தான். ராணுவ பலத்தைவிட — படைபலத்தையும், ஆயுத பலத்தையும்விட — நேதாஜியின் பேச்சும் பார்வையும் அளித்த ஆத்மீக பலம்தான் ஐ. என். ஏ. இதுவரை பெற்றுள்ள வெற்றிகளுக்கு அடிப்படைக் காரணம் என்பதை ஒருபோதுகூட மறக்கவில்லை வடிவேலு. அரக்கான் மலைப் பிரதேசக் காடுகளில் ஆரம்பித்த தாக்குதல் படிப்படியாக முன்னேற 1944 மார்ச்சு மாதம் பத்தொன்பதாம் தேதி தாய்நாட்டினுள் அடியெடுத்து வைத்தனர் இந்திய தேசிய ராணுவத்தினர். அதன் பின்னர் ஒரே மாதத்தில் கோஹிமாவைக் கைப்பற்றியதுடன் இம்பாலை நோக்கிச் சென்ற வண்ணம் 'ஜெய்ஹிந்த்' எனக் கோஷமிட்டனர். தாய்த் திருநாட்டில் சுபாஷ்பாபுவின் சுதந்திர இந்திய அரசாங்கம் செயல்பட ஆரம்பித்து விட்டது. ஆஜாத் ஹிந்த் பாங்கு அந்நியர் வெளியேறிய பகுதிகளில் பொருளாதாரத்தைக் கவனிக்கத் தொடங்கியிருந்தது. பாங்கு நோட்டுக்கள் சீக்கிரமே தயாராகிவிடும். தபால் தலைகளும் அச்சாகிக் கொண்டிருந்தன. சர்க்கார் இலாக்காக்கள் நிர்ணயிக்கப்பட்டதுடன் கிராமிய அளவிலும் ஜில்லாவென்ற முறையிலும்

நிர்வாக இயந்திரம் எவ்வாறு இயங்க வேண்டும் என்ற விவரங்களும் வரையறுக்கப்பட்டிருந்தன. ஒரு சிறு பகுதி தான் என்றாலும் அந்தத் துண்டுப் பிரதேசத்தில் பாரத நாடு இன்று உண்மையாகவே பாரத மக்களால் ஆளப்பட்டு வருகிறது! இந்தியா முழுவதுமே இந்நிலை பரவ எவ்வளவு காலமாகப் போகிறது? வெள்ளையன் வெளியேறும் நாள் வெகு தூரத்தில் இல்லை!

இந்த நம்பிக்கையுடன்தான் அந்த ஐ. என். ஏ. வீரர்கள் இம்பால் சமவெளிப் பிரதேசத்தை அடையுமுன்னர் இடையில் இருந்த மலைத்தொடர்களைக் கடந்து கொண்டிருந்தனர். பாலெல் என்கிற ஊரையும் அவ்விடத்திலிருந்த விமானக் கூடத்தையும் கைப்பற்றி விட்டால் பிறகு இம்பால் அவர்களுடைய முஷ்டிப் பிடியில் சிக்கிவிட்டது போலத்தான். பிரிட்டிஷாருக்கு அந்த விமானக் கூடத்தில் வந்திறங்கும் விமானங்களே யுத்த தளவாடங்களையும் உணவையும் கொண்டு வந்து சேர்த்தன. ஆகவே அந்தத் தளத்தைப் பிரிட்டிஷார் பெரிய போராட்டம் நடத்தாமல், எளிதில் விட்டுக் கொடுத்துவிட மாட்டார்கள்.

இதை உத்தேசித்து ஜப்பானியர் கிழக்கிலிருந்து மேற்காக அணிவகுத்துப் போய் விமானக் கூடத்தைப் பிடிக்க யத்தனிக்கும் அதே சமயத்தில் ஐ. என். ஏ. கன்ஜோலிலிருந்து தெற்கு வடக்காகச் சென்று பிரிட்டிஷ் ராணுவத்தினர் மீது பாய வேண்டும் என்று ஏற்பாடாகியிருந்தது. இரு முனைத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் நிச்சயம் பாலெல் வீழ்ந்து விடும் என்று எதிர்பார்த்தார்கள்.

கி. ராஜேந்திரன்



ஆனால் மலைப் பாதையில் நடப்பது என்பது எளிதான காரியமா? சோர்வு ஆட்கொண்ட நேரங்களில் வடிவேலு சுபாஷ் பாபுவை நினைத்துக் கொண்டு உற்சாகம் பெற்று வந்தான். மனச் சோர்வுக்கு இது மருந்தாகுமே ஒழிய உடல் சக்தியற்று உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய மறுத்தால் யார் என்ன செய்ய முடியும்? மூன்று நாட்களாக அரை வயிறு, கால் வயிறு நிரம்புகிற அளவுக்குக் கூட உணவு கிடைக்காத நிலையில் அவர்களை இந்தப் பயணத்தை மேற்கொள்ளுமாறு கூறினர் அதிகாரிகள். மலைப்பாங்கான பிரதேசத்தில் காட்டுப் பாதையில் எதிரி விமானங்களின் குண்டு வீச்சுக்கு ஆளாகாதிருக்க இரவு நேரங்களில் மட்டுமே நடக்க வேண்டியிருக்கும் என்பதையெல்லாம் உணர்ந்திருந்தும் அவற்றைப் பொருட்படுத்தாமல் ஒரு முணுமுணுப்புக் கூட இன்றி அவர்கள் கிளம்பினார்கள். கன்ஜோலிலிருந்து புறப்பட்ட பிறகு அந்தக் கால் வயிற்றுச் சாப்பாட்டுக்குக் கூட ஆபத்து வந்து விட்டது. அறுசுவை விருந்தா கேட்டார்கள் அவர்கள்? ஒரு கவளம் சோறு, கொஞ்சம் பருப்பு, சக்தி கொடுக்க ஒரு வில்லை சர்க்கரை—இவற்றுக்குக் கூடவா பஞ்சம் வந்து விட்டது? ஆகக்கூடி பன்னிரண்டு மைல்களைக் கடக்க அவர்களுக்கு இரண்டு முழு தினங்கள் பிடித்தன.

'இங்கு நாம் அவதிப்படுவது சுபாஷ் பாபுவுக்குத் தெரியுமா? அல்லது இந்திய தேசிய ராணுவத்தினருக்கு ஒழுங்காகச் சாப்பாடு கிடைக்கச் செய்யத் தங்களால் முடியவில்லை என்பதை ஜப்பானியர் அவரிடமிருந்து அறவே மறைத்து விட்டார்களா? ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும். செய்தி அறிந்திருந்தால் அவர் சும்மா இருப்பாரா? எப்படியோ அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான வழி வகைகளை ஆராய்ந்திருக்க மாட்டாரா?' பல வாரங்களுக்கு முன் போர்க்களத்துக்குச் செல்லவிருந்த ராணுவ அதிகாரிகளுக்கு ரயில் நிலையத்தில் விடை கொடுத்து அனுப்பிய சுபாஷ் பாபு கண்களில் நீர் மல்க நின்ற கோலம் வடிவேலுவின் நினைவில் இன்னமும் பசுமையாக இருந்தது. வெளிப் பார்வைக்குக் கடினமான இதயம் படைத்தவராகத் தென்பட்டாலும் உண்மையில் கனிந்த உள்ளம் கொண்டவர்தான் என்பதை அந்த நிகழ்ச்சி அவனுக்கு நன்கு உணர்த்தியது. 'இங்கே அவருடைய அருமைச் சகோதரர்கள் நெஞ்சிலே குண்டு பாயக் குருதி வெள்ளத்தில் பெருமிதத்துடன் சாவதற்குப் பதிலாக, வயிற்றிலே உணவு இறங்காததால் இன்னலுற்று மடியப் போகிறார்கள் என்கிற வெட்கக் கேட்டினை அறிந்தால் அவர் துடிதுடித்திருக்க மாட்டாரா?'

கானகத்தில் அடர்ந்த மரங்களின் கிளைகள் வேய்ந்திருந்த பொத்தல் கூரை வழியாக நில

வொளி ஒழுகிக் கொண்டிருந்தது. மங்கலான அந்த வெளிச்சத்தில் தனக்கு முன்னால் போகும் ஒருவன் கால்கள் பின்னிக் கொள்ளத் தரையில் சாய்வதைக் கண்டான் வடிவேலு. கடுங் கோபம் பொங்கப் பாய்ந்து போய் அவன் உடல் தரையைத் தட்டுமுன்னர் அவனை இரு கரங்களாலும் பற்றித் தாங்கி நிறுத்தினான். ஒருவனை அது போலச் சுருண்டு விழ அனுமதித்தால் மற்றவர்களையும் அந்த வாட்ட நோய் பிடிக்க ஒரு சில நிமிஷங்களே ஆகும் என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்தான் வடிவேலு.

''ஐ. என். ஏ.வுக்கும் சுபாஷ்பாபுவுக்கும் நீ அழிக்க முடியாத அவமானத்தைத் தேடி வைக்க விருந்தாய்'' என்று இரைந்தான் அவன். ''என் உத்தரவின்றி யாரேனும் இனி உட்கார்ந்தால் கடுமையான தண்டனை விதிக்கத் தயங்க மாட்டேன்! உம்! நடங்கள், மேலே!''

பதில் பேசாமல் அவர்கள் உறுதியுடன் அடி மேல் அடியெடுத்து வைத்தார்கள். இக்கட்டான ஒரு நிலையைச் சமாளித்து விட்டோம் என்று தன்னைத் தானே தட்டிக் கொடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை வடிவேலு. சில மணி நேரம் அவர்களைச் சமாதானப் படுத்தி வைக்கலாம்; ஒன்றிரண்டு நாட்கள் அவர்களை அதட்டி உருட்டியும் வேலை வாங்கலாம். பிறகு என்ன செய்வது?

உணவுத் தட்டுப்பாடுதான் பெரிய பிரச்னை என்றால் ஆயுத பலத்தைக் காட்டிலும் பிரசார பலமே அதிக சக்தி வாய்ந்தது எனக் கருதிய ராணுவ தந்திரிகளின் போக்கு வடிவேலுவுக்கு வேதனையைத் தந்தது. பிரிட்டிஷ் சைன்யத்தில் சேர்ந்து, எதிர்த் தரப்பிலிருந்தவாறு தங்களைக் குறி பார்க்கும் இந்தியர்களை ஐ. என். ஏ. வீரர்கள் சகோதரர்களாகப் பாவித்து அறைகூவி அழைத்தால் போதும்; அப்படியே துப்பாக்கியைக் கீழே போட்டு விட்டு ஓடி வந்து இவர்களைக் கட்டி அணைத்துக் கொள்வது நிச்சயம் என்று நிஜமாகவே நம்பினார்கள்! இந்தத் தைரியத்தில்தான் சுதந்திரப் படையினருக்குக் கொடுக்கப்பட்டிருந்த குறைந்த பட்ச ஆயுதங்களிலும் கனமான மார்டர் பீரங்கிகள் போன்றவற்றை மலைப்பாங்கான பகுதிகளில் தூக்கிச் செல்ல அவர்களுக்குத் தெம்பு இல்லை என்பது புரிந்ததும், அதனால் பரவாயில்லை, பயணத்தைத் தொடங்கிய இடத்திலேயே — கன்ஜோவிலேயே — அவற்றை விட்டு விட்டுப் புறப்படலாம்; பீரங்கிகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியமே நேரிடாது என யோசனை கூறினார்கள்; கட்டளையும் பிறப்பித்தார்கள்! இம்பாலை வெற்றி கொள்ளப் போகிறோம் என்ற ஆர்வமும், வெற்றி உறுதி என்கிற அசைக்க முடியாத நம்பிக்கையும் உண்டாக்கிய அவசரம் இது.

பாலெல் விமான கூடத்துக்கு ஐந்து மைல்கள் இப்பால் அவர்கள் சந்தித்தது ராஜ விசுவாசத்துக்கும், வீர தீர பராக்கிரமங்களுக்கும் பேர் போன நேபாளி கூர்க்காக்களை! சகோதரச் சண்டை வேண்டாம் என்ற போது அந்தக் கூர்க்காக்கள் சினம் பொங்கச் சீறினார்கள். அறைகூவி அழைத்த போது அவர்களுடைய துப்பாக்கிமுனைகள் அனலைக் கக்கிப் பதிலிறுத்தன.

சுதந்திரச் சேனை அஞ்சி ஓடவில்லை; செயலற்று நிற்கவும் இல்லை.

''ஜெய் ஹிந்த்!'' என்று இடி ஓசை போன்ற குரலில் வீர முழக்கம் செய்து தன் சகாக்களை ஊக்குவித்தான் வடிவேலு. விடுதலை வீரர்கள் பாய்ந்தார்கள்; உயிரைப் பணயம் வைத்து, 'வெளித் திசை மிலேச்சரின் பாதம் பொறுக்காத பாரத தேவியைக் காத்திடுபவர்களாக, மானமே பெரிதென மதிப்பவர்களாக, ஆண்களாக, வீரியம் மிகுந்த மேன்மையோராக, ஈனமே பொறுத இயல்பினராக' பாரதி பாடிய லட்சிய வீரர்களாகப் போராடினார்கள். ஒரு முறையல்ல, இரு முறையல்ல, ஏழு தடவைகள் தாக்கினார்கள்!

சுதந்திரமென்னும் மோட்சத்தை அடைய நடைபெறும் வேள்வித் தீக்கு ஆஹுதியாகத் தங்களைத் தாங்களே அர்ப்பணித்துக் கொள்ளும் அந்த வீரர்களைப் பார்த்தான் வடிவேலு. அவனைச் சுற்றிலும் நாலா பக்கங்களிலும் நெருப்பில் விழும் விட்டில் பூச்சிகளைப் போலக் கூட்டம் கூட்டமாகச் சிப்பாய்கள் செத்துச் சரிந்தார்கள். காய்ந்த உதடுகளை வறண்டு போன நாவினால் தடவி விட்டுக் கொண்ட வடிவேலுவுக்குக் கண்ணீரும் வற்றி விட்டதாகத் தோன்றியது. தொண்டைக் குழியைத் துயரம் வந்தடைக்கக் கூட்டி விழுங்க உமிழ்நீர் அகப்படவில்லை அவனுக்கு.

கன்ஜோவுக்கே பின்வாங்கும்படி உத்தரவு கிடைத்ததும் எஞ்சியிருந்தவர்களும் நடைப்பிணங்களாகத் திரும்பினார்கள். குற்றுயிரும் கொலையுயிருமாகத் தள்ளாடி நடந்த அவர்கள் மீது வழியில் பிரிட்டிஷாரின் விமானத் தாக்குதல் வேறு நடைபெற்றது.

இந்நிலையில்தான் வடிவேலு சில வீரர்களுடன் கன்ஜோவுக்குச் சில மைல் வடக்கே முன்னணிப் படையாக விழிப்புடன் இருக்குமாறு எச்சரித்து அனுப்பி வைக்கப்பட்டான். அதன்பிறகு அவர்கள் அனுபவித்தது திரும்பத் திரும்ப ஒரே சோகக் கதைதான்.

மழை, பசி, நோய் என்ற மூன்றினையும் தவிர வேறு எதையும் அறியாமல் அவர்கள் காலத்தை ஓட்டினார்கள். மலேரியாக் காய்ச்சல் தங்கள் உடலைத் 'தடக் தடக்'கென்று தூக்கிப் போட நடுங்கியது போதாதென்று மழையில் வேறு 'சொத சொத'வென்று நனைந்து வெட வெடத்தனர். இலைகளையும் புல்லையும் நீரில் கொதிக்க வைத்துச் சாப்பிட்டுச் சலிப்பு உண்டாகக் கானகத்தினுள் பழ வகைகளைத் தேடிப் போய் அலைந்து திரிந்து திக்குத் திசை புரியாமல் தவித்தார்கள். தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ள அவர்களிடம் ரேடியோ டெலிபோன் வசதிகள் ஏதுமில்லை. சித்திரவதைக்குள்ளாகி வாழ்வதை விடச் சாவதே மேல் என்ற எண்ணத்துடன் ஓரிருவர் தற்கொலைக்குத் துணிந்தபிறகு வடிவேலு இனி தாமதிப்பதில் அர்த்தமில்லை என்று கருதி ஒருவனைத் தனியே அழைத்தான். குன்றுகள் சூழ்ந்திருந்த அந்தப் பகுதியிலிருந்து கிளம்பிப் போய் எப்படியோ கன்றோலை அடைந்து அங்குள்ள நிலவரத்தை அறிந்து கொள்வதுடன் இங்குப் போர் அவதியையும் எடுத்துச் சொல்லித் தேவையான உதவியுடன் திரும்புமாறு கூறி அனுப்பி வைத்தான்.



சோர்வு சற்றும் எட்டிப் பாராத, ஊக்கம் குன்றாத மாற்றுப் படையினர் விரைவில் வருவார்கள்; நம்முடைய கடமைகளை அவர்கள் மேற்கொள்வார்கள்; களைத்திருக்கும் நம்மை விடுவிப்பார்கள்; போர்க்களத்திலிருந்து தாற்காலிகமாகவேனும் நாம் விடை பெறலாம்; பர்மாவுக்குச் செல்லலாம்; அங்கே ஓய்வு கிடைக்கும், மருத்துவ வசதி கிடைக்கும், நல்ல உணவு கிடைக்கும் என்றெல்லாம் ஆவலுடன் ஐ. என். ஏ. வீரர்கள் ஆகாசக் கோட்டை கட்டத் தொடங்கினார்கள்.

சென்றவன் திரும்பினான். தனித்து வரும் ஸ்வரூப் தானைக் கண்டதும் அவர்களுக்குப் பகீரென்றிருந்தது.

அருகே ஓடிப் போய், ''என்ன நடந்தது?'' என்று விசாரித்தான் வடிவேலு. பதிலளிக்காமல் வெட்கித் தலை குனிந்து மௌனமாக நின்ற ஸ்வரூப் தாஸை உலுக்கி எடுத்தான். ''என்ன நடந்தது? சொல்லு!'' வாய் திறவாமல் கால் சராய்ப் பைக்குள்ளிருந்து ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து நீட்டினான் ஸ்வரூப் தாஸ். அதனை வாங்கிப் பிரித்துப் படித்தான் வடிவேலு.

சுதந்திரப் படையை விட்டு ஓடிப் போன துரோகி ஒருவன் கையெழுத்திட்டிருந்த துண்டுப் பிரசுரம் அது. பயமேதுமின்றித் தன்னைப் போலவே பிரிட்டிஷ் ராணுவத்தில் மீண்டும் சேர்ந்து விடுமாறு ஐ.என்.ஏ. வீரர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தான் அவன். விமானங்களிலிருந்து மழை போலச் சொரிந்த அத்தகைய துண்டுப் பிரசுரங்கள் பலவற்றைச் சில தினங்களுக்கு முன்னால் ஒன்று சேர்த்துக் கொளுத்தியது வடிவேலுவுக்கு நினைவு வந்தது. 'இந்த வாசகத்தில் மயங்கியா இவன் கட்சி மாறிவிட்டான்?'

நாலாபுறமும் கண்ணோட்டம் செலுத்தினான் வடிவேலு. வியூகம் அமைத்துத் தன் பட்டாளத்தைப் பிரிட்டிஷ் ராணுவத்தினர் எல்லாத் திசைகளிலும் சுற்றி வளைத்திருப்பதைக் கண்டான்.

''ஏன்?'' என்று காரணம் புரியாமல் கேட்டான் அவன். ''எதற்காக உன் தோழர்களைக் காட்டிக் கொடுக்கும் நீசத்தனமான காரியத்தில் இறங்கினாய்?'' பெருகி வரும் கண்ணீரைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு நாத் தழுதழுக்க இவ்வாறு கேட்கையில் வடிவேலுவை நோக்கி அலட்சியமாய் நடந்து வந்து கொண்டிருந்தவன்...ஆம்! மைக்கேல் தான் சந்தேகமேயில்லை.

அவமானம் பிடுங்கித் தின்றது வடிவேலுவுக்கு.

''வடிவேலு! இனிப் போரிடுவதில் பயனில்லை. எல்லோரும் சரணடைந்து விடுங்கள்!'' என்றவாறே ஸ்வரூப் தாஸ் பக்கமாகத் தன் கையிலிருந்த ஒரு பொட்டலத்தை வீசினான் மைக்கேல்.

சற்று முன் ஸ்வரூப்தாஸின் கேவலமான நடத்தைக்குக் காரணமென்னவென்று வினவிய வடிவேலுவுக்கு விடை கிடைத்துவிட்டது! நாய்க்குப் பிஸ்கட் துண்டு ஒன்றினைப் போடுவது போல் அந்த ரொட்டிப் பொட்டலத்தை மைக்கேல் ஸ்வரூப் தாஸ் நின்ற திக்கு நோக்கி விட்டெறிந்ததில் வியப்பில்லை. ஆனால் அந்தச் சிப்பாய் நாயைப் போலவே அதனைத் தாவிப் பிடிப்பதையும், பரபரக்கும் கரங்களால் காகிதத்தைப் பிரிக்கப் பொறுமையின்றிக் கிழித்தெறிவதையும், பேராசையுடன் ரொட்டியைப் பற்களால் கடித்தும் இழுத்தும் பிய்த்தும் பிடுங்கியும், குதறியும், கிளறியும் அவசரம் அவசரமாய் மென்று விழுங்குவதையும் பார்த்தபோது வடிவேலுவுக்குத் தாரைதாரையாகக் கண்ணீர் பெருகியது. மற்றச் சிப்பாய்கள் ஸ்வரூப் தாஸின் துரோகச் செயலுக்காக அவன் மீது கோபப்படவில்லை. அருவை அடைந்தார்கள். அவன் சுவைத்துத் தின்னும் ரொட்டி பொறாமைத் தீயை அவர்களிடத்தில் வளர்த்து விட்டிருந்தது. முகத்தில் ஏக்கம் குடிகொள்ள விழி பிதுங்க ஸ்வரூப் தாஸை அவர்கள் நோக்குவதிலிருந்து இதனைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தது! அப்பப்பா! பசிக் கொடுமை இவ்வளவு பொல்லாததா?

'பட்டாளம் கால்களால் நடக்கவில்லை; வயிற்றினால்தான் நகருகிறது' என்று நெப்போலியன் மொழிந்ததை அன்று புது தில்லியில் தனக்கு மைக்கேல் நினைவூட்டிக் கூறியவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தான் வடிவேலு. மைக்கேலின் அனுபவ வார்த்தைகள் மெய்யாகிவிட்டன. சாப்பாட்டுக்கு வழி செய்யாமல் சண்டை போடச் சொன்னால், யாரால் முடியும்?

''எல்லாருக்கும் வேண்டிய அளவுக்கு ரொட்டியும், சோறும், புலாவும், பழங்களும், குளிர்ந்த பானங்களும், சிகரெட்டுகளும் பாலெல் நகரத்தில் இருக்கின்றன. புறப்படுங்கள், போகலாம்'' என்ற மைக்கேல் திரும்பி நடந்தான். தன்னைத் தவிர மற்ற எல்லாருமே ஆட்டு மந்தை போல அவனைப் பின்பற்றுவதைக் கண்டு கலங்கினான் வடிவேலு. துப்பாக்கியை உயர்த்தி ஒரு முறை கூடச் சுடாமல் வெற்றி கண்டவர்கள் ஐ.என்.ஏ. வீரர்களல்ல; பிரிட்டிஷ் ராணுவத்தினர்தான்!

அவனை இரண்டு பிரிட்டிஷ் இந்தியச் சிப்பாய்கள் அணுகினார்கள். கைதியாக நடக்குமாறு பணித்தார்கள். தயங்கிய போது அவர்களுடைய துப்பாக்கிகளின் அடிவாரங்கள் அவன் முதுகில் பதிந்தன; முன்னுக்குத் தள்ளின.

குன்றின் உச்சிக்கு அவர்கள் ஏறிச் சென்று கொண்டிருந்தார்கள். வளைந்து வளைந்து செல்லும் குறுகலான மலைப் பாதையில் ஒரு திருப்பம். அதன் பின்னால் மைக்கேலும் அவனால் கைதாக்கப்பட்ட மற்றவர்களும் மறைந்து விட்டார்கள். கடைசியாக வந்துகொண்டிருந்த வடிவேலு ஒற்றையடிப் பாதை ஓரத்து அதள பாதாளத்தைப் பார்த்தான். பாறைகளும், கற்களும் சிறு புதர்களுமாயிருந்த அந்தச் சரிவில் இறங்கித் தப்பி ஓடினால் என்ன? அடுத்த கணமே எண்ணத்தைச் செயலாக்கத் துணிந்தான் அவன். இரு புறத்திலும்

வந்த காவலர்கள் சாலையில் திடுமென்று விழுந்தார்கள். தங்களைத் தாக்கியது என்ன என்று அறியாத திகைப்பிலிருந்து மீண்டு அவர்கள் எழுந்திருப்பதற்கு முன்னால் வடிவேலு ஒரே எட்டில் பாதை ஓரத்தை அடைந்து மலைச் சரிவில் இறங்கத் தொடங்கினான். காவலர் கூச்சல்போட்டனர். மைக்கேல் நடந்ததைப் புரிந்துகொண்டு எல்லைக்கு வந்து தன்னைப் பெயர் சொல்லி அழைப்பதும், உடனே நிற்காவிட்டால் சுட்டுவிடுவதாக எச்சரிப்பதும் வடிவேலுவின் செவிகளுக்குத் தெளிவாகக் கேட்டது. அடுத்தாற்போல் 'டுமீல்' என்ற வெடியோசையும் எழுந்தது! ஒலி அடங்கு முன்னரே அவன் சிரத்தில் கோடானு கோடி மின்னல்களின் ஒளி பிரகாசித்தது! பின்னர் வலி பிறந்தது. 'ஐயோ! தன் வலது காலைத் துளைத்துக் குடைவது என்ன? பழுக்கக் காய்ச்சிய கடப்பாறையா?' அந்தக் கால் அவனுடைய உடற் பளுவைத் தாங்கும் திறனிழந்து துவண்டு மடிந்து ஒடிந்தது. மைக்கேலினால் தான் சுடப்பட்டு விழுவதா? கூடவே கூடாது! பல்லைக் கடித்துக் கொண்டு பிடிவாதமாக மேலே சென்றான் வடிவேலு. இரண்டு அடி எடுத்து வைப்பதற்குள் அவன் பாதம் ஊன்றிய ஒரு கல் புரண்டது. அவனையும் உருட்டித் தள்ளியது.

நீண்ட நேரம் கழித்து மெல்ல எழுந்து உட்கார்ந்தான் அவன். கையில் ஏதோ பிசுபிசுத்தது. குனிந்து நோக்கினான். குண்டு பாய்ந்த இடத்திலிருந்து குருதி கொட்டிக் கொண்டிருந்தது. சட்டையைக் கிழித்துக் கட்டுப் போட்டுவிட்டுக் குன்றின் அடிவாரத்திலிருந்து கிளம்பினான். அதே வலது காலில் எலும்பு முறிவும் இருக்க வேண்டுமென்பது நிச்சயமாய்த் தெரிந்தது. மரக் கிளை ஒன்றை ஒடித்து ஊன்றிக் கொண்டு தள்ளாடி, நொண்டி நடந்தான். ஒவ்வொரு தடவை வலது காலை நகர்த்தும்போதும் 'விண் விண்'ணென்று வேதனை தெறித்தது. எப்படியோ ஒற்றையடிப் பாதையைக் கண்டுபிடித்துச் சென்றவன், அன்று முழுவதும் வார்த்தைகளால் வர்ணிக்கக் கூடாத அருவருப்பு மிக்க பயங்கரக் காட்சிகளைப் பார்த்தான். பசியும் நோயும் உண்டாக்கிய பரிதாப விளைவுகளை மட்டுமின்றி, கானகத்தின் புதை சேற்றுக் குழிகளும், ராட்சத அட்டை போன்ற ஜந்துக்களும் ஐ.என்.ஏ. துருப்பினரைப் படாத பாடுபடுத்திக் கொண்டிருப்பதையும் கண்டான். இதனாலெல்லாம் அவன் அடைந்த மனத் துன்பம் உடல் துன்பத்தை அவ்வப்போது சற்றே மறக்கச் செய்தது.

நடையைத் தொடர்ந்தான்.

மரணம் தன்னை ஆட்கொள்ளப் போகிறது என்ற எண்ணம் எழும்போதெல்லாம் வடிவேலு அந்தப் பாதையில் தனக்கெதிரே குமாரி கையில் குழந்தை சிவகாமியுடன் நின்று கை நீட்டித் தன்னை அணைக்கக் காத்திருப்பதாய்க் கற்பனை செய்து கொள்வான். 'இதோ வந்துவிட்டேன் குமாரி! உனக்குக் கொடுத்த வாக்கை மீற மாட்டேன். உயிருடன் உன்னிடம் கண்டிப்பாக வந்து சேர்ந்து விடுவேன்' என்று அடிக்கடி வாய் விட்டுக் கூறினான்.

மூன்று நாட்கள் விடாப் பிடியாக உயிர்ப் போராட்டம் நடத்தியபடியே ஊர்ந்து சென்ற வடிவேலு சமால் என்ற கிராமத்தை அடைந்தான். ஊரின் எல்லையைக் கண்டதும், இனி ஓர் அங்குலம்கூட நகர முடியாதென்ற நிலையில் விதிப் புழுதியில் குறுக்கே விழுந்தான்.

அத்தியாயம் 14

சத்தியத்தின் குரல்

கன்னங்கள் இரண்டிலும் கண்ணீர் வழிந்தோடத் தன் கரங்களைப் பற்றிக் கொண்டு கெஞ்சுகிற நர்ஸ் தாராவை வியப்புடன் பார்த்தார் டாக்டர் இஸோடா. அப்போதுதான் கடுமையான டிஸண்டரி காய்ச்சலிலிருந்து எப்படியோ உயிர் பிழைத்து எழுந்திருந்த அவருக்கு உடல் பலவீனமுற்று இருந்ததால் சாதாரணமாகவே அடிக்கடி எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. அதிலும் இவளுடைய போக்கு அவருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. எனினும் பெண் என்பதால் பொறுத்துக் கொண்டு பதிலிறுத்தார்:

''என்னை எதிர்பார்த்திருக்கும் நோயாளிகளுக்குக் கணக்கு வழக்கில்லை; உதவிக்குப் போதுமான நர்ஸ்களோ டாக்டர்களோ இல்லை; மருந்துகளோ கிடையவே கிடையாது. இதெல்லாம் உனக்குத் தெரியாததா? இந்நிலையில் உபயோகமற்ற ஒரு கேசுக்காக நீ அப்போதே பிடித்து வாதாடுகிறாய்; என் நேரத்தை வீணடிக்கிறாய்!''

''டாக்டர்!'' என்று பதறித் துடித்து அலறி அவர் காலடியில் விழுந்து புழுதி படிந்த பூட்ஸ்களை அணிந்திருந்த அவர் பாதங்களைப் பற்றினாள் தாரா. ''டாக்டர்! தயவுசெய்து உங்கள் வாயால்

'உபயோகமற்ற கேஸ்' என்று சொல்லாதீர்கள்!'' என்று புலம்பினாள்.

இளகிய தம் மனத்தின் மீது கோபப்படுகிறவர் போல் தரையை உதைத்தார் டாக்டர். ''உனக்கு ஒரு இழவும் தெரியமாட்டேனென்கிறது'' என்று இரைந்தார். ''வடிவேலுவுக்குக் காலில் குண்டு பாய்ந்து காயத்தில் புழுதியும் சகதியும் படிந்து கிருமிகள் வளர்ந்ததால் 'காங்கிரேன்' உருவாகி விட்டது. அவனைக் காப்பாற்ற ஒரே வழி தான் உண்டு. உடனடியாக அந்தக் காலை வெட்டி எடுத்துவிட வேண்டும். ஆனால் அதைச் செய்தால் அவன் ஏராளமான இரத்தத்தை இழக்க நேரிடும். ஏற்கனவே பெரும் அளவுக்கு ரத்தம் சிந்தியிருக்கும் அவன் மேலும் ரத்தமிழந்தால் அந்த அதிர்ச்சியிலேயே இறந்து விடுவான். வேறு ரத்தம் அவன் உடலில் செலுத்த நம்மிடம் 'ரத்த பாங்கா' இருக்கிறது? அவனுக்கு வைத்தியம் செய்து பிரயோஜனமில்லை தாரா! அந்த நேரத்தில் அவதிப்படுகின்ற வேறு யாரையேனும் குணப்படுத்த முயலலாமே?''

''டாக்டர்! ரத்த தானம் நான் செய்கிறேன்'' என்றாள் தாரா எழுந்து நின்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு.

''உன் உளறல்களுக்கெல்லாம் எதற்காகப் பதில் கூறிக்கொண்டிருக்கிறேன் என்பது எனக்கே புரியவில்லை'' என்று அலுத்துக் கொண்டார் டாக்டர். பிறகு, ''இதோ பார்! இரண்டு ரத்தங்களும் ஒன்றுடன் ஒன்று சரியாகச் சேராவிட்டால் விபரீதமாகும். அதைச் சோதித்துப் பொருத்தம் பார்க்க இப்போது நேரமுமில்லை; நம்மிடம் அதற்கான சாதனங்களும் இல்லை'' என்றார்.

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம் டாக்டர்! நன்றாகச் சேரக் கூடிய ரத்தங்கள் தான் எங்களுடையது.''

''அதெப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறாய்?''

''நீராவிக்கும் நீருக்கும் வேற்றுமை என்ன டாக்டர்? கங்கையும் யமுனையும் இணை சேராமல் போய் விடுமா? மலரில் அதன் மணம் பொருந்தாமலிருக்குமா?''

''நான் விஞ்ஞான ரீதியான சேர்க்கையைக் கூறுகிறேன்.''

''விஞ்ஞான உண்மைகள் எனக்குத் தெரியாது. ஆனால் உள்ளத்தின் சத்தியக் குரல் என் செவிகளில் ஒலிக்கிறது.''

விசித்திரமான அந்தப் பெண்ணை மேலும் கீழுமாகப் பார்த்தார் டாக்டர். ''எப்படியிருந்தாலும் ஆட்டம் தோல்வி தான். எனவே கையிலிருக்கும் கடைசிச் சீட்டையும் இறக்கிப் பார்ப்பதில் புதிதாக நஷ்டமொன்றும் வந்து விடப் போவதில்லை'' என்றார்.

சோகமே உருவாய் நின்றபோதிலும் தாரா நன்றி தெரிவிக்க மறக்கவில்லை.

''டாக்டர்! இனி அவர் பிழைத்துக் கொள்வாரல்லவா?'' என்று ஒரு கால் இழந்த வடிவேலுவைக் குறித்து வினவினாள் நர்ஸ் தாரா.

அவர் கரம் அவள் தோளில் பதிந்தது. ''நீ கலங்கக் கூடாது. இது போன்ற பெரிய ஆபரேஷன்களைச் செய்வதற்கான குறைந்த பட்ச வசதிகள் கூட யுத்தகளத்தின் மத்தியில் இருக்கும் என்னிடம் இல்லை என்பது உனக்குத் தெரியும். ஏதோ என்னால் முடிந்ததைச் செய்கிறேன். இன்னும் ஒரு நாள், இருபத்தி நாலு மணி நேரத்தை அவன் கடக்க வேண்டும். அதன் பிறகுதான் பயமில்லை என்று தைரியமாகச் சொல்ல முடியும். தாரா! உன் வீரத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால் நிறைய ரத்தத்தைக் கொடுத்திருக்கும் நீ ஓய்வாக இருக்கவேண்டும்; மனத்தை அலட்டிக் கொள்ளக் கூடாது, புரிந்ததா?''

''ஆகட்டும், டாக்டர்!'' என்று கூறிவிட்டு வடிவேலுவின் அருகில் போய் அமர்ந்து கொண்டாள் தாரா.

மெல்ல மெல்ல அவன் கண்ணி மைகள் திறந்து கொண்டன. புரு வங்கள் நெரிய நெற்றி சுருங்கியது; பின் னர் அதரங்களில் புன்னகை நெளிந் தது. உதடுகள் அசைந்தன: ''யார், தாராவா? நீ இங்கே எப்படி வந்தாய்?'' ஈனஸ்வரத்தில் வினவினான் வடிவேலு.

''நான் இந்த ஆஸ்பத்திரியில்தான் நர்ஸாகப் பணியாற்றி வருகிறேன்.''

''ஆஸ்பத்திரியா இது?'' மூங்கில் கழியும் கான்வாஸ் துணியும் சேர்ந்து தயாரான அந்தக் கூடாரத்தை ஒரு முறை வலம் வந்தன அவன் கண்கள்.

''தாரா! நான் செத்துப் போய்க் கொண்டிருக்கிறேன். இல்லையா? எனக்கு உண்மை தெரிய வேண்டும்!''

பொய் சொல்லி அவனை அந்தச் சம யத்தில் ஏமாற்றத் தாராவும் விரும்ப வில்லை. அவன் கரங்களைத் தன் உள்ளங் கையில் ஏந்தி அதில் முகம் புதைத்துக் கொண்டாள். வடிவேலுவின் விரல்கள் ஸ்பரிசித்த கண்ணீர் அவனுக்கு உண் மையை நிதரிசனமாக விளக்கி விட்டது.

''தாரா! நான் இறந்து போவதைப் பற்றிக் கொஞ்சம்கூடக் கவலைப்பட வில்லை! நீயும் அழக் கூடாது. கூபாஞ் பாபு நாம் போர்க்களத்துக்குக் கிளம் பும் போது கூறியதை எண்ணிப் பார்! அதை உன் வாயால் சொல்லு.''

''இப்போதைக்கு நான் உங்களுக்குப் பசியையும் தாகத்தையும் சுக சௌக ரியங்கள் ஏதுமற்ற கடுமையான வாழ்க் கையையும் பலாத்காரத்துக்கு உட்பட்டு அவிவருத்து நடப்பதையும் சாவையும் தவிர வேறு எதையும் அளிக்க முடி யாது. ஆனால் வாழ்விலும் சாவிலும் நீங்கள் என்னைப் பின்தொடர்ந்து வந் தால் நான் உங்களை வெற்றிக்கும் சுதந் திரத்துக்கும் இட்டுச் செல்வேன்!''

அவனுடைய ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக இதனைக் கூறி முடிப்பதற் குள் தாராவுக்கு இதயம் வெடித்துவிடும் போலாகி விட்டது.

வடிவேலுவோ ஆனந்தமடைந்தவ னாக முக மலர்ச்சியுடன், ''தாரா! வாழ்விலும் சாவிலும் என்று அவர் கூறி யதை நாம் மறக்கக் கூடாது! இருபது வருஷங்களுக்கு முன்னால் மரணத் தறு வாயில் கோபிநாத் ஸஹா கூறியதை நான் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன். இன்று நான் சிந்தியிருக்கிற ஒவ்வொரு துளி இரத்தத்திலிருந்தும் ஆயிரமாயிரம் இளம் சிங்கங்கள் இனித் தோன்று வார்கள். போர்முரசு கொட்டும், பொங்கி எழுவார்கள். தாய்த் திருநாட் டின் மண்ணை மிதிக்கத் துணிந்த நீசர் களை விரட்டி அடிக்க விறு கொண்டு பாய்வார்கள். 'ஆயுதம் தாங்கிப் போரிடக் கற்றுக் கொண்டால் மட்டும் போதாது. விரோதியை அடியோடு வெறுக்க நாம் கற்றுக் கொள்ள வேண் டும். அப்போதுதான் பகைமை உணர்ச் சியும், வீரத்தின் எழுச்சியும் நம்மிடம் பெருகும்' என்ற நேதாஜியின் பொன் மொழி வருங்காலத்திலேனும் போருக் குச் செல்வோரின் இதயங்களில் நீங் காத நினைவாகப் பொறிக்கப்பட வேண் டும், தாரா!'' என்றான்.

''நீங்கள் அதிகமாகப் பேச வேண் டாம். பலவீனமாக இருக்கிறீர்கள்'' என்று மனமுருகிக் கேட்டுக் கொண் டாள் தாரா.

மேலும் மேலும் அவளைத் துன் புறுத்துவதிலேயே வடிவேலு கண்ணா யிருந்தானென்று தோன்றியது. ''தாரா! எங்கே, அந்தப் பாடல்! 'ஹம் டில்லி ஜாயேங்கே!' அதைச் சற்றுப் பாடேன்!''

'ஐயோ! பாட்டுப் பாடுகிற தரு ணமா இது? மலாயாவில் என் வாழ்க் கையின் புதியதொரு அத்தியாயம் தொடங்கப் போவதாகச் சொன்னீர் களே, அது இவ்வளவு சீக்கிரமாகவா முடிவடைய வேண்டும்? நீங்கள் இல் லாத வாழ்வு எனக்கு ஏது?' என்று உரக்கக் கதறிப் பகீர் பகீரென்று மண்டையில் அடித்துக் கொள்ள வேண் டும் என்ற எண்ணத்தைக் கஷ்டப்பட்டு உள்ளடக்கிக் கொண்டாள் தாரா. துக் கத்தை வெளிக் காண்பித்துக் கொள்ளா மல் பொத்திப் பொத்தி வைப்பதைவிட ஒருத்தி அடையக் கூடிய கொடூரமான சித்திரவதை வேறு என்ன இருக்கிறது? ஆன போதிலும் அவன் ஆட்டுவித்த படியெல்லாம் ஆடினாள் தாரா. முகம் கோணாமல் பாடவும் செய்தாள். அவன் காதருகே குனிந்து தலையணையில் சிரம் தாழ்த்தி மெல்லிய இனிய குரலில் பாடியதும் அவன் அமைதியுற்றான்.

மறுபடியும் கண் விழித்த போது, தன் நெஞ்சிலே தாரா சிரம் தாழ்த்தி யிருப்பதைத்தான் முதன் முதலாக வடி வேலு கண்டான். அவளுடைய கண்ணீ ரால் நனைந்திருந்த அவன் மார்பு அலுங் காமல் நலுங்காமல் ஒரே சீராக அவள் சுவாசிப்பதை உணர்ந்தது. ஆனால் உறக்கம் அவளை ஆட்கொள்ள வில்லை என்பதும் உறுதியாயிற்று. ஏனெனில் வடிவேலுவுக்குத் தான் பாரமாக இருக்கக் கூடாதென்கிற காரணத்தால் அவள் சிரத்தை அவன் மார்பிலே பதிய விடாமல் கன்னத்தை இலேசாக உரச விடுகிற அளவுக்கே சாய்ந்திருந்தாள். பரந்து விரிந்த விரல்கள் ஐந்து அவன் காதருகே அவனை ஸ்பரிசித்து அந்தப் பேரானந்த அனுபவத்திலே சிலிர்த்து

> துறக்கும் உணர்வு இல்லாவிடில் யாரும் தன் முழு அன்பையும் பிறர்க்கெனவே உழைக்கும் முயற்சியில் பாய்ச்ச முடியாது.
>
> — ஸ்வாமி விவேகாநந்தர்

நடுங்கிக் கொண்டிருந்தன. அவன் தூங்கிக் கொண்டிருக்கிறான் என்கிற தைரியம்தான் அவளுக்கு இத்தனை சுதந்திரத்தையும் உரிமை கொண்டாடுகிற துணிவையும் அளித்திருக்க வேண்டும். இதனை வடிவேலு புரிந்து கொண்டான். அது மட்டுமா? அவள் நல்வாழ்வைக் கருதியே இறுதிவரை அவன் தன் காதல் உணர்ச்சிகளைக் கொன்றுவிட முயன்றும் அது மீண்டும் மீண்டும் உயிர்பெற்று எழுந்து அவனை முழுமையாக ஆட்கொண்டு அல்லல்படுத்துவதையும் இப்போது எளிதில் அவனால் உணரமுடிந்தது.

தான் விழித்துக் கொண்டு விட்டதை அவன் காண்பித்துக் கொள்ளவில்லை. கண்ணீர் பெருக்கியபடி சுற்றிலும் கண்ணோட்டம் செலுத்தினான். இரவு நேரம். ஒரு மூலையில் அரிக்கன் விளக்கொன்று 'மினுக்மினுக்' என்று ஒளிசிந்திக்கொண்டிருந்தது. கூடாரத்தின் திறந்திருந்த ஒரு பகுதி வழியாகப் பார்வை சென்ற போது பிறைச்சந்திரன் தென்பட்டான். அவனிடமிருந்து புறப்பட்ட நிலாக்கிரணம் ஒன்று தாராவின் படிய வாரப்பட்டிருந்த கேசத்தின் ஓரிடத்தைத் தாக்கி ஒளி சிதறியது. அந்த இடத்தை முக்கால் மூடிய கண்களுக்குப் போட்டிருந்த கண்ணீர்த் திரையினூடே பார்த்த போது அந்த ஒளி முன்னிலும் பிரகாசமாய், ஜகஜ்ஜோதியாக, உயிர்ப் பிழம்பாய்ப் புலனாயிற்று. அவன் நெஞ்சின் மீதுபடர்ந்த அந்த ஜீவன் ஒளி மெல்ல எழும்பி அவனுடைய கழுத்தை, முகத்தை அதில் இருக்கும் கண்களை அணுகுவதாகத் தோன்றியது. விழிகளின் வழி புகுந்து சென்று இதயத்தை அடைய முயல்வதாகப் பட்டது.

உதிர்ந்து, காற்றில் மிதந்து, சரிந்து, தவழ்ந்து படியும் பட்டு ரோஜா இதழ்களாகத் தன் உதடுகளில் ஏதோ ஒற்றப்படுவதையும், அதன் பின்னர் ஒரு துடிப்பையும் உணர்ந்தான் அவன். அந்தத் துடிப்பு என்ன கருத்தைத் தன்னிடத்தில் பதிய வைக்க முயலுகிறது? 'ஏற்றுக்கொள்ளுங்கள் என் உயிரை' என்றா?

'தாரா! அன்று குதுப்மினாரில் மனம் மாறியவளாய் உன் உயிரை மாய்த்துக் கொள்ளாமல் இருந்தாயே, அது இன்றைய தினம் எனக்காகப் பிராணத் தியாகம் செய்யத்தானா?

'ஐயோ, தாரா! வேண்டாம்!'

முகத்தை நாடி உயர்ந்த முகம் தாழ்ந்தது. உடலைத் தேடிச் சென்ற உயிர் பிரிந்தது.

வடிவேலுவின் மார்பிலே தாராவின் சிரம் முன்பு இருந்த மாதிரியாகப் பஞ்சு போல் பதியவில்லை; கனத்தது.

''டாக்டர்! டாக்டர்!'' தொண்டை கிழியக் கத்தினான் வடிவேலு.

டாக்டர் இஸோடா கண்களைக் கசக்கிக் கொண்டு வந்து சேர்ந்தார். திரியைப் பெரிதுபடுத்தி அரிக்கன் விளக்கை மேஜை மேல் வைத்து விட்டு மடக்குக் கட்டிலை அடைந்தார். தாராவை அணுகி நாடியைப் பரிசோதித்தார்.

ஒன்றும் புரியாமல் குழம்புபவராகத் தலையசைத்தார்.

''உங்களுக்குப் புரியாது, டாக்டர்!'' என்றான் வடிவேலு நாத் தழுதழுக்க. ''இரத்த தானம் மட்டும் அளிக்கவில்லை தாரா! உயிர்த் தானமே செய்திருக்கிறாள்! டாக்டர்! இனி என்னைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். நான் பிழைத்துக் கொள்வேன்!''

எழுந்து நின்றவர், கேசத்தைக் கோதி விட்டுக்கொண்டு பிறகு, தலை குனிந்து வணக்கம் செலுத்தினார். ''ஆம், விஞ்ஞான உண்மைகளைவிட உள்ளத்தின் சத்தியக் குரல் உயர்ந்ததுதான்!'' என்றார் டாக்டர் இஸோடா.



Printed & Published by K. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

சிறந்த அமிலநாசினியும், மலமிளக்கியும்



நம்பிக்கை

ஒவ்வொரு துறையிலும சில தயாரிப்புகள்தான்
சிறந்த குணமும், பல வருடங்களாக நம்
பிக்கையானதாகவும் பெயர் பெற்று உயர்ந்த இடம
பெற்றிருக்கின்றன. இந்தநம்பிக்கையான தன்
மைதான் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உலகில்
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டும் 75
வருடங்களுக்கு மேலாக சிபார்சு
செய்யப்பட்ட உலகமறிந்த
தாயரிப்பும் ஆகும்.

அதிகாரம் பெற்ற தயாரிப்பாளர்கள் :

டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபாக்சரிங்) பிரைவேட் லிமிடெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



DL. 95-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு